# புலா அம் பாசறை

பதிற்றுப் பத்து - ஏழாம் பத்து



புலவர். கா. கோவிந்தனார்

எழிலகம்

# புலா அம் பாசறை

(பதிற்றுப் பத்து—ஏழாம் பத்து)

ஆசிரியர்
புலவர் கா. கோவிந்தனார் எம். ஏ.,

வெளியீடு
எழிலகம்
46, செல்வ விநாயகர் கோயில் தெரு,
திருவத்திபுரம் (செய்யாறு)
604407

எழிலகம் வெளியீடு எண் : 19

முதற் பதிப்பு : ஏப்ரல், 1997

உரிமை : பதிப்பகத்தாருக்கு

விலை : ரூ. 24-00

ISBN-81-85703-16-7

வெளியீடு : எழிலகம்
46, செல்வ வினாயகர் கோயில் தெரு
திருவத்திபுரம் (செய்யாறு)
திருவண்ணாமலை மாவட்டம்
604407
தொ. எண் : 04182, 22255

சென்னை முகவரி : 17/12, பீட்டர்ஸ் சாலைக் குடியிருப்பு
இராயப்பேட்டை, சென்னை-14.
தொ. எண் : 8528340

அச்சிட்டோர் : வெற்றி-அச்சகம்
91, டாக்டர் பெசன்ட் சாலை,
இராயப்பேட்டை, சென்னை-14.

# பதிப்புரை

சங்கத் தமிழ் நூல்கள் என்ற சிறப்பினுக்கு உரிய பத்துப் பாட்டு, எட்டுத் தொகை, பதினெண் கீழ்க்கணக்கு என்ற தொகை வரிசையுள் நடுவண் வைத்து மதிக்கப் பெறுவது எட்டுத் தொகை. அது, நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறு நூறு, பதிற்றுப் பத்து, பரிபாடல், கலித் தொகை, அக நானூறு, புறநானூறு என்னும் எட்டு நூல்களைக் கொண்டது. அவற்றுள் நான்காவதாகிய பதிற்றுப் பத்து, சேர, சோழ, பாண்டியர் என்று தமிழ்நாடாண்ட மூவேந்தருள், முதற்கண் வைத்து மதிக்கத் தக்க சேரர்குலக் காவலர் பதின்மர் ஒவ்வொருவரையும், பத்துப் பத்துப் பாக்களால் தனித்தனியாக, பத்து புலவர்கள் பாடிய நூறு பாக்களைக் கொண்ட பெரு நூலாகும். அவற்றுள் இரண்டாம் பத்தும், பத்தாம் பத்தும் காணாமற் போகக் கிடைத்திருப்பன, எட்டுப் பத்துக்களே.

அவற்றுள் இரண்டாம் பத்தில், இமயவரம்பன் நெடுஞ் சேரலாதனைக், குமட்டூர் கண்ணனாரும், மூன்றாம் பத்தில், பல்யானைச் செல்கெழு குட்டுவனைப், பாலைக் கௌதம னாரும், நான்காம் பத்தில், களங்காய்க் கண்ணி நார்முடிச் சேரலைக் காப்பியாற்றுக் காப்பியனாரும், ஐந்தாம் பத்தில், செங்குட்டுவனைப், பரணரும், ஆறாம் பத்தில், ஆடுகோட் பாட்டுச் சேரலாதனைக், காக்கைப் பாடினியார் நச்செள்ளையாரும், ஏழாம் பத்தில், செல்வக் கடுங்கோ

வாழியாதனைக், கபிலரும், எட்டாம் பத்தில், தகடூர் எறிந்த பெருஞ்சேரல் இரும்பொறையை, அரிசில்கிழாரும், ஒன்பதாம் பத்தில், குடக்கோ இளஞ்சேரல் இரும்பொறையைப் பெருங்குன்றூர் கிழாரும் பாடியுள்ளனர். கிடைத்துள்ள எட்டுப் பத்துக்களையும், பதிற்றுப் பத்து விளக்கம் என்ற வரிசையில், ஒவ்வொரு, பத்திற்குமான விளக்கங்களைத் தனித்தனி நூலாக எழுதி வரிசைப்படுத்தியுள்ளோம்.

அவற்றுள், இரண்டாம் பத்தின் விளக்கம் "புண் உமிழ் குருதி" என்ற தலைப்பிலும், மூன்றாம் பத்தின் விளக்கம் "அடு நெய் ஆவுதி" என்ற தலைப்பிலும், நான்காம் பத்தின் விளக்கம் "கமழ் குரல் துழாய்" என்ற தலைப்பிலும், ஐந்தாம் பத்தின் விளக்கம் "சுடர் வீ வேங்கை" என்ற தலைப்பிலும், ஆறாம் பத்தின் விளக்கம் "வடு அடும் நுண் அயிர்" என்ற தலைப்பிலும், புலவர் கா. கோவிந்தனார் அவர்களுடைய விளக்கவுரையுடன் வெளியிடப்பட்டுள்ளன.

இருபதாம் நூற்றாண்டு தமிழகத்தின் வரலாற்றில் தனக்கென ஒரு சிறப்பிடத்தைப் பெறத் தக்க வகையில் நல்ல தமிழ் அறிஞராக, வரலாற்றுத் திறனாய்வாளராக, செந்தமிழ்ப் பேச்சாளராக, இலக்கியப் படைப்பாளராக, பாதை மாறாத பகுத்தறிவுவாதியாக, அப்பழுக்கற்ற அரசியல் தலைவராக, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைத் தலைவராக என பல்திறன் படைத்த நற்றமிழ்ப் புலவராக விளங்கியவர், புலவர் கா. கோவிந்தனார் அவர்கள்.

"தமிழுக்கும், தமிழ்ப் புலவர்கட்கும், தமிழ்நாட்டுக்கும், தொண்டாற்றத் தன்னையே அர்ப்பணித்தவர்" என்று பேரறிஞர் அண்ணா அவர்களால் பாராட்டப் பெற்ற பேறு பெற்றவர். பைந்தமிழ்ப் புலவராய் உயர்ந்து, சங்கத் தமிழ் ஏடுகளிலெல்லாம் திளைத்து, வரலாற்றுக் கண் கொண்டு ஆய்ந்து, தொல்காலத் தமிழர் வாழ்வை இக்காலத்தவரும்

தெளிந்திடுமாறு, தேன்தமிழ் சுவடிகளாக வரைந்து வழங்கிய பெருமை உடையவர், புலவர் கா. கோவிந்தனார் அவர்கள்.

புலவர்களுள் பெரும் புலவராய் விளங்கி, திருவண்ணா மலை குன்றக்குடி ஆதீனத்தாரின் புலவரேறு பட்டம், தமிழக அரசின் 'திரு.வி.க. விருது', மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தின் 'தமிழ்ப் பேரவைச் செம்மல்' பட்டம் போன்ற சிறப்புகளைப் பெற்ற புலவர் அவர்களின் தமிழ்ப் பணி பொன் விழா கண்ட பெருமையினையுடையது.

"என் தமிழ்ப் பணி" என்ற தலைப்பில் அவர் எழுதிய கடைசி கட்டுரையில், "என் எழுத்துப் பணி தொடரும். குறள் பற்றி, சங்க இலக்கியங்கள் பற்றி பல தலைப்புகளில் நூல் எழுதக் குறிப்பு எடுத்து வைத்துள்ளேன்.

கல்வி கரையில, கற்பவர் நாள் சில, "காலம் இடம் தந்தால் என் எழுத்துப் பணி தொடரும்" என்று புலவர் தம் தமிழ்ப் பணியைத் தொடர வேண்டும் என்ற தணியா ஆவலை வெளியிட்டுள்ளார். ஆனால், காலம் இடம் தரத் தவறி விட்டதனால், முற்றுப் பெறாத நிலையிலே அவருடைய எழுத்துப் பணி எச்சமாகவே நின்று போயிற்று. காலம் செய்த கொடுமை அது!

தமிழால் உயர்ந்து, தம் தமிழ்ப்பணி மூலம் தமிழுக்கும் உயர்வு தேடித் தரும் வகையில், எழுத்துலகம் நினைவு கொள்ளும் வண்ணம் நூற்பணியாற்றிய புலவர் அவர்கள், 'செத்தும் பொருள் கொடுத்த சீதக்காதி வள்ளல்' போலத் தம் மறைவிற்குப் பின்னும் தமிழுக்கு அணி செய்யும் வகையில் பல இலக்கியப் படைப்புகளைத் தம் கையெழுத்து வடிவிலே அளித்துச் சென்றுள்ளார்.

அந்த எழுத்துச் சுவடிகளையெல்லாம் அச்சு வடிவில் வெளியிடுவதைத் தன் தலையாய கடமையாக எழிலகம் ஏற்று,

வள்ளுவர் சொல்லாட்சி மாட்சி
மனையுறை புறாக்கள்
பெரும் பாணாற்றுப் படை—விளக்கவுரை

ஆகிய இலக்கிய நூல்களையும்,

தமிழக வரலாறு—வரிசை என்ற பெயரில்
தமிழக வரலாறு—சங்க காலம்—அரசர்கள்
தமிழக வரலாறு—கோசர்கள்
தமிழக் வரலாறு—கரிகாற் பெருவளத்தான்

ஆகிய வரலாற்று நூல்களையும் வெளியிட்டுள்ளோம்.

பதிற்றுப் பத்து விளக்கம்—எண்-6 என்ற வரிசையில் பதிற்றுப் பத்து—ஏழாம் பத்து விளக்கவுரையை

புலா அம் பாசறை என்ற தலைப்பில் இந்த நூலைத் தமிழ் கூறு நல்லுலகத்தின் முன் படைக்கிறோம்.

"மன்னா உலகத்து மன்னுதல் குறித்தோர்
தம் புகழ் நிறீஇத் தாம் மாய்ந்தனரே"

என்ற புறநானூற்று மொழிகளுக்கேற்ப, புகழுடம்பு பெற்று விட்ட புலவர் பெருந்தகை, இறவாத புகழுடைய இலக்கியங்கள் பலவற்றைத் தமிழன்னைக்கு அணி செய்ய அளித்து விட்டுச் சென்றுள்ளார். புலவர் அவர்களின் முன்னைய படைப்புகளுக்குத் தமிழகத்துப் பெரியோர்களாகிய தாங்கள் காட்டிய பேரன்பையும், பாராட்டையும், ஆதரவினையும், தொடர்ந்து அளித்திட வேண்டுகிறோம்.

"தமிழுக்குத் தொண்டு செய்வார் சாவதில்லை என்றார் பாவேந்தர். தம் வாழ்நாள் முழுவதும், காலம் கரம்பிடித்து அழைத்துப்போன அந்தக் கடைசி நொடிவரை, தமிழ்ப் பணி ஆற்றிய புலவர் அவர்கள் வாழ்வார்; அவர் தமிழ் உலகிற்கு அளித்துச் சென்றுள்ள இலக்கியச் செல்வங்கள் உள்ளவரை என்றென்றும் நிலைத்து வாழ்வார்; தமிழறிந்தோர் நெஞ்சமெல்லாம் நிலைத்து வாழ்வார் என்பது உறுதி.

எழிலகம் பதிப்பகத்தார்

# முன்னுரை

தமிழ்மொழி இனிமை வாய்ந்தது. 'இனிமையால் இயன்ற இளமகளிர்' என்ற பொருள்பட வந்த "தமிழ் தழீ இய சாயலர்" என்ற தொடரில் வரும் "தமிழ்" என்ற சொல்லே இனிமை எனும் பொருள் தருவதாகும் எனக் கூறித், தமிழ்மொழிக்குப் பெருந் தொண்டு புரிந்துள்ளார் சீவக சிந்தாமணி என்னும் பெருங்காப்பியப் பேராசிரியர் திருத்தக்க தேவர்.

இனிய சொற்களைத் தேர்ந்து, இனிமையாகச் சொல்லாட விரும்பிய தமிழர், தாம் கூற விரும்பும் ஒவ்வொரு கருத்தும் இனிமையுடையவாதல் வேண்டும்; இனிக்கும் வகையில் உரைக்கப் பெறுதல் வேண்டும் எனவும் விரும்பினார்கள். அவ்வாறே உரைத்தும் வந்தார்கள்; செந்தமிழ் இலக்கியங்கள் அனைத்தும் இச்சிறப்புடையவாகும்.

"உள்ளத்தில் உண்மை ஒளி உண்டாயின் வாக்கினிலே ஒளி உண்டாகும்" என்றார் ஒரு பெரியார். தமிழர் வாக்கு இனிமை வாய்ந்தது என்றால், அவர் உள்ளமும், அவ்வுள்ளம் உந்த உளவாகும் அவர் செயல்பாடும், இனிமை வாய்ந்தனவே ஆகும். இது, உண்மை என்பதைப் பழந் தமிழ் இலக்கியங்கள் காட்டும் படப்பிடிப்பினைக் காணும் வாய்ப்பினைப் பெற்றோர் அனைவரும் உணர்வர்.

பலநூறு ஆண்டுகளுக்கு முன்னர் வாழ்ந்த நம் பழம் பெரும் மூதாதையர் தம் பண்பாட்டுப் பெருமையினை இன்றையத் தமிழரும், பிறரும் அறிந்து கொள்ளுதல் வேண்டும் என்ற அவாவின் விளைவாக, அக்காலப் புலவர் பெருமக்கள், ஆயிரமாயிரம் பாக்களைப் பாடிச் சென்றார் கள். ஆனால், அவர்கள் பாடிச் சென்ற அப்பாக்களின் களஞ்சியத்தைக் காக்கத் தவறிவிட்டார்கள், விழிப்புணர்வு அற்ற சிலர் என்றாலும், நம் மூதாதையருள் விழிப்புணர் வோடு இருந்தவர்கள், அழிந்தன போக அழியாதிருந்த அப்பழம்பாக்களை எல்லாம், அரிதின் முயன்று தேடிக் கொண்டார்கள்.

அவ்வாறு தேடிப் பெற்ற அப்பாக்களை ஊன்றிப் பயின்ற புலமைசால் பெரியோர்கள் பலரும் ஒன்று கூடி இருந்து, இப்பாக்களில் பொதிந்து கிடக்கும் பொருள் வளம். அப்பாக்களின் அடி அளவு ஆகியவற்றை அளவு கோலாகக் கொண்டு, அப்பாக்களையெல்லாம், பத்துப் பாட்டு, எட்டுத் தொகை, பதினெண் கீழ்க் கணக்கு என்ற தலைப்புகளில் தொகுத்து நமக்கு அளித்துச் சென்றனர். அவ்வாறு தொகுக்கப் பெற்ற தொகை நூல்களில், இரண்டாவது வரிசையில் நிற்பதான எட்டுத் தொகை நூல்களில் இடம் பெற்றிருக்கும் பாக்களின் நலங்களை, நம் கால மக்களும் உணர்ந்து மகிழ வேண்டும் என்ற அவாவினால் உந்தப்பட்ட காரணத்தால் அவ்வரிசையுள், முதற்கண் வைத்துப் பெருமை செய்யப் பெற்றதான நற்றிணையினை, "**நற்றிணை விருந்து**" என்ற தலைப்பிலும், இரண்டாம் நிலை பெற்ற தாயினும், "நல்ல குறுந்தொகை" எனச் சிறப்பிக்கப் பெற்றதான குறுந்தொகையினைக் "**குறுந் தொகைக் கோவை**" என்ற தலைப்பிலும் ஆறாவது இடம் அளிக்கப் பெற்றதாயினும் "கற்றறிந்தோர் போற்றும் கலி" என்ற சிறப்பினைப் பெற்றதான கலித்தொகையினைப் "**பாலைச் செல்வி**", "**குறிஞ்சிக் குமரி**", "**மருத நில மங்கை**"

"முல்லைக் கொடி", "நெய்தற் கன்னி" என்ற ஐந்து தலைப்புக்களிலும், முப்பது ஆண்டுகளுக்கு முன்பே விளக்கி வெளியிட்டேன்.

பழந்தமிழர் தொகுத்தளித்த வரிசையிலேயே அவ் வெட்டுத் தொகை நூல் விளக்கங்களையும் அளிக்க வேண்டும் என உள்ளம் விரும்பினாலும், சில பல காரணங் களால், அவ்வரிசை வழிச் செல்ல இயலாமல் போய்விட்டது. இப்போது, அவ்வரிசையுள் நான்காவதாக நிற்பதும், "ஒத்த பதிற்றுப் பத்து" என்ற பாராட்டினைப் பெற்றிருப்பது மாகிய பதிற்றுப் பத்தின் விளக்கத்தினை அளிக்க எண்ணினேன்.

ஒவ்வொரு தொகுப்பிலும் பத்துப் பத்துப் பாக்களைக் கொண்ட, பதிற்றுப்பத்தில், முதல் தொகுப்பும், பத்தாம் தொகுப்பும் கிடைத்தில; ஆகவே எஞ்சியுள்ள எட்டுத் தொகுப்புகளின் விளக்கங்களையே அளிக்க முடிந்தது. அவ்வாறு அளிக்கும் நிலையில், ஒவ்வொரு பத்திலும் உள்ள, பத்துப் பத்துப் பாக்களையும் பயின்று, ஒவ்வொரு பாவிலும், அப்பாவிற்குப் பெருமை சேர்க்கும் சிறு தொடரை அப் பாட்டின் தலைப்பாகக் கொடுத்து பெருமை செய்துள்ளார் கள், நம் பண்டைத் தமிழ்ச் சான்றோர்.

அவ்வாறு, அவர்கள் சூட்டியிருக்கும் பெயர்களில் ஒவ் வொரு பத்தின் விளக்கத்திற்கு, அப்பத்தின் முதற் பாட் டிற்குச் சூட்டியிருக்கும் பெயரையே, அப்பத்துப் பாட்டின் விளக்கத்திற்குப் பெயர் சூட்டும் முறையினைப் பின்பற்றி, இரண்டாம் பத்தின் விளக்கத்திற்கு "புண் உமிழ் குருதி" என்ற பெயரையும், மூன்றாம் பத்தின் விளக்கத்திற்கு "அடு நெய் ஆவுதி" என்ற பெயரையும், நான்காம் பத்தின் விளக்கத்திற்கு "கமழ் குரல் துழாய்" என்ற பெயரையும், ஐந்தாம் பத்தின் விளக்கத்திற்கு "சுடர் வீ வேங்கை" என்ற

பெயரையும், ஆறாம் பத்தின் விளக்கத்திற்கு "வடு அடும் நுண் அயிர்" என்ற பெயரையும் சூட்டியிருந்தேன். அதே முறையைப் பின்பற்றி இந்த ஏழாம் பத்தின் விளக்கத்திற்கு "புலா அம் பாசறை" என்ற பெயரைச் சூட்டியுள்ளேன்.

என் முன்னைய படைப்புகளுக்குத், தமிழகத்துப் பெரியோர்களாகிய தாங்கள் காட்டிய பேரன்பையும் பாராட்டையும் இவ்வரிசைக்கும் வழங்கி, மேலும் தமிழ்ப் பணி ஆற்றும் துடிப்புணர்ச்சி, என் உள்ளத்தில் மீண்டும் துளிர்விடத், துணை நிற்க வேண்டுகிறேன்.

கா. கோவிந்தன்

# பொருளடக்கம்


| எண் | | பக்க எண் |
|---|---|---|
| | பதிப்புரை | 3 |
| | முன்னுரை | 7 |
| | பாடிய புலவர் | 12 |
| | பாட்டுடைத் தலைவன் | 15 |
| | பதிகம் | 18 |
| 1. | புலாஅம் பாசறை | 19 |
| 2. | வரை போல் இஞ்சி | 32 |
| 3. | அருவி ஆம்பல் | 43 |
| 4. | உரைசால் வேள்வி | 54 |
| 5. | நாண் மகிழ் இருக்கை | 68 |
| 6. | புதல் சூழ் பறவை | 80 |
| 7. | வெண் போழ்க் கண்ணி | 88 |
| 8. | ஏம வாழ்க்கை | 96 |
| 9. | மண் கெழு ஞாலம் | 103 |
| 10. | பறைக் குரல் அருவி | 110 |
| | இணைப்பு | 121 |


பதிற்றுப்பத்து — ஏழாம் பத்து

# பாடிய புலவர் கபிலர்

உலக உயர்தனிச் செம்மொழிகளுள் தலைமையானது தமிழ்மொழி என்ற பெருமையை பெற்றுத் தந்தவர் மதுரையில் சங்கம் வைத்துத் தமிழ்வளர்த்தபுலவர்பெருமக்களாவர், அப்புலவர் பெருமக்களுள் முதற்கண் வைத்து எண்ணப்படும் பெருமை மிக்க முதுபெரும் புலவர்கள் நக்கீரர், கபிலர்• பரணர் என்ற மூவராவர். மூவருள் ஒருவர் என்ற பெயரினை உடைய கபிலரின் பிறப்பு வளர்ப்பு பற்றி தெளிவான செய்திகள் நமக்குத் தெரியவில்லை. அவர் வாழ்க்கை என நாம் அறியக்கூடியன எல்லாம் அரசர் சிலரைச் சார்ந்து பாடல் பாடிப் பரிசில் பெற்று வாழ்ந்த சில நிகழ்ச்சிகளேயாம்.

கபிலர் காலத்தில் மலையமானாட்டை ஆண்டு வந்தவன் மலையமான் திருமுடிக்காரி என்பவன். கொடையாலும் கொற்றத்தாலும் சிறந்த காரியின் புகழ் கேட்டார் கபிலர், அவன் அரசவைக்குச் சென்று அவனைப் பாடினார்• புலவர்களின் வரிசை அறியாமல் அவையில் பாடிய புலவர்கள் அனைவருக்கும் ஒரே அளவான பரிசிலை அவன் தருவது கண்டு மனம் வருந்தினார். வரிசை அறியா அவன் செயல் தமக்கு மட்டுமேயல்லாமல் தம்மைப் போலவே வரிசைக்கு வருந்தும் பரிசிலராகிய பெரும் புலவர் அனைவர்க்குமே இழிவாகுமே என்று கருதினார். உடனே புலவர் காரியை நெருங்கி,

"ஒரு திசை ஒருவனை உள்ளி...

என்ற பாடலின் மூலம் அவன் தவறை அவனுக்கு உணர்த்தினார்.

ஆரிய அரசர்கள் அக்காலத்தில் தமிழர்களின் தகுதி அறியாமல் இருந்தனர். ஆரிய அரசன் பிரகத்தனுக்கு தமிழின் அருமையை அறிவிக்க குறிஞ்சிப் பாட்டு என்ற நீண்ட பாடலைப் பாடிக் காட்டினார். குறிஞ்சிக்குக் கபிலன் என்ற சிறப்பையும் பெற்றார்.

பேகன், விச்சிக்கோன், இருங்கோவேள், செல்வக் கடுங்கோ வாழியாதன் முதலியோர் பால் கபிலர் நேரில் சென்று பாடிப் பழகியுள்ளார். பாரிக்கும் கபிலருக்கும் இடையில் இருந்த நட்பு புலவர்கள் பாராட்டும் சிறப்புடையது.

பாரியின் கொடை வளத்தைக் கண்டு பழகிய கபிலர் கொடைத்திறத்தில் அவனுக்கு நிகர் அவனே. இவ்வுலகில் எவரும் அவனுக்கு நிகராகார் என்பதை உணர்ந்து அவன் புகழை ஓர் அழகிய சிறு செய்யுளால் பாராட்டு வாராயினர்.

"பாரி பாரி என்று பல ஏத்தி
ஒருவற் புகழ்வர் செந்நாப் புலவர்:
பாரி ஒருவனும் அல்லன்;
மாரியும் உண்டு ஈண்டு உலகு புரப்பதுவே."

-புறம் 107

சொல்லால் இகழ்வது போல் காட்டிப் பொருளால் புகழ் தோன்றப் பாடிய பெரும் புலமை உடையவர் கபிலர். பாரி மறைந்த பிறகும் அவன் மகளிரைக் காக்கும் கடமையை மேற்கொண்டு நட்புக்கு எடுத்துக்காட்டாக விளங்கியவர் கபிலர். செல்வக் கடுங்கோ வாழியாதனின் சிறப்பை அறிந்து அவனுடன் தங்கியிருந்து அவன் பெருமை

களை பாடி மகிழ்ந்தார் கபிலர். கபிலருக்கு பெரும் பரிசில் பொருட்களை அளித்து சிறப்பு செய்தான் செல்வக் கடுங்கோ. கபிலரை அழைத்துக் கொண்டு 'நன்றா' என்ற குன்றின் மீது ஏறி நின்றான். அங்கிருந்து காண்பார் கண்ணிற்குப் புல்படும் நாடுகள் எவ்வளவுண்டோ அவ்வளவையும் அவர்க்கு அளித்தான். பிறபுலவர்கள் பாராட்டும் சிறப்புடையவர் கபிலர்.

"செறுத்த செய்யுள் செய் செந்நாவின் வெறுத்த கேள்வி விளங்கு புகழ்க் கபிலன்" என இளங்கீரனார் அவரைப் பாராட்டுகிறார். நப்பசலையார் இவரை,

"புலனழுக்கற்ற அந்தணாளன்" எனவும்,

"பொய்யா நாவில் கபிலன்' எனவும்

பாராட்டுகிறார் என்றால் அவர்.

பெருமைதான் என்னே!

# பாட்டுடைத் தலைவன்

தமிழ்நாடு மிகப் பழைய காலமாகவே, சேர, சோழ, பாண்டியர் என்ற மூவேந்தர் ஆட்சிக்கு உட்பட்டிருந்தது. செந்தமிழ் வேந்தர் மூவேந்தருள், சேரர் சிறந்தவராவர் என்ற கொள்கை, பழங்கால மக்களிடையேயும், அக்காலப் புலவர்களிடையேயும் நிலவியிருந்தது. சேரர், சோழர், பாண்டியர் என, அவர்கள் வழக்கின் கண் முதற்கண் வைத்து வழங்கப் பெறுதலேபோல், "போந்தை, வேம்பே, ஆர் என வரூஉம் மாபெருந்தானையர்" (தொல், பொருள். புறத்திணை : 5) என அவர்கள் மாலை, முதற்கண் வைத்துச் செய்யுட்கண் வழங்கப் பெறுதல் அறிக.

தகடூர் எறிந்த பெருஞ்சேரல் இரும்பொறை எனும் தலைமகனைப் பெற்ற பெறற்கரும் பேறுடையான் செல்வக் கடுங்கோ வாழியாதன். செல்வக் கடுங்கோவைப் பாடிய புலவர்கள் கபிலரும், குன்றுகண்பாலியாதனாரு மாவர். எண்ணியது எண்ணியாங்கு முடிக்கும் திண்ணிய உள்ளம் உடையவன் அவன். உலக அரசர் எல்லாம் தன் ஏவல் வழி நிற்க வேண்டும். உலகனைத்தும் தன் ஒரு குடைக்கீழ் வரல் வேண்டும் என விரும்பினான். விரும்பிய தோடு நின்றானல்லன். அதைச் செயல்படுத்தியும் காட்டினான். இச்சிறப்பைப் பாராட்டிப் புகழ்கின்றார், கபிலர்.

"வையங் காவலர் வழி மொழிந்து ஒழுகப்
போகம் வேண்டிப் பொதுச் சொல் பொறா அது
ஒடுங்கா உள்ளத்து : ஓம்பா ஈகைக்
கடந்தடு தானைச் சேரலாதன்"

புறம் : 8

கடுங்கோ வாழியாதன் ஒரு குணக்குன்று: பாராட்டற்குரிய பண்பு பல நிறைந்தவன் அவன்; பகைவரைப் பணிந்தறியாம் பேராற்றல் உடையனாய செல்வக்கடுங்கோ. பார்ப்பார் போலும் பெரியாரைப் பணிந்தொழுகும் பண்புடையனாவன்; அஞ்சாமை நிறைந்தது அவன் உள்ளம் ஆயினும் அஞ்சுவது அஞ்சாமை பேதைமை என்பதை அறிந்தவனாதலின், நண்பர் அறிவுரை கண்டு அஞ்சும் அறிநெறியுடையனாவன். இப்பண்புகளைப் பாராட்டுகிறார் கபிலர்.

"பார்ப்பார்க்கல்லது பணிபு அறியலையே;
பனியா உள்ளமொடு அணிவரக் கெழீஇ
நட்டோர்க்கல்லது கண்ணஞ்சலையே"

......................

பதிற்றுப் : 63

செல்வக் கடுங்கோ சிறந்த கொடையாளனாவன்; பாரியின் பெருநண்பராய கபிலரே, அவன் கொடைச் சிறப்பைப் பாராட்டுகின்றார். அந்தணர்க்கு அருங்கலங்களை அளிக்குங்கால் அப்பொருளோடு வார்த்த நீர் ஓடியே அவன் அரண்மனை முற்றம் சேறுபடும், தன் புகழ் பாடி வரும் கூத்தர் முதலியோர்க்கு, தன் ஏவலரை விளித்து, 'அவர்க்குக் குதிரைகளையும், தேர்களையும் அணி பல அணிவித்து அளித்து அனுப்புக' என ஆணையிடும் அருள் உள்ளம் உடையவன் எனப் பலப்பல கூறிப் பாராட்டுவாராயின் அவன் கொடைப் பெருமையினைக் கூறவும் ஒண்ணுமோ!

இவ்வாறு, தன் கொற்றம், குணம், கொடை ஆகிய பண்பெலாம் தோன்றப் பாராட்டிய புலவர் பாக்களைக் கேட்டு மகிழ்ந்தான், செல்வக் கடுங்கோ; சிறு பரிசாக நூறாயிரம் காணம் அளித்தான்; அம்மட்டோடு நின்றானல்லன்; கபிலரையும் உடன்கொண்டு நன்றா எனும் குன்றின் மீது ஏறி நின்றான்; ஆண்டிருந்து காண்பார் கண்ணிற்குப் புலப்படும் நாடுகள் எவ்வளவுண்டோ அவ்வளவையும் அவர்க்கே அளித்தான். என்னே அவன் கொடைக் குணம்!

# பதிகம்

மடியா வுள்ளமொடு மாற்றோர்ப் பிணித்த
நெடு நுண் கேள்வி யந்துவற் கொருதந்தை
ஈன்றமகள் பொறையன் பெருந்தேவி யீன்ற மகன்
நாடுபதிபடுத்து நண்ணா ரோட்டி
வெருவரு தானை கொடுசெருப்பல கடந்து
ஏத்தல் சான்ற விடனுடை வேள்வி
ஆக்கிய பொழுதி னறத்துறை போகி.
மாய வண்ணனை மன னுறப் பெற்றவற்
கோத்திர நெல்லி னொகந்தூ ரீத்துப்
புரோசு மயக்கி
மல்ல லுள்ளமொடு மாசற விளங்கிய
செல்வக் கடுங்கோ வாழி யாதனைக்

*கபிலர் பாடினார் பத்துப் பாட்டு. அவைதாம், புலா அம் பாசறை, வரை போலிஞ்சி, அருவியாம்பல், உரைசால் வேள்வி, நாண் மகிழிருக்கை, புதல் சூழ் பறவை, வெண் போழ்க்கண்ணி, ஏம வாழ்க்கை, மண்கெழு ஞாலம், பறைக் குரலருவி, இவை பாட்டின் பதிகம்.*

*பாடிப் பெற்ற பரிசில்: சிறு புறமென நூறாயிரங் காணங்கொடுத்து, நன்றாவென்னும் குன்றேறி நின்று தன் கண்ணிற்கண்ட நாடெல்லாம் காட்டிக் கொடுத்தான். அக்கோ, செல்வக் கடுங்கோ வாழியாதன் இருபத்தை யாண்டு வீற்றிருந்தான்.*

# 1. புலா அம் பாசறை

ஒரு கொற்றவனை, ஒரு கொடை வள்ளலைக் கபிலர், பாடிப் பாராட்டிவிட்டால், அதற்குமேல் அவனைப், பிற புலவர் எவரும் பாராட்டுவது இயலாது. அவன் கொற்றம் கொடைப் பெருமைகளை, அத்துணை முழுமையாகப் பாராட்டிவிடும் பெரும் புலவர் அவர். அவர் காலத்தே வாழக் கொடுத்து வைக்காத காரணத்தால், கபிலரின் பாராட்டைப் பெற்றுப் பெருமை கொள்ள இயலாது போன கொற்றவர்கள்.

"அந்தோ! கபிலர் இன்றிருந்தால் எத்துணைப் பெரு நலமாம்" என எண்ணி உள்ளம் வெதும்புவர்.

சேரமான் மாந்தரஞ் சேரல் இரும்பொறை, "பொருள் செறிந்த பாவியற்றும் நாநலமும், சிறந்த கேள்விச் செல்வமும் இவ்விரு நல்முடைமையால் உலகெலாம் போற்றும் பெரும் புகழும் வாய்ந்த கபிலர் இன்றிருந்தால், எத்துணை நலமாம்? அந்தோ! அது நான் பெற்றிலனே"[1] என ஏங்கிப் பெருமூச்சு விட்டதைக் காட்டிக், கபிலர் புகழ் பாடியுள்ளார் புலவர் பெருந்தில் இளங்கீரனார்.

கபிலரின் இப்பெருஞ்சிறப்பை, அவரால் பாராட்டப் பெறும் கொற்றவர்கள், இவ்வாறு கூறிப் பெருமை செய்வது மட்டுமில்லாமல், கபிலரின் அளக்கலாகாப் புலமை நலத்தைப் "பொற்கட்டிகளை ஏற்றி வரும், கடலோட

வல்லு பெரிய நாவாய்கள் நுழைந்து விட்ட துறைக்குள், பிற பண்டப் பொதி ஏற்றிய சிறு சிறு கலங்கள் செல்வது எவ்வாறு இயலாதோ அதேபோல், கபிலர் பாடிப் பாராட்டி விட்ட ஒருவனைப் பிற புலவர்கள் பாராட்டுவது இயலாது"[2] என மாறோக்கத்து நப்பசலையார் போலும் புலவர் பெரு மக்களும் பாராட்டியுள்ளனர்.

அத்தகு பெரும் புலவர் கபிலர்; அவரால் பாராட்டப் பெற்றவர், செல்வக்கடுங்கோ வாழியாதன், பறம்பிற் கோமான் பாரி, மலையமான் திருமுடிக்காரி, வேளாவிக் கோமான் பெரும்பேகன், எனப் பல்ராயினும், அவரால் பெரிதும் பாராட்டப்பெற்றவன், அவர் தம் ஆருயிர் நண்பன் பாரியே.

"பாரி வேள் பால் பாடிச் சென்றால், விறலி! சேயிழை பெறுகுவை"

"மடவர் மெல்லியர் செலினும்
கடவன் பாரி கைவண்மையன்."[3]

"உலகம் புரக்க பாரி ஒருவனே உளனல்லன்; மாரியும் உளது[4] "பரிசிலர் அவனையே வேண்டினும், பாரி வாரேன் என்னான்; அவர் வரையின் ஆவன்"[5]

"பாரியின் பறம்பு மலையைத், தம் படையாற்றலால் கொள்வது மூவேந்தர்க்கும் இயலாது;[6] பாரியும் வாள் வலிவிழந்து, அது தருவானல்லன்;[7]

"வேந்தர் இரவலர் போல் ஆடியும் பாடியும் சென்று இரந்து நின்றால், பாரி, பரிசிலாக, நாட்டையும், குன்றையும் ஒரு சேரக் கொடுப்பன்"[8]

"முந்நூறு ஊர்களைக் கொண்டது பறம்பு நாடு; அம் முந்நூறு ஊர்களையும், பரிசிலரே பெற்றுக் கொண்டனர்"[9]

"பறம்பு நாட்டை, வேற்படை கொண்டு கைக் கொள்வது இயலாது: ஆனால் பாடிப் பரிசில் பெறும் கிணை மகள் விரும்பினால் அவட்கு, அது எளிதில் கிட்டிவிடும்"[10]

எனப் பாரியின் கொடைவளம், கொற்ற நலங்களைப் பலபடியாகப் பாடிப் பாராட்டி மகிழ்ந்திருந்தார் கபிலர்.

ஆனால், அந்தோ! அவர் மகிழ்ச்சியில் மண் விழுந்து விட்டது. பாரி கொல்லப்பட்டுவிட்டான். அவன் பறம்பும் பகைவர் வயமாகி விட்டது. பாரி மாய்ந்தானாகக் கலங்கிக் கைபற்று நீர் வார் கண்ணராகி விட்டார் கபிலர்.

வடித்தெடுத்த இனிய கள்தேறல், மலைநாட்டுக் கற்களையும் உருட்டி ஓடுமளவு, பாணர் கை மண்டையில், பாரி, வழிய வழியப் பெய்த இனிய காட்சி நலன் இழந்து போன பறம்பின் நிலை நினைந்து நெடுந்துயர் உற்றார். பாரி ஈன்ற பாவையர் பறம்பு மலை முகமேறி நின்று, பறம்பரணை முற்றி நிற்கும் மூவேந்தர்கள் கொண்டு வந்து நிறுத்திக் கிடந்த குதிரைப் படைகளை எண்ணி மகிழும் இன்பக் காட்சி கண்டு களித்த கபிலர், பாரி மறையந், தம்மோடு வந்து, தாம் தங்கியிருக்கும் சிற்றூர் புறத்துக் குப்பை மேட்டில் ஏறி நின்று, அவ்வழிச் செல்லும் உப்பு வண்டிகளை எண்ணும் துன்பக் காட்சி கண்டு துடித்துத் துவண்டு கிடந்தார்,

முதுபெரும் புலவராகிய கபிலர், இவ்வாறு முடங்கிக் கிடப்பதால் இலக்கியப் பேருலகிற்கு நேர்ந்து விட்ட இழப்பை உணர்ந்து கவலையுற்ற ஆன்றோர் சிலர். கபிலரை அணுகி, "புலவர் ஏறே; பாரியின் பிரிவு, பாரியைச் சேய்மைக் கண் இருந்து கண்டு வந்த எங்களுக்கே பெருந்துயர் தருகிறது என்றால், அவன் ஆருயிர் நண்பராய், அவன் வாழ்வோடு கலந்திருந்த உமக்கு அவன் மறைவு எத்துணை பெருந்துயர் தரும் என்பதை அறிகிறோம். என்றாலும், அவனையே நினைந்து செயல் இழந்து கிடப்பது, தங்களைப் போலும் கற்றறிந்த பெரும் புலவர்க்கு அழகாகாது,

உலகம் புரப்பவன், பாரி ஒருவனே இல்லன்; மாரியும் உண்டு என உரைத்தவர் தாங்கள். கொடையாலும், கொற்றத்தாலும், பாரியினும் விஞ்சியவரைக் காண இயலாது எனினும் அவ்வகையில் அவனுக்கு ஒப்பானவர் உலகில் இல்லாமல் போய் விடவில்லை. செல்வக் கடுங்கோ வாழியாதன் என்ற சேரர் குலச் செம்மல் ஒருவன் இருக்கிறான். பாரி போல் வாரி வழங்கும் வள்ளல் அவன். அவ்வாறு வாரி வாரி வழங்குவதால் அரசக் கருவூலம் வற்றி விடுமே என்ற எண்ணத்திற்கே இடம் அளிக்காதவன். இடையறாது வழங்குவதால் வந்து குவியும் புகழ்ச் செல்வம் கண்டு செருக்குற்றுப் போகாதவன்; வாரி வழங்க வழங்க வழங்கும் பொருள் அளவு குறைந்து போகாது வழங்கத் தொடங்கிய போது எவ்வளவு வாரி வழங்குவனோ, அதே அளவான பொருள்களையே தொடர்ந்து வழங்குபவன். அத்துணைச் சிறந்த வள்ளல் பெருந்தகை அவன்'' என்று செல்வக் கடுங்கோவின் கொடை வளப் பெருமையை எடுத்துரைத்தனர்.

அதுகேட்டார் கபிலர்; செல்வக் கடுங்கோவின் கொடை வளப் புகழ், கபிலரின் உடல் தளர்ச்சி, உள்ளத் தளர்ச்சிகளை ஒரு சேரத் துரத்தி விட்டு, அவரைச் செல்வக் கடுங்கோ பால் துரத்தலாயிற்று. அவ்வளவே. அவரும் சேர நாட்டுத் தலைநகர் நோக்கி விரைந்தார். ஆனால், செல்வக் கடுங்கோவை. ஆங்குக் காண இயலவில்லை. கபிலரைக் கண்ணுற்ற தலைநகர் மக்கள், செல்வக் கடுங்கோ, எப்போதும் தலைநகரே கதியாக இருந்து விடும் ஒடுங்கிய உள்ளம் உடையவனல்லன். போர் எனில் பூரிக்கும் தோள் உடையவன். ஆகவே எப்போதும் நாட்டு எல்லைக் கண் உள்ள பாசறைக் கண் போர் வீரர் புடை சூழவே இருப்பன். தலைநகர்க்கு எப்போது வருவான் எனக் கூறல் இயலாது. இன்றே காண வேண்டின் ஆங்குச் சென்று காண்பீராக என்றனர்.

அது கேட்ட புலவர், பாசறை நோக்கிப் புறப்பட்டு விட்டார். பாசறையை நெருங்க நெருங்கப் புலால் நாற்றம் பொறுக்க இயலாதவாறு மூக்கைத் துளைக்கலாயிற்று புலால் நாறும் பாசறைக் கண், இப்புலால் நாற்றத்தையும் தாங்கிக் கொண்டு, கடுங்கோ எவ்வாறுதான் தங்கியிருக் கின்றனனோ என எண்ணியவாறே சென்ற கபிலர், பகைவர் உடல்களுள் பல்கால் பாய்ந்து பாய்ந்து வெளிப்பட்டமை யால், வீரர் கை வாள்கள், காண்பவர் கண்கள் கூசுமளவு ஒளிப் பிழம்பாகியிருக்கவே, அவ்வாட்களை உற்று நோக்கி னார். வாள் முனை தோறும், அவை வெட்டி வீழ்த்திய படைவீரர்களின் குருதி கொட்டும் குடர் சிக்குண்டு தொங்குவது கண்டார், மேலும் சிறிது தொலைவு சென்றார்.

சேர நாட்டுக்கே சிறப்பளிக்கும் மலைநாட்டு வேழப் படை வரிசையாக நிற்பதையும், அவற்றின் நெடிய கூரிய கோடுகளிலும், பகைவர் உடலில் பாய்ந்து வெளிப்பட்ட போது சிக்குண்ட படை வீரர்களின் குடர்கள் குருதி கசியத் தொங்கிக் கொண்டிருப்பதையும் கண்ணுற்றார். புலால் நாற்றத்தின் காரணமும், செல்வக் கடுங்கோவின் கொற்றச் சிறப்பும் ஒரு சேரப் புலப்பட்டு விட்டன. வாள் முனையிலும் போர்க் களிறுகளின் கோடு முனையிலும் கிடந்து குருதி கசியும் பகை வீரர்களின் குடர்களிலிருந்தே வீசுகிறது இப்புலால் நாற்றம். பூ நாற்றத்தினும் இப்புலால் நாற்றத்தையே பெரிதும் விரும்பும் உள்ளம் வாய்க்கப் பெற்ற பேராண்மையாளன் செல்வக் கடுங்கோ என்பதை உணர்ந்து, அவன், பாரி போல், பெருங் கொடையாளன் மட்டும் அல்லன்; அவனே போல் பெரு வீரனும் ஆவன் போலும் என்ற எண்ணச் சூழலில் சிக்கித் தன்னை மறந்து சிறிதே நின்றார்.

அப்போது, வெற்றி கொண்ட வீரன் புகழ்பாடும் களப் பாடலுக் கேற்பக் கொட்டும் வெற்றி முரசின் முழக்கம்

செவியுள் வந்து புகவே அம்முழக்கம் வந்த இடம் நோக்கி விரைந்தார். ஆங்கு, வெற்றிக்குத் துணை நின்ற வேற்படை முழுநிலவின் பேரொளி போல் ஒளி வீசுவதையும், பாடினி ஒருத்தி, அவ்வேலின் கொற்றம் குறித்துப் பாடப் பெற்ற பாடல் ஒன்றைப். போர் முரசின் முழக்கிற்கேற்ப, தாளம் ஒத்துப் பாடுவதையும், பாடுவது மட்டுமல்லாமல், அப்பாடற் பொருளுக்கும் முரசின் முழக்கிற்கும் பொருந்த அவிநயம் காட்டி ஆடி கொண்டிருப்பதையும், அவ்வாடல் பாடல்களில் சென்ற உள்ளம் உடையவனாய்ச் செல்வக்கடுங்கோ, தன்னை மறந்து செம்மாந்து வீற்றிருக்கும் திருவோலக்கக் காட்சியையும் கண்ணுற்றார்.

செல்வக் கடுங்கோ, ஆடல் பாடல்களில் சென்ற உள்ளம் உடையவனாயிருக்கும் நிலையிலும் பாசறைக்குள் புதியோர் யார் புகினும், அந்நிலையே அறிந்து கொள்ளும் விழிப்புடையவனுமாவான், அதனால், கபிலரின் வருகையைக் கண்டு கொண்டான். புலவரெல்லாம் போற்றும் பெரும் புலவர் கபிலர்; மூவேந்தர்களாலும் வெற்றி கொள்ள மாட்டாப் பெருவீரனும், வள்ளல்களுக்கெல்லாம் எடுத்துக் காட்டாய் விளங்கவல்ல பெருங்கொடையாளனுமாகிய பாரியின் ஆருயிர் நண்பர்; அவரா இங்கு வந்திருப்பார்; என்ற வியப்பில் ஆழ்ந்து போகவே அவரை வரவேற்கும் நினைவிழந்து சிறிதே மெய்ம்மறந்து போனான் கடுங்கோ.

கபிலர் உள்ளத்தில் கடுஞ்சினம் மூண்டுவிட்டது; உள்ளத்தில் எண்ண அலைகள் எழுந்து விட்டன. முற்றிக் கனிந்து, புதுப்புண்கள் போல் வெடித்துக் கிடக்கும் பலாக் கனிகளின் சாற்றினை. வாடைக்காற்று தொலை தூரத்துக்கும் கொண்டு சென்று தூவும் வளம் மிக்க நாடுடையவன்; அத்தகு நாடுடைமையால், மூவேந்தர்கள் எத்தனை நாட்கள் முற்றிக் கிடக்கினும் வெற்றி கொள்ள மாட்டாப் போராண்மையாளன்; ஓவியத்தில் தீட்டிக்

காண்பதல்லது, கட்டிக் காண முடியாதே எனக் கண்டோர் வியக்கும் அளவு கட்டப்பெற்ற நல்லரண் உடையவன்; அழகுற அமைந்து விட்ட மாளிகை மட்டுமல்லாமல், பார்ப்பவர், "பாவையோ" என எண்ணி வியக்கும் பேரழகு வாய்ந்து, இல்லறத்துக்குரிய நல்லறப் பண்புகளால் நிறைந்த மனையற மாட்சி மிக்க நல்லாளை மனைவியாகவும் கொண்டவன்.

பொன்னிறப் பூக்களையும், சின்னஞ்சிறு இலைகளையும் புல்லிய அடியினையும் கொண்டதும், கரிந்து கிடந்து கேடு வரவினையும், தழைத்து நின்று ஆக்க வரவினையும் முன்கூட்டி உணர்த்தும் இயல்புடையதுமாகிய உன்னமரம் கரிந்து நின்று, கேடுவரும் என்பதை உணர்த்தும் நிலையினும் அது மதியாது போர் மேற்சென்று, உன்னம் உணர்த்தியதற்கு மாறாக வெற்றியே பெற்று, உன்ன மரத்துக் கூற்றைப் பொய்ப்பிப்பதன் மூலம் அதற்குப் பகையாகிப் போகும், எண்ணிய எண்ணியாங்கு எய்தும் திண்ணியன். போர் வெற்றியே கொண்டு அமைந்து இன்ப வாழ்வை மறப்பவன் அல்லன்; மார்பில் மணம் கமழும் சந்தனம் பூசி மகிழவும் அறிவான்; வளமான நாடும் வனப்புடைய அரண்மனை, இல்லற மாட்சி மிகு மனைவி, மணம் மகிழ் வாழ்க்கை ஆகிய இவை மட்டுமே கொண்டவன் அல்லன். வற்றாக்கொடை வளமும் வாய்த்தவன்; அவன் மார்பில் பூசும் சந்தனம் தான் புலருமே யல்லது வரையாது வழங்கும் அவன் கொடையுள்ளம் என்றும் வறண்டறியாது: அது என்றும் பசுமையாகவே இருக்கும். இவை அனைத்தும் பெறுதற்கேற்ற, அகன்ற மார்பு போலும் உடல் உரமும் வாய்க்கப் பெற்றவன். அவன் தான் என் தலைவன்; அன்று அன்று; என் ஆருயிர் நண்பன், பாவலன் பாரி. அத்தகையான் அவன் வெற்றிப் புகழ் எட்டுத் திக்கும் பரவ முழங்கும் வெற்றி முரசு கொட்டுவது இல்லாமல் போக, முழக்கு எழ எப்போதும் ஈரம் பட்டிருக்க வேண்டிய மார்ச்சனையாம்

மண் முழக்குவது இல்லாமையால், ஈரம் புலர்ந்து போக, அவன் பால் பரிசில் பெற்று வாழ்ந்த இரவலர் அனைவரும், எண்ணி எண்ணி நெஞ்சு நெகிழ்ந்து வருந்தவும், மீண்டும் வாரா உலகமாம் வானாடு அடைந்து விட்டான். ஆகவே, "புரப்பவர் யாரும் இல்லை. புரப்பாயாக" என வேண்டி உன்பால் இரந்து வந்தவன் அல்லன் நான்.

"கொடுக்கிலாதானைப் பாரி" என்றும், "மிடுக்கிலாதானை வீமன்" என்றும் இல்லாதன கூறிப் பாராட்ட அறியாதவன் நான். கொற்றம் மிக்கவனும், கொடை வள்ளலுமாகிய பாரியை இழந்து வாழும் வாழ்வும் ஒரு வாழ்வா என வாழ்க்கை வெறுத்துக் கிடந்த எனக்கும் பாரிபோல், கொற்றம் உடையவனும் கொடைவளம் உடையவனும் ஒருவன் உளன்? அவனே செல்வக் கடுங்கோ என, நண்பர் பல கூறப் பாரிக்குப் பின் ஒருவன்; அவனுக்கு நிகரானவன் ஒருவன் உளன் என்றால், அவனை இன்றே காண வேண்டும் என்ற ஆசை துரத்துவே இவண் வந்தேன். ஆங்கு, அவ்வான்றோர், உன் கொடைப் பெருமைக் கூறக் கேட்டேன். ஈங்கு வந்து உன் நாளோலக்க நலங்கண்டு உன் கொற்றத்தின் வெற்றியை விளங்கக்கண்டேன்.

இது, மிகைப் படக் கூறல் அன்று. கேட்டும் கண்டும் உளமார உணர்ந்த உண்மைகளையே உரைக்கின்றேன்." எனக் கூறிச் சினக்கும் முகத்தான். பாரியை இழந்து விட்ட தமிழ் நாட்டில் அவனிடத்தில் வைத்துப் பாராட்டத் தக்க பெரியோன் செல்வக் கடுங்கோ வாழியாதன் என்ற உண்மையைக் கூறாமல் கூறி, அவன் அருள், ஆற்றல் நலங்களை விளக்கும் அழகிய பா ஒன்று முகிழ்த்தது அது இதோ.

"பலா அம் பழுத்த பசும்புண் அரியல்
வாடை துரக்கும் நாடுகெழு பெருவிறல்;
ஒவத்து அன்ன வினைபுனை நல் இல்;
பாவை அன்ன நல்லோள் கணவன்;

பொன்னின் அன்ன பூவின், சிறி இலைப்
புன்கால் உன்னத்துப் பகைவன்; எங்கோ
புலர்ந்த சாந்தின், புலரா ஈகை
மலர்ந்த மார்பின், மாவண் பாரி
முழவு மண்புலர, இரவலர் இனைய
வாராட் சேட்புலம் படர்ந்தோன்; அளிக்கு!
இரக்கு வாரேன்: எஞ்சிக் கூறேன்,
ஈத்தது இரங்கான்: ஈத்தொறும் மகிழான்.
ஈத்தொறும் மாவள்ளியின் என நுவலும் நின்
நல்லிசை தர வந்திசினே; ஒள்வாள்
உரவுக் களிற்றுப் புலாஅம் பாசறை
நிலவின் அன்ன வெள்வேல் பாடினி
முழவிற் போக்கிய வெண்கை
விழவின் அன்ன நின்கலி மகிழானே',

பதிற்று : 61

துறை = காட்சி வாழ்த்து
வண்ணம் = ஒழுகு வண்ணம்
தூக்கு = செந்தூக்கு
பெயர் = புலா அம்பாசறை

புலால் நாறும் பாசறை எனும் பொருள் தருவதாய "புலா அம் பாசறை" என்ற தொடர், பாசறையை பழிப்பது போல் தோன்றினும், பாசறைக்கு உரியோனின் வாட்படை வேழப் படைகள், பகைவர் உடலங்களைக் குத்திக் கிழித்த வழிச் சிக்குண்ட பகைவர் குடர்களைக் கொண்டிருப்பதி னாலேயே, பாசறை புலால் நாறுகிறது என்பதால் பாசறைக்கு உரியோனின் படைப்பெருமையினை உணர்த்தும் இனிய இலக்கிய நயம்பயக்கும் தொடராதல் கண்டு வியந்து பாராட்டிய யாரோ ஒரு பெரியார் இப்பாட்டிற்குப் "புலா அம் பாசறை" என்ற அத்தொடரையே பெயராகச் சூட்டிச் சிறப்பித்துள்ளார்.

## உரை

பலா அம் பழுத்த — பலா மரத்தின் கனிந்து வெடித்த;

பசும்புண் அரியல் — புண் போலத் தோன்றும் பழ வெடிப்பிலிருந்து ஒழுகும் கனிச் சாற்றை;

வாடை துரக்கும் — வாடைக் காற்று போய்த் தொலைவிடங்களிலும் தெளிக்கும்;

நாடு கெழு பெருவிறல் — நாட்டுக்கு உரியோனாகிய பெரிய விறல் படைத்தவனும்;

ஓவத்தன்ன — ஓவியத்தில் தீட்டியது போன்ற;

வினை புனை நல் இல் — கை வினைகளால் புனையப் பட்ட நல்ல இல்லில் வாழும்;

பாவை அன்ன நல்லோள் கணவன் — பாவை போலும் அழகு நலம் வாய்ந்த நல்லாளின் கணவனும்;

பொன்னின் அன்ன பூவின் சிறி இலை — பொன் போலும் நிறமுடைய பூவினையும், சிறிய இலையி னையும்;

புன்கால் — புல்லிய அடி மரத்தினையும் உடைய!

உன்னத்துப் பகைவன் — உன்ன மரத்துக்குப்பகைவனும்

எம் கோ — எங்கள் தலைவனும்;

புலர்ந்த சாந்தின் — பூசிப் புலர்ந்த சந்தனத் தினையும்;

புலரா ஈகை — குறைபடுதல் இல்லாக் கொடை குணத்தையும்;

| | | |
|---|---|---|
| மலர்ந்த மார்பின் | — | அகன்ற மார்பினையும்; |
| மாவண் பாரி | — | பெரிய வள்ளன்மையினையும் உடைய பாரி; |
| முழவு மண் புலர | — | முழவிடத்தே பூசப்படும் மார்ச்சனை மண் தொழில் படாமையால் உலர்ந்து போகவும்; |
| இரவலர் இனைய | — | வழங்குவோர் வேறு இன்மையால் இரவலர் வருந்தவும்; |
| வாராச் சேட்புலம் | — | மீண்டு வாராச் சேய்மைக் கண்ணதாகிய வானுலகிற்கு; |
| படர்ந்தோன் | — | சென்று விட்டான்; |
| ஒள்வாள் | — | ஒளி வீசும் வாட் படையினையும்; |
| உரவுக்களிற்று | — | உரம் மிக்க போர்க் களிறுகளையும் உடைய; |
| புலா அம் பாசறை | — | புலால் நாறும் பாசறையில்; |
| நிலவின் அன்ன | — | முழுநிலவின் ஒளி போலும்; |
| வெள் வேல் பாடினி | — | வெள்ளொளி வீசும் வேலினைப் பாடும் பாடினி; |
| முழவிற் போக்கிய | — | முழவோசைக்கு ஏற்ப அபிநயிக்கும்; |
| வெண்கை | — | வெறுங்கையை ஆட்டிப் பாடும்; |
| விழவின் அன்ன | — | விழாக் களம் போலும் பொலிவுடைய; |
| நின் கலி மகிழான் | — | உன்னுடைய ஆரவாரம் மிக்க நாளோலக்கத்திற்கு; |
| இரக்கு வாரேன் | — | என்னை இது காறும் புரந்து வந்த பாரி மறைந்துவிட்டான். |

| | | |
|---|---|---|
| | | ஆகவே, என்னை ஏற்றுப் புரப்பாயாக என இரந்து நிற்க வந்தேன் அல்லன்; |
| எஞ்சிக் கூறேன் | — | அதற்காக, உன் புகழை மிகுத்துக் கூற மாட்டேன்; |
| ஈத்தது இரங்கான் | — | செல்வக் கடுங்கோ ஈதலால் ஆகும் பொருளழிவுக்கு வருந்தான்; |
| ஈத்தொறும் மகிழான் | — | ஈவது காரணத்தால் புகழ் பெருகுந்தோறும் அது கண்டு மகிழ்ந்து போகான்; |
| ஈத்தொறும் மாவள்ளியன் | — | ஈயும் போதெல்லாம், மேலும் பெருகும் வள்ளன்மை உடையவன்; |
| என | — | என்று; |
| நுவலும் | — | ஆன்றோர்கள் கூறும்; |
| நின் நல்லிசை தர | — | உன் நல்ல புகழ் என்னை உன்பால் துரத்தவே! |
| வந்திசின் | — | வந்துள்ளேன் (என்றவாறு) |

பாரி (8) வாராச் சேட்புலம் படர்ந்தோன் (10) நி அளிக்கென இரக்கு வாரேன் (11) எஞ்சிக்கூறேன் (12) மாவள்ளியன் என நுவலுநின் (13) நல்லிசை தர (14) வந்திசின் (14) நின் புலாஅம் பாசறை (5) கலி மகிழானே (18) என வினை முடிவு செய்க.

## குறிப்பு

முற்றிக் கனிந்த பலாவின் வெடிப்பு, புண்போல் தோன்றும் ஆதலின், அதைப் புண் என்றே அழைப்பது வழக்கம். "புண் அரிந்து அரலை புக்கன நெடுந்தரள் ஆசினி" என மலைபடு கடாத்தினும் (138—139) வருவது காண்க.

உன்னம் ஒரு மரம். அது தழைத்து நின்றால் நாட்டிற்கு ஆக்கம் வரும் என்றும், அது கரிந்து காட்டினால் நாட்டிற்குக் கேடுவரும் என்பதும் ஒரு நம்பிக்கை.

## சான்றெண் விளக்கம்

1. "செறுத்த செய்யுள்செய் செந்நாவின்,
வெறுத்த கேள்வி விளங்கு புகழ் கபிலன்
இன்றுளனாயின் நன்று மன்"

—புறம்—53

2. பொலந்தரு நாவாய் ஓட்டிய அவ்வழிப்
பலகலம் செல் காலாதனையேம்"

—புறம் —126

3, புறம் — 106
4. புறம் — 107
5. புறம் — 108
6. புறம் — 111
7. புறம் — 109
8. மேலது
9. புறம் — 110
10. புறம் — 111

# 2. வரை போல் இஞ்சி

செல்வக் கடுங்கோ வாழியாதனின் வரையாது வழங்கும் கை வண்மை, பணியாத பகைவரைப் பாழ் செய்யும் கை வன்மைகளை அறிந்து, அவனைக் காணப் புறப்பட்டார் கபிலர். சேரநாட்டு எல்லைக்குட் புகுந்து, தலைநகர் நோக்கிச் சென்று கொண்டிருந்தார். இடையில், முல்லை வளமும், மருத வளமும் ஒரு சேரக் கொண்ட சிறுநாடு. பச்சைப் பசேலெனக் கண்ணுக்கெட்டும் வரையும் செழித்து வளர்ந்திருக்கும் முல்லைக்காட்டுப் ' புல்வெளியெங்கும், கறவை மாடுகள் வயிறார மேய்ந்து கொண்டிருந்தன. அக்காட்சி நலம் கண்டு களித்தவாறே சென்று கொண்டிருந் தார் கபிலர்.

செல்லச் செல்ல, நிலம் மேடு குறைந்து பள்ளமாகிக் கொண்டே போவது உணர்ந்தார். சிறிது தொலைவு சென்றதும், பச்சைக் கம்பளங்களையும், பொன்னிறக் கம்பளங்களையும், கலந்து கலந்து விரித்து வைத்தாற்போல், பச்சைப் பசேலென்ற இளம் பயிர்களும், கதிர் முற்றிப் பொன்னிறம் காட்டும் முதிர்ந்த பயிர்களும் நிறைந்த நெல் வயல்களைக் கொண்ட மருத நிலத்து நன்செய் காட்சி, அவர் கண்ணில் பட்டது; அக்காட்சி நலத்தைக் கண்ணுற்ற வாறே, முல்லை நிலம் விடுத்து மருதநிலம் சென் றடைந்தார்.

வயல்களில், நெற்பயிர் நன்கு செழித்து வளர்ந்து, காண்பவர் கண்களுக்குக் கதிர் தவிர்த்துத், தாள்புலப்

படாவாறு, கதிர்கள் திரண்டு வெளிப்பட்டு, மணிமுற்றித் தலை சாய்ந்து கிடப்பது கண்டு கழி பேருவகைகொண்டார். அறுத்துப் போட்டு அடித்துச் சேர்த்தால் களம் கொள்ளாதே! இவ்வளவு நெல்லையும் என்ன செய்வர்? என எண்ணி வியந்திருக்கும் நேரத்தில், அவர் கண்ட ஒரு காட்சி, அந்நிலத்துக்கு உரியவராம் உழவர் பெருமக்களின் எதையும் இழக்கவிரும்பார் முயற்சியின் பெருமையினைப் பறைசாற்றுவதாய் அமைந்தது.

விளைந்த பாரம் தாங்கமாட்டாது, வயல் வரப்புகளில் சாய்ந்து கிடக்கும் கதிர்களிலிருந்து நெல்மணிகள், காம்பற்றுக் குவியல் குவியல்களாக உதிர்ந்து கிடப்பதை, அவ்வுழவர் பெருமக்கள், அந்நெல்மணிகளைச், சிந்தாமல்; சிதறாமல், ஒன்றுகூட விடாது திரட்டிக் கொணர்ந்து, வயல்களுக்கு அணித்தே உள்ள களத்துமேட்டில், காஞ்சி மரத்து நிழலில் கொட்டுவதையும், உதிர்ந்தன கொணர்ந்து சேர்த்த அந்நெல்மணிகளே, சிறு குன்றுபோல் குவிந்து கிடப்பதையும் கண்டார். அறுத்துக் கொணர்ந்து தாளடித்துக் கடாவிட்டுக் களம் போகக் காற்றிவிட்டுக் கொள்ள வேண்டாமல், இவ்வாறு, வரப்புகளில் உதிர்ந்தன பொறுக்கிக் கொணர்ந்து கொட்டிய நெல்லே இவ்வளவாயின், கதிர் அறுத்து அடித்துக் கொள்ளும் நெல், எத்துணைப் பெரிய மலையாகும் என எண்ணி, வயல் வளம் கண்டு கழிபேருவகை பூத்தார். அவ்வளவு பெரிய நெல் மலை கிடைக்கும் நிலையிலும், வயலில் உதிர்ந்து போகும் சிறு நெல்லையும், புறக்கணித்து விடாமல், பொறுமையோடு, பொறுக்கிச் சேர்க்கும், அவ்வுழவர்தம், பேருள்ளம் கண்டு, அவர்களை உளமாரப் பாராட்டினார்.

அதுமட்டுமன்று; வயல்விளை நெல்லை, அறுத்துப் போட்டுக் கடாவிட்டுத் தூவி போக்கி, நெல்கொள்ளவல்ல களத்துமேடு, வயல்களுக்கு அணித்தாகவே இருக்க வேண்டும்; களத்தில் பகலெல்லாம் பணி புரிவார், கடும்

ஞாயிற்று வெப்பத்தால் களைத்துச் சோர்ந்து விடாவாறு காக்கவல்ல நிறை நிழல்தரும் காஞ்சி மரங்கள், அக்களத்து மேட்டில் நிறைந்திருக்க வேண்டும் என உணர்ந்து, களத்து மேட்டை அமைத்திருக்கும், அவ்உழவர் தம் அறிவுத் திறன் கபிலர் கருத்தினை ஈர்த்தது.

கறவைகளை முல்லைக்காட்டில் மேயவிட்டு, அவற்றின் பாற்பயன் கொள்வதும், மருதநிலத்து மண்ணைப் பொன்னாக்கும் நெற்பயன் கொள்வதுமாகிய உழைப்பில் மட்டும் சிறந்தவரல்லர்; உழைப்பின் ஊடே தம்மை ஒப்பனை செய்து கொண்டு, உள்ளம் களிக்கும் இன்ப வாழ்விலும் கருத்துடையவர் அவ்வுழவர். நெல் அரிந்த நிலங்களில், நிலச் செழிப்பால் தாமே வளர்ந்து விட்ட ஆம்பல் கொடிகளில் மலர்ந்து கிடக்கும் மலர்களைத் தங்கள் தலைமுடிகளில், அழகுறச் சூடிக் கொண்டு, கோது போக வடித்தெடுத்த கள்ளுண்டு களிப்பதும் செய்வர் கள்ளுண்ணுவதிலும், உடல் தளர்ச்சியும், உள்ளத் தளர்ச்சியும் போக அளவாக உண்பரே அல்லது, தம் தலையில் சூடியிருக்கும் ஆம்பல் மலர்களில் நிறைந்து வழியும் தேனைக் குடிக்கவும், வடித்தெடுக்கும் வழிவழியும் மதுரத் தேறலைப் பருகவும் வந்து மொய்ப்பதன் மூலம், சிறகடித்துத் திரண்டு வந்து, தம்மை வளைய வளைய வந்து தொல்லை தரும் வண்டுக் கூட்டங்களை ஓட்டித் துரத்த இயலாவாறு நினைவிழந்து போகுமளவு பெருகக் குடிப்பாரல்லர்.

முல்லைக்காட்டுப் புல்வளம், ஆங்கு வயிறார மேய்ந்து கிடக்கும் கறவைகளின் வனப்பு, மருத நாட்டு வயல் வளம், அவ்வயலில் உழுதுப் பயன் கொள்ளும் உழவர் செல்வச் செழிப்பு, அவர்களின், ஆடல், பாடல், அறிவுச் தெளிவு ஆகியவற்றை எண்ணி மகிழ்ந்த வாறே செல்லும் கபிலர் கண்முன், மலை ஒன்று தென்பட்டது. வியப்பில் ஆழ்ந்து போனார். நாம் நிற்பதோ வயல்களை மட்டுமே கொண்ட மருதநிலம். மருத நிலத்தில்

மலைக்கு இடம் இல்லை. 'இல்லையாகவும், ஈண்டு, எவ்வாறு ஒரு மலை காட்சியளிக்கிறது என எண்ணத் தொடங்கி, அம்மலையைச் சற்றே உற்று நோக்கினார். உண்மை புலப்பட்டு விட்டது. அது மலை அன்று. மலை போல் உயர்ந்த கோட்டை மதில். மதிலே, மலை போல் இருக்குமாயின், கோட்டை எத்துணைப் பெரிதாக இருக்கும் என்ற வியப்பு மேலும் மிகவும் கோட்டையை நோக்கி விரைந்தார்.

கோட்டையைச் சூழ வெட்டப்பட்டிருக்கும், ஆழ்ந்து அகன்ற அகழியும், புற மதிலையும், கரையையும் அலைக் கழித்து எழும் பேரலைகள் வீசும் அகழி நீரும், அவர் கால் களைத் தடுத்து நிறுத்தின. கபிலர் எண்ணிப் பார்த் தார். நாட்டின் நன்செய் புன்செய்களின் வளத்திற்காம் காரணம் புலப்பட்டு விட்டது. இம்மண்ணுக்கு உரியவன், இத்துணைப் பெரிய கோட்டை அமைத்துக் காத்து வரு வதினாலேயே, இத்துணை வளமும் ஈங்கே உள்ளன என எண்ணினார். அவர் வாய், அவரை அறியாமலே, அந் நாட்டையும், அதன் வளத்தையும் அவற்றிற்குக் காவலாக அமைந்திருக்கும் அரணையும், அரணைச் சூழ எழுப்பப் பட்டிருக்கும் மலை போலும் மதிலையும், வெட்டப் பட்டிருக்கும் அலை ஓயா அகழியையும் பாராட்டிப் பாடத் தொடங்கிவிட்டது. மெய்ம்மறந்து பாடிக்கொண்டே இருந்தார். அப்போது ஆங்கு வந்து சேர்ந்தனர் அவ்வூர் ஆன்றோர் சிலர். கபிலரை அணுகி, மெல்ல விளித்தனர். அது கேட்டுத், தன்னுணர்வு வரப் பெற்ற கபிலரைப் பார்த்து

"இந்நாட்டு வளம் பாடும் புலவர் பெருமானே! சற்றே இப்பக்கம் வந்து, இம்மேட்டில் ஏறி நின்று, அதோ அந்தத் திக்கில் நோக்குவீராக" என வேண்டினார்

ஆன்றோர் காட்டிய திக்கில், தம் விழிகளைப் போக்க விட்டார் கபிலர்; அவ்வளவுதான்; அவர் கண்கள் குளமாகி

விட்டன.. தன் கதிர் வெப்பக்கொடுமையால், உலகை யெல்லாம் எடுத்து அழிக்கவல்ல ஞாயிறு தனி ஒரு ஞாயிறாக இல்லாமல், பல ஞாயிறுகளாகக் கூடிவந்து எரித்து அழிக்கின்றனவோ எனக், காண்பவர் நடுங்குமாறு மிகப்பெருந்தீ, தன் எண்ணிலா நாக்குகளால் தீம்பிழம்புகளைக் கக்கி, ஒரு நாட்டையே எரித்துக் கொண்டிருப்பது கண்டார். கண்ணில் நீர் மல்க, நெஞ்சில் நெடுந்துயர் மூள, நிலை குலைந்து போய்விட்டார். "இப்பெருந்தீயை மூட்டிவிட்ட கொடியவன்யாவன்?" என்ற கடும்வினா அவர் வாயினின்றும் வெடித்து வெளிப்பட்டது. ஊர்ப்பெரியவர்கள், "புலவர் பெருமானே! இது செய்தவன் வேறு யாரும் அல்லன்; எவனொருவன் புகழ் பாடத், தாங்கள் செல்கிறீர்களோ, அச்செல்வக் கடுங்கோ வாழியாதனின் நாற்படைகள்தான் இதையும் செய்கின்றன. கபிலரே! உயிர் கொல்லும் கூற்றுவனை நீர் கண்டிருக்கமாட்டீர்; ஆயினும் கேட்டிருப்பீர்; கேட்கும் உயிர்களை மயக்கம் போட்டுவிழச் செய்து விடுமாறு, இடியேறு போலும் பேரொலியை எழுப்பியவாறே உலகெங்கும் சென்று உயிர் கொள்வான் கூற்றுவன் எம்பர். அக்கூற்றுவனுக்கு நிகரானவன் செல்வக் கடுங்கோ. அவன் கைவண்ணந்தான், தாங்கள் காணும் இச்செவ்வண்ணம் என்றனர்.

அவ்வளவே; செல்வக் கடுங்கோவின் கொடைவளப் பெருமை கேட்டு, அவன்பால் அன்புகொண்டு, அவனைக் காணச் செல்லும் தன் அறியாமைக்கு வருந்தினார். அவன் கொடை புகழ் நலம் கூறிய தம்மூர்ச் சான்றோர்பால், அவனின் பிற குண இயல்புகளை அறிந்து கொள்ளாது போனேனே எனத், தம்மை நொந்து கொண்டார். சேர நாடு சென்று செல்வக்கடுங்கோவைக் காண வேண்டும்; அவன் புகழ் பாட வேண்டும் என்ற எண்ணத்தைக் கை விட்டு, அவனைப் பழிக்கவும் துணிந்துவிட்டார்.

கபிலரின் இக்கருத்நோட்டத்தை உணர்ந்து கொண்ட ஊர்ப்பெரியவர்கள், "புலவர் பெருந்தகையே! தாங்கள் காணும் இப்பேரழிவை விளைவித்தவன் செல்வக்கடுங்கோ தான். அதற்கேற்ற ஆற்றலும், அது செய்யுங்கால், காலன் போலும் கொடுமையும் வாய்ந்தவன் என்பதெல்லாம் உண்மைதான். என்றாலும், கண்ணில் படும் நாடுகள் அனைத்தையும் அழித்து ஒழிக்கும் அறக் கொடியவன் அல்லன்; அவன் ஒரு பேரரசன்; முடியுடை மூவேந்தரில் ஒருவன். இந்நாடுகளை ஆள்பவரோ, சின்னம் சிறு குறு நிலத்தலைவர்கள். இவர்கள் அவன் தலைமையை ஏற்றுக் கொண்டு, அவன்முன், யானைகள், அங்குசத்தின் முன் தலை வணங்கிக் கிடப்பது போல், தலை வணங்கி நின்று, உரிய திறைப்பொருளைத் தப்பாது தந்துவிடுதலே முறை. அது செய்வார் நாடுகளை, அவன், அணுகவும் செய்யான். அது செய்யாது, தம் நாடோ வளங்கொழிக்கும் நாடு; அழிக்கலாகா அரண் கொண்டது என எண்ணி இறுமாந்து அவன் பகையைத் தேடிக்கொண்டால், அக்கணமே அவர் நாடு காடாகிப் போகும். எவராலும் கடக்கலாகாத் திண்மையும், அரிய படைப்பொறிகள் அமையப் பெற்றதுமாகிய அரண் உடையேம் என்ற செருக்கால், ஒரு நாடு பணிந்திலது என்றால், நெற்றியில் பட்டமும், கழுத்தில் பொன்னரி மாலையும் சூட்டப் பெறுமளவு போர்த்திறனில் புகழ் பெற்ற களிற்றுப்படை, கார்மேகம் அணிவகுத்துச் செல்கிறதோ எனக் கருதுமாறு, கரிய தோலால் ஆன கிடுகு ஏந்திய மறவர் படை, வாளும், வில்லும் ஏந்தி முன் வரிசையில் நிற்கும் பகைவர் படையைக், காற்றெனு விரைந்து ஓடி, ஊடறுத்து, நிலைகுலையப் பண்ணும்.

கொய்து விட்ட பிடரி மயிரைக் கொண்ட குதிரைப் படைகளோடு கூடிய சேரநாட்டுப் பெரும்படை விரைந்து சென்று, அவ்வரணை சுற்றி வளைத்து, இல்லையாக்கி

விடும். அவனைப் பணிய மறுத்து, அவ்வாறு பாழுற்ற நாடு அது. அவன் தலைமை ஏற்றுத் திரை தந்து, அவன் தோழமை கொண்டதால். தளரா வளம் பெற்றுத் தழைத் திருக்கும்' நாடு இது. ஆகவே ஒரு நாட்டின் வாழ்வுக்கும் தாழ்வுக்கும் அந்நாட்டுக்குரியோனின் பணிவும், பணியாமை யுந்தான் காரணமே அல்லது, செல்வக் கடுங்கோ அல்லன்'' எனக் கூறித் தெளிவித்தனர்.

தம்மூர்ச் சான்றோர் கூறியன கேட்டுச் செல்வக் கடுங்கோ பால் கொண்ட மதிப்பு, இவ்வூர்ச் சான்றோர் கூறியன கேட்டதால் பன்மடங்கு மேலும் சிறக்கவே அவன் புகழைப் பாவாக்கி மகிழ்ந்தார் கபிலர்.

''இழை அணிந்து எழுதரும் பல்களிற்றுத் தொழுதியொடு
மழையென மருளும் மாயிரம் பல்தோல்
எஃகுபடை அறுத்த கொய்சுவல் புரவியொடு
மைந்துடை ஆர்எயில் புடைபட வளைஇ
வந்துபுறத் திறுக்கும்! பசும் பிசிர் ஒள் அழல்
ஞாயிறு பல்கிய மாயமொடு சுடர்திகழ்பு
ஒல்லா மயலொடு பாடு இமிழ்பு இழி தரும்
மடங்கல் வண்ணம் கொண்ட கடுந்திறல்
துப்புத்துறை போகிய கொற்ற வேந்தே!
புனல்பொரு கிடங்கின், வரைபோல் இஞ்சி
அணங்குடைத் தடக்கையர் தோட்டி செப்பிப்
பணிந்து திறைதருப நின் பகைவராயின்
புல்லுடை வியன்புலம் பல்லா பரப்பி,
வளனுடைச் செறுவின் விளைந்தவை உதிர்ந்த
களனறு குப்பை காஞ்சி சேர்த்தி
அரியல் ஆர்கை வன்கை வினைஞர்
அருவி ஆம்பல் மலைந்த சென்னியர்
ஆடுசிறை வரி வண்டு ஓப்பும்
பாடல் சான்ற அவர் அகன் தலை நாடே.''

(பதிற்று - 62)

துறை — செந்துறைப்பாடாண்பாட்டு

வண்ணமும் தூக்கும் } அது

பெயர் = வரை போல் இஞ்சி.

மலை போல் உயர்ந்த மதில் உடைய அரண் பகைவரின் எத்துணைப் பெரும்படையாலும் அழிவுறுதல் கூடாது. அத்தகு அரண் உடையார் எத்துணைப் பேரரசர்க்கும் பணிதல் கூடாது. அப்பொழுதுதான் அம்மதிலுக்குச் சிறப்பு. ஆனால், இம்மதில் அழிவுறாதிருந்து மலைபோல் காட்சி அளிப்பது, மதிலுக்கு உரியானின் அழிக்கலாகா ஆற்றலால் அன்று. மாறாக, செல்வக் கடுங்கோ முன் நோட்டி போல் தலை தாழ்ந்து, தாள் பணிந்து திறை தந்தமையால் அரணுக்கு உரியான், அத்தகு இழி வுடையனாகவும், மலைபோல் ஓங்கி நிற்கிறதே இம்மதில் எனும் பொருள் தரும் நயம் கருதி, ''வரை போல் இஞ்சி'' எனும் தொடர், இப்பாட்டின் தலைப்பாகி விட்டது.

உரை :

பசும் பிசிர் ஒள் அழல் — பசிய பொறிகளை உடைய பேரொளி வீசும் அழலானது;

ஞாயிறு பல்கிய மாய மொடு — ஞாயிறு ஒன்று பலவாய்ப் பெருகியதோ எனக் கருதத்தக்க மாயத் தோற்றம் கொண்டு;

சுடர் நிகழ்பு — சுடர் விட்டு எங்கும் எழ;

ஒல்லாமையலொடு — உயிர்களுக்குப் பொறுத்துக் கொள்ள மாட்டா, மயக்கத்தைத் தருவதோடு;

பாடு இமிழ்பு — பெருமுழக்கம் செய்து;

இழிதரும் — திரியும்;

| | | |
|---|---|---|
| மடங்கல் வண்ணம் கொண்ட | — | கூற்றுவன் இயல்பினைக் கொண்ட; |
| கடுந்திறல் | — | பேராற்றலோடு; |
| துப்புத் துறை போகிய | — | போர்த்துறை பலவற்றிலும் கரை கண்ட; |
| கொற்ற வேந்தே | — | வெற்றிவேந்தே; |
| இழை அணிந்து | — | நெற்றியிலும் கழுத்திலும் பொன்னணி அணிந்து; |
| எழுதரும் | — | அணிவகுத்துச் செல்லும்; |
| பல் களிற்றுத் தொழுதியோடு | — | பலவாகிய களிற்றுக் கூட்டமும் |
| மழையென மருளும் | — | மழைமேகமோ என மருளுப் பண்ணும்; |
| பல்தோல் | — | கரியதோலால் ஆன கிடுகு ஏந்திய வீரர் திரளும்; |
| எஃகுப்படை அறுத்த | — | எஃகால்ஆன வாளும்வேலும் ஏந்திய பகைவர் படையை ஊடறுத்த; |
| கொய்சுவல் புரவியொடு | — | கொய்யப்பட்ட பிடரியினையுடைய குதிரைப்படையும் நிறைந்த நின் படை; |
| மைந்துடை ஆர்எயில் | — | மிக்கவன்மை வாய்ந்த கடத்தற்கரிய பகையரசர் அரண் மதிலின்; |
| புடைபட வளைஇ வந்து | — | பக்கத்தே நெருங்க வந்து; |
| புறத்து இறுக்கும் | — | மதில் புறத்தே முற்றுயிருக்கும்; |

புனல் பொரு கிடங்கின் — நீர் மிகுந்து கரையை அலைக்கும் அகழியினையும்

வரைபோல் இஞ்சி — மலைபோலும் மதிலினையும் கொண்டமையால்;

அணங்குடைத் தடக்கையர் — தம்மோடு பொருந்தாதாரை, அணங்கு போல் வருத்தும் வலிய பெரிய கையினராகிய நின் பகைவர்;

தோட்டி செப்பி — முனை வளைந்த தோட்டி போல் தலைவணங்கிப் பணிமொழி கூறி;

பணிந்து — நின் தாள் வணங்கி;

திறை தருப வராயின் — திறை செலுத்துவராயின்

புல்லுடை வியன் புலம் — புல் நிறைந்த பரந்தமேய் புலத்தில்;

பல் ஆ பரப்பி — பல ஆனிரைகளை மேய விட்டு;

வளனுடைச் செறுவின் — வளம் பொருந்திய வயலில்

விளைந்தவை உதிர்ந்த — விளைந்து முற்றிய கதிரினின்றும் உதிர்ந்த;

களன் அறு குப்பை — களத்தில் சேர்த்து, அடித்துக், கடாவிட்டுத் தூற்றுதல் போலும் களப் பணிகள் தேவைப்படாமலே கொண்ட நெற் குவியலை

காஞ்சி சேர்த்தி — காஞ்சி மரத்தின் அடியில் தொகுத்து வைத்து;

| | | |
|---|---|---|
| அரியல் ஆர்கை | — | கள்ளுண்ணும்; |
| வன்கை வினைஞர் | — | தொழில் ஆற்றி வலிவு கூடிய கையினராகிய உழவர்; |
| அருவி ஆம்பல் | — | கிடைத்தற்கு அரியதாகிய ஆம்பல் மலரை; |
| மலைந்த சென்னியர் | — | அணிந்த தலையினை உடையராய்; |
| ஆடுசிறை வரி வண்டு ஓப்பும் | — | பறக்கும் சிறகையும், வரி வரியான கோடுகளையும் கொண்ட வண்டுகளை ஓட்டும்; |
| அவர் அகன் தலை நாடு | — | பணிந்த அப்பகைவரின் அகன்ற பெரியநாடு; |
| பாடல் சான்ற | — | புலவர் பாடும் புகழ் உடையவாயின. (எ—று) |

கொற்றவேந்தே (9) நின் பகைவர் (12) தோட்டி செப்பிப் (11) பணிந்து திறை தருபராயின் (12) அவர் அகன்தலை நாடு (19) பாடல் சான்ற (19) எனக் கூட்டி வினை முடிவு செய்க.

# 3. அருவி ஆம்பல்

பாரி மறைவிற்கும், அவன் மகளிரைப் பார்ப்பாரு பால் ஒப்படைத்து வடக்கிருந்து உயிர் துறப்பதற்கும் இடைப்பட்ட காலத்தைக், கபிலர் செல்வக் கடுங்கோ வாழியாதனோடு கழித்தார். அப்போது, கடுங்கோ பால் குடிகொண்டிருந்த அரிய பண்பு நலங்களையெல்லாம் உணர்ந்து கொண்டார்.

"பணியுமாம் என்றும் பெருமை;" "எல்லார்க்கும் நன்றாம் பணிதல் "பணிவுடையன் இன்சொலன் ஆதல் ஒருவற்கு அணி" "குலம் வேண்டின் வேண்டுக யார்க்கும் பணிவு". "பெருக்கத்து வேண்டும் பணிதல்" எனப் பணிவுடைமையின் சிறப்பு, அடுக்கடுக்காகக் கூறப்பட்டிருந்தாலும், தன்னால் பணியத்தக்க பெருமை வாய்ந்த ஆன்றோர், சான்றோர், அறவோர் அல்லாத, பகைவர் போலும் பண்பிலார் முன் பணிதல், பேரரசர்க்கு அழகாகாது

பாண்டியன் பல்யாக சாலை முது குடுமிப் பெருவழுதிக்கு அறிவுரை வழங்கும் புலவர் காரிகிழார், "வேந்தே! உன் வெண் கொற்றக்குடை, முனிவர்களாலும் போற்றி வணங்கப் படும் முக்கண் செல்வனாம் சிவன் இடங் கொண்டிருக்கும் கோயிலை வலம் வரும் போது மட்டுமே தாழ்வதாக! உன் தலை, நான்மறை அறிந்த அந்தணப் பெரியோர்கள் உன்னை வாழ்த்தி உயர்த்தும் அவர் கைகட்கு மட்டுமே வணங்குமாக', ("பணியியர் அத்தை

நின்குடையே, முனிவர் முக்கண் செல்வர் நகர் வலம் செயற்கே! இறைஞ்சுக, பெரும! நின் சென்னி, சிறந்த நான் மறை முனிவர் ஏந்துகை எதிரே" (புறம் : 6)—என இறைவனுக்கும். இறைவழிபாடாற்றும் அறவோர்க்கும் மட்டுமே பணிக எனக் கூறுவது காண்க.

செல்வக் கடுங்கோ, இச் செந்நெறி உணர்ந்தவன். அதனால், நான் மறை உணர்ந்து, ஓதல் முதலாம் அறுவகை ஒழுக்கம் மேற் கொள்ளும் பார்ப்பனரைக் கண்ட அளவே பணிந்து விடுவான். அவர் அல்லாத பிற எவராயினும் அவர் முன் பணிந்து போதலை அறியாதவன் அவன்.

ஒருவர்க்கு, வணங்காத் தலை மட்டும் இருந்தால் போதாது. ஒடுங்கா உள்ளமும் வேண்டும். உள்ளத்து அனையது உயர்வு என்பர் திருவள்ளுவர் உள்ளுவ எல்லாம் உயர்வுடையனவாகவே இருத்தல் வேண்டும் இத்துணை உயர்வுடைய ஒன்றை அடைதல் நம்மால் இயலுயா என ஏங்கி, ஒடுங்கிய உள்ளம் உடையராகி விடுதல் கூடாது.

ஒடுங்கா உள்ளம் உடைமையே ஒருவரின் ஆண்மைக்கு அழகுதர வல்லதாம். அத் தகு ஒடுங்கா உள்ளம் பெற்று உயர்ந்தவன் கடுங்கோ. செல்வக் கடுங்கோவின் இச் சிறப்பினைக் கபிலர், "ஒடுங்கா உள்ளத்து, ஓம்பா ஈகை, கடந்தடு தானைச் சேரலாதன்" (புறம் :8) எனப் புறத்திலும் பாராட்டியுள்ளார்.

"அச்சம் உடையார்க்கு அரண் இல்லை;" "அச்சமே கீழ் மக்களது ஆசாரம்" என அச்சம் உடைமையைக் கண்டிப்பதும் "அஞ்சாமை அல்லால் துணை வேண்டா"; "அஞ்சாமை, ஈகை, அறிவு, ஊக்கம் இந்நான்கின் எஞ்சாமை வேந்தர்க்கு இயல்பு "என அஞ்சாமையை வரவேற்பதும் உலகியல்பு. என்றாலும், சிற்சில இடங்களில் அச்சங் கொள்வது வரவேற்கத் தக்கதாகவும், அஞ்சாமை வெறுத்துக் கைவிடத் தக்கதாகவும் அமைந்து விடுதலும் உண்டு.

திருவள்ளுவர், "அஞ்சுவது அஞ்சல் அறிவார் தொழில்"; "விழுமியார் அஞ்சுவர் தீவினை என்னும் செருக்கு"; "தீயவை தீயபயத்தலால், தீயவை தீயினும் அஞ்சப் படும்" என அஞ்சுவதை வரவேற்பதும், "அஞ்சுவது அஞ்சாமை பேதமை" "தீவினையார் அஞ்சார் தீவினை என்னும் செருக்கு" என அஞ்சாமையைக் கண்டிப்பதும் காண்க. செல்வக்கடுங்கோ பால் அஞ்சாமையேமிஞ்சி நிற்குமாயினும், நண்பர்கள் பால் கொண்ட கண்ணோட்ட மிகுதியால், ஓரோவழி அவர்க்கு அஞ்சுவதும் செய்வன்.

ஒரு மாவீரனின் மார்புக்கு அழகு தருவது, அணிந்திருக்கும் பன்னிற மலர்மாலையோ, பூசியிருக்கும் நறுமணச் சந்தனமோ அன்று. பகைவரால் அலைக் கழிக்கப் படாமையும், அவன் உரிமை மகளிரால் அலைக் கழிக்கப் படுதலுமே, அம் மார்பிற்கு 'மாண்பாகும். மலைப்பரும் அகலம் மதியார் சிலைத் தெழுந்து' (புறம் : 78;) "இளையோர்க்கு மலர்ந்த மார்பினை" (சிறுபாண்:232); "மகளிர் மலைத்தல் அல்லது மள்ளர் மலைத்தல் போகிய சிலைத்தார் மார்ப" (புறம் :10); எனப் புலவர்கள் கூறுவது காண்க

பகைவர்க்கு அரிதாம் செல்வக் கடுங்கோவின் மார்பு அவன் உரிமை மகளிர்க்கு எளிதாம். பகைவர்க்கு இன்னான் ஆம் கடுங்கோ அவன் உரிமை மகளிர்க்கு இனியனாம். வளைந்து வானவில் போலும் பன்னிற மலர்களால் ஆன மாலை கிடந்து அலைக்க, மணங் கமழும் சாந்து பூசப்பெற்ற செல்வக் கடுங்கோவின் மார்பின் மீது பாய்ந்து அதை மலர்த்துவது என்பது, பகைவரால் நெஞ்சத்தாலும் நினைத்துப் பார்க்க இயலாத ஒன்று. அத்துணைப் பேராற்றல் வாய்ந்தது. ஆனால், அம்மார்பு, அவன் உரிமை மகளிரைக் கண்டதுமே அவரை விரைந்து ஏற்றுக் கொள்ள விரிந்து மலர்ந்து விடும்.

**உள்ளத்தால் பொய்யாது ஒழுகின் உலகத்தார்**
**உள்ளத்துள் எல்லாம் உளன்''**

"பொய்யாமை அன்ன புகழில்லை": "எல்லா விளக்கும் விளக்கு அல்ல; சான்றோர்க்குப் பொய்யா விளக்கே விளக்கு" எனப் பொய்யாமையின் பண்பு பாராட்டுவர் திருவள்ளுவர். சொன்ன சொல்லை, கொடுத்த வாக்குறுதியைக் காப்பது, இயல்பான நிலையில் எவர்க்கும் எளிது. ஆனால், ஒருவர் பேரிடர்க்கு உள்ளாகி, சொன்னபடி நடந்து காட்டினால், வாழ்வே நிலை குலைந்து இல்லாகிப் போய் விடும் என்ற நிலைக்கு உள்ளாகி விட்ட போதும், சொன்ன சொல்லைக், கொடுத்தவாக்குறுதியை, மறவாது செயலாற்றல் என்பது செயற்கரிய செயலாம். "நிலம் புடை பெயர்வராயினும், கூறிய சொல் புடை பெயர்தலோ இலரே" (நற்றிணை—289) என அப்பண்பு நலனைப், புலவர், பாராட்டவும் செய்வர்.

சொன்ன சொல்லை, ஒருவர்க்குக் கொடுத்த வாக்குறுதியைக் காப்பதாயின் நானிலம், தன் இயல்பு கெட்டு, நிலை குலைந்து போகும் என்றாலும், சொன்ன சொல்லை, கொடுத்த வாக்குறுதியைப் பொய்த்துப் போக விடாது காக்கும் உள் உரம் வாய்ந்தவன் செல்வக் கடுங்கோ.

பணிந்து திறை தருவார் நாடு பல் வளமும் பெற்று அமைதி வாழ்வு வாழப் பார்த்திருக்கும் செல்வக் கடுங்கோ, "கடல் போலும் அகழி, மலை போலும் மதில்களைக் கொண்ட அரண் உடையேம்; அளக்கலாகாச் செல்வம் உடையேம்" எனச் செருக்கி நிற்பாரை வாழ விடான். அழிக்கலாகாதது என அவர் கருதியிருக்கும் அவர் அரணை அழித்து, அவர் செருக்கிற்குக் காரணமாய் ஆங்குக் குவித்து வைத்திருக்கும் செல்வக் குவியலைத் தனதாக்கிக் கொள்ளத் துணிந்து விடுவன்.

ஒருமுறை சேர நாட்டு எல்லைக்கண் உள்ள வேற்று மொழி பேசும் கொற்றவர் இருவர், அரண் உடைமையாலும் அளவிலாப் பொருள் உடைமையாலும். அவனைப் பணிய மறுத்து, எதிர்த்து நின்றனர். அவ்வளவுதான், மலையையும் மண்ணாக்கும் கொடிய இடியேறு போலக் கடுஞ்சினம் கொண்டான். அரண் அழிக்கப் போவார் வழக்கமாகச் சூடும் உழிஞைப் பூ மாலை அணிந்து புறப்பட்டு விட்டான். தமிழர் பெரும்படை பின் தொடர்ந்து விட்டது. வாட்போர் வல்ல அப்படைக்குத் தானே தலைமை தாங்கிச் சென்ற செல்வக் கடுங்கோ, ஒரே போரில், ஒரே களத்தில் அவ்விரு அரசர்களையும் வென்று துரத்தி விட்டு, அவர் அரணையும் இல்லையாக்கி, ஆங்குக் கொட்டிக் கிடந்த அவர்தம் பொருட் குவியலைக் கைக் கொண்டு திரும்பினான். அவன் மேற்கொள்ளும் போர் அனைத்தும், இவ்வாறு வெற்றி தரும் போராகவே அமைந்து விட்டன.

செல்வக் கடுங்கோ, இவ்வாறு செல்லும் இடமெங்கும் வெற்றிகளே பெற்று வீறுமிகு கொற்றவனாய் விளங்குவது கண்ட அவன் பகைவர் படையைச் சேர்ந்த வீரரெல்லாம், ஆற்றல் மிகு மறவர், அழிக்கலாகா ஆண்மையாளர், அமர் மேம்படும் அருஞ்சமர் வல்லார் என்ற தம் பழம் பெருமையெல்லாம் பாழ்பட்டு அழிந்து போகத் தம்மை வென்று அழிக்கும் விறல் படைத்த வாழியாதனோடு மேலும் பகை கொண்டிருப்பது போர்த்திறம் ஆகாது என அறிந்து, அந்நிலையே அவனை அடைந்து, அவன் தாள் பணிந்து; 'வேந்தே! வாழ்க நின் கொற்றம்! இன்று முதல் யாம் நின் ஏவல் கேட்கும் நின் இளையர் ஆயினேம், நின் சிந்தை வழிச் செயல்படும் செயல் வீரராயினேம். எம்மை ஏற்று அருள் புரிவாயாக;'' என அவன் சார்புடையவராக மாறி நின்றனர்.

படைவீரர் பணிந்து வந்தாராக, செல்வக் கடுங்கோவும் அவ்வீரர்கள் தன்னோடு போரிட்டது தங்கள் விருப்பத்தால்

அன்று; பகை வேந்தர் ஏவலால்; ஆகவே பிழை அவருடையது அன்று. ஆகவே, ஏற்று அருள் புரியத் தக்கவரே என்ற எண்ணம் உடையவனாகி, அவர்என்ன பலரையும், தன் பணியாளராக ஏற்றுக் கொண்டான். இத்தகு போர்த் திறத்தால், அவனை வலிய வந்தடைந்த வெற்றிகள் மேலும் பலவாம். இவ்வாறு, தான் பிறந்த சேரர் குடியின் பீடும் பெருமையும் பாரெல்லாம் சென்று பரவ வழி வகுத்தமையால், அவனைச் 'சேரர் குலம் விளங்க வந்த விழுமியோன்'' என உலகம் பாராட்டலாயிற்று.

சேரர் தலைநகரில் வாழ்ந்து, தாம் நேரில் கண்டறிந்த செல்வக் கடுங்கோவின் பெருமையினும், அந்நாட்டுச் சிறந்தார் வழிக் கேட்டறிந்த அவன் சிறப்பு, இவ்வாறு மிகப் பெரிதாதல் அறிந்து அளவிலா மகிழ்ச்சி கொண்டார் கபிலர்.

இவ்வாறு, எல்லா வகையினும், நல்லோனாய் வாழக் காணவே, அத்தகையான் இவ்வுலகில், நெடிது வாழ வேண்டும் என விரும்பினார். உலகியல் அறங்கள் அழிவுற்றுப் போகாது நின்று வாழ்வது, இவன் போலும் நல்லார் சிலர் வாழ்வதினாலேயே என்று ஆன்றோர்கள் உரைத்துள்ளனர். ''பண்புடையார்ப் பட்டுண்டு உலகம்'' என்கிறார் வள்ளுவர். ஆகவே, இவ்வுலகம் அழியாது வாழ வேண்டுமாயின், அத்தகு நல்லோரை, ''இவ்வுலகத்துச் சான்றோர் செய்த நன்று உண்டாயின்...... கொண்டல் மாமழை பொழிந்த நுண் பல் துளியினும் வாழிய பலவே'' (புறம் : 34) எனப் புலவர் பெருமக்கள் வாழ்த்துவது வழக்கம்.

நல்லோர்க்கும் நல்லோனாய் விளங்கும் வாழியாதனும் நெடிது வாழ வேண்டும். அதற்கு இவ்வுலகமும் நல்வினை உடையதாதல் வேண்டும். அதற்கு அத்தகு ஆகூழ் உளதாயின், இவன் ஊழி பல வாழ வேண்டும். வெள்ளம் என்னும் பேரெண் அளவினதான ஊழி பலவும் வாழ

வேண்டும் ஒரு வெள்ள ஊழி அளவும் வாழ்ந்தால் போதாது, ஆயிரம் வெள்ள ஊழி அளவும் வாழ வேண்டும். அதுவும் காலாது, அளந்து அறுதியிட்டு உரைக்கலாகா, ஆம்பல் என்னும் ஒரு பேரெண்ணோடு உறழ்ந்த ஆயிர வெள்ள ஊழி அளவும் வாழ வேண்டும் என்று விரும்பினார் கபிலர். அப்பெருவேட்கை அவரை மெய்ம் மறக்கச் செய்து விடவே, அந்நிலையே, "வாழி ஆத! வாழ்க! வாழி யாத! வாழிய பலவே! ஆம்பல் ஆயிர வெள்ள ஊழி வாழி! வாழி!" என வாழ்த்தத் தொடங்கி விட்டது அவர் வாய்.

"பார்ப்பார்க்கு அல்லது பணிபு அறியலையே;
பணியா உள்ளமொடு அணிவரக் கெழீஇ,
நட்டோர்க்கு அல்லது கண்அஞ் சலையே;
வணங்குசிலை பொருத நின் மணங்கமழ் அகலம்
மகளிர்க்கு அல்லது மலர்பு அறியலையே:
நிலம் திறம்பெயரும் காலையாயினும்.
கிளந்த சொல் நீ பொய்ப்பு அறியலையே;
சிறியிலை உழிஞைத் தெரியல் சூடிக்
கொண்டி மிகைபடத் தண்தமிழ் செறித்துக்
குன்று நிலதவிர்க்கும் உருமின் சீறி
ஒருமுற்று இருவர் ஓட்டிய, ஒள்வாள்
செருமிகு தானை வெல் போரேயே!
ஆடுபெற்றழிந்த மள்ளர் மாறி
நீ கண்டனையேம் என்றனர்; நீயும்
நும் நுகம் கொண்டு இனும் வென்றோய்! அதனால்
செல்வக் கோவே! சேரலர் மருக!
கால் திரையெடுத்த, முழங்கு குரல் வேலி
நனந்தலை உலகம் செய்த நன்று உண்டெனின்,
அடை அடுப்பு அறியா அருவி ஆம்பல்
ஆயிர வெள்ள ஊழி,
வாழி! ஆத! வாழிய பலவே!"

(பதிற்றுப் பத்து-63)

இதுவும் அது
பெயர் = அருவி ஆம்பல்

## உரை

| | | |
|---|---|---|
| செல்வக் கோவே | — | செல்வக் கடுங்கோ எனும் சீர் மிகு பெயர் உடையாய்; |
| சேரலர் மருக | — | சேரர் குடிவந்த சிறந்தோனே; |
| வாழியாத | — | வாழியாதன் என்னும் வளமார் பெயர் உடையாய்; |
| பார்ப்பார்க்கல்லது பணிபு அறியலை | — | ஆன்ற விந்தடங்கிய சான்றோராம் பார்ப்பார்க்கல்லது, பிறர்க்குத் தலைவணங்குவது அறியாய். |
| பணியா உள்ளமொடு அணிவரக் கெழீஇ | — | இவ்வாறு பகைவரைப் பணியா உள்ளம் உடைமையால் அறகுறப் பொருந்தி, |
| நட்டார்க்கல்லது கண்ணஞ்சிலை | — | நல்லன கூறும் நண்பர் மாட்டல்லது பிறர்பால் அஞ்சுவது அறியாய், |
| வணங்குசிலை பொருத | — | வளைந்த வானவில் போலும் மாலை கிடந்து அலைக்கும், |
| நின் மணம் கமழ் அகலம் | | மணம் கமழும் நின் அகன்ற மார்பு. |
| மகளிர்க்கு அல்லது மலர்ப்பு அறியலை | — | நின் உரிமை மகளிராம் மனைவியரை ஆரத் தழுவுவதற்கு மலர்ந்து காட்டுவதல்லது, பகைவர் போலும் பிறரால் மலர்ந்து காட்டுவது அறியாய். |

| | | |
|---|---|---|
| நிலம் திறம் பெயரும் காலை யாயினும் | — | நிலங்கள் தம் இயல்பு கெட்டு நிலைகுலைந்து நெடும் பஞ்சம் வந்துற்ற காலத்திலும், |
| கிளந்த சொல் நீ பொய்ப்பு அறியலை | — | வழங்கிய வாக்குறுதிகள் பொய்த்துப் போதலைச் செய்து அறியாய். |
| சிறியிலை உழிஞைத் தெரியல் சூடி | — | பகைநாட்டுப் பேரரண்களைக் கைக்கொள்ளும் கருத்துடைய னாகி, அக்கருத்து அறிவிக்கும், சிறிய இலைகளையுடைய உழிஞைப் பூமாலை அணிந்து |
| கொண்டி மிகைபட | — | பகை நாட்டிலிருந்து கைப் பற்றிக் கொணரும் பொருட்கள் அளவிறந்தனவாக. |
| தண்தமிழ் செறித்து | — | தண்டமிழ் நாட்டு வீரர்களா லான படையையே செலுத்தி. |
| குன்று நிலை தளர்க்கும் உரு மின் சீறி | — | மலைகளையும் பிளந்து மண் ணாக்கும் இடியேறுபோலும் கடுஞ்சினம் கொண்டு. |
| ஒரு முற்று இருவர் ஓட்டிய | — | ஒரே களத்தில் இரு பேரரசர் களை வென்று ஓட்டிய. |
| ஒள் வாள் | — | ஒளி வீசும் வாட்படை யினையும். |
| செருமிகுதானை | — | போர் என்றதும் பூரிக்கும் நாற் படையினையும். |
| வெல்போரோயே | — | எங்கும் எப்போதும் வெற்றியே காணும் போரினையும் உடையவனே. |

ஆடு பெற்றழிந்த மள்ளர் — பண்டெல்லாம் வாழ்த்தும் பாராட்டும் வகைவகையாகப் பெற்றிருந்தும், உன்னைப் பகைத்துக்கொண்டு உன்னோடு போரிட்டமையால், அவற்றை இழந்து விட்ட பகைப் படை வீரர்கள்.

மாறி — பகைவர் படையில் பணியாற்றுவது விடுத்து, உன் படையில் சேர்ந்து பணியாற்றும் உள்ளம் உடையவராகி வந்து.

நீ கண்டனையேம் என்றனர் — உன் உள்ளக் கருத்து யாதோ அதுவே எம் கருத்தாக, உன் ஏவல் கேட்டு வாழ்வேம் என்று கூறுவராயினர்,

நீயும் நும் நுகம் கொண்டு இனும் வென்றோய் — நீயும் உன் சேரர்குலத்தோர்க்கு உரிய கோல் செம்மையே துணையாகக் கொண்டு மேலும் பல வெற்றிகளைக் கொண்டாய்.

அதனால், கால் எடுத்த — காற்று வீசி எழுப்பிய,
திரை முழங்கும் அலைகள் முழங்கும் முழக்கத்
முரல் வேலி — தையுடைய கடலை வேலியாகக் கொண்ட

நனந்தலை உலகம் — பரந்த இவ்வுலகில் வாழும் மக்கள்.

செய்த நன்று உண்டு எனின் — முன்னைப் பழம் பிறப்பில் செய்த நல்வினைகள் இருக்குமாயின்.

| | |
|---|---|
| அடை அடுப்பு அறியா | — இலைகள் வரிசையாகக் கிளைத்தல் இல்லாததும், |
| அருவி | — மலர் ஈன்று அறியாததும் ஆகிய, |
| ஆம்பல் | — ஆம்பல் என்னும் பெயரால் குறிக்கப்படுவதாகிய ஒரு பேரெண் ஆகியதும் |
| ஆயிர வெள்ள ஊழி | — ஆயிரம் ஆயிரங்களாகப் பெருகிய வெள்ளம் என்னும் பேரெண் ஆகியதும் ஆகிய ஊழிக் காலம் அளவும். |
| வாழிய | — வாழ்வாயாக. எ. று. |

ஒரு நீர்க்கொடி, ஒரு பேரெண் ஆகிய இரு பொருளும் உடையதான ஆம்பல் என்ற சொல்லைப், பேரெண் குறிக்கும் பொருளில் வழங்க நினைத்த ஆசிரியர், அதை, இலை இட்டு அறியாததும், மலர் ஈன்று அறியாததும் ஆன ஆம்பல், என, அம்மலர்க்குரிய மாண்புகளை மறுத்தல் வாய்பாட்டால் கூறிய நயம் கண்டு இப்பாட்டிற்கு 'அருவி ஆம்பல்' என்ற அவ்வழகிய தொடரே பெயராய் அமைந்தது

# 4. உரைசால் வேள்வி

கல்வி, செல்வம், ஆண்மை ஆகிய இவற்றில் சிறப்புறினும், புகழ் கண்டாம் ஆயினும், ஈகையில் சிறப்புறுதலால் உண்டாகும் புகழே ஒப்புயர்வற்ற புகழாம். "உரைப்பார் உரைப்பவை எல்லாம் இரப்பார்க்கு ஒன்று ஈவார் மேல் நிற்கும் புகழ்." "ஈதல் இசைபட வாழ்தல்" என திருவள்ளுவர் கூறுவது காண்க.

அறிவு பெறுதல், பிறர் துயரைத் தன் துயராகக் கொண்டு, உற்றுழி உதவி, உறுபொருள் கொடுத்து, அது தீர்ப்பதற்கே. அதற்குப் பயன்படாத அறிவு, உண்மை அறிவாகாது. "அறிவினான் ஆகுவது உண்டோ, பிறிதின் நோய், தன் நோய் போல் போற்றாக்கடை?" என்ற வள்ளுவர் வினாவினைக் காண்க.

செல்வம் சேர்ப்பது எல்லாம், ஈதலுக்காகத்தான். "தாளாற்றித் தந்த பொருள் எல்லாம், தக்கார்க்கு வேளாண்மை செய்தற்பொருட்டு:" "சுற்றத்தால் சுற்றப் பட ஒழுகல், செல்வந்தான் பெற்றத்தால் பெற்ற பயன்"; "செல்வத்துப் பயனே ஈதல்;" செல்வர்க்கு அழகு செழுங் கிளைதல் தாங்குதல்"; "தக்கவன் ஒருவர் வாழத் தன் கிளை வாழ்ந்தது" என்ற ஆன்றோர் உண்மைகளைக் காண்க

ஆண்மையும் பிறர் வறுமையும் தீர்ப்பதற்கே. பெரு நிலம் முழுதாளும் வேந்தர்களும், குறுநிலத் தலைவர்களும்

போர் மேற்கொள்வது, பகைவர் பொருள் கொண்டு பரி சிலர்க்கு வழங்கவே.

"இன்னாவாகப் பிறர் மண்கொண்டு
இனிய செய்திநின் ஆர்வலர் முகத்தே"

எனப், பாண்டியன் பல்யாக சாலை முதுகுடுமிப் பெரு வழுதியை நெட்டிமையார் பாடுவது காண்க (புறம்-12)

"ஆரெயில் பலதந்து
அவ்வெயில் கொண்ட செய்வுறு நன்கலம்
பரிசின் மாக்கட்கு வரிசையின் நல்கி" (புறம்-6)

"பலர் புறம் கண்டு அவர் அருங்கலம் தரீஇப்
புலவோர்க்குச் சுரக்கும் அவன் ஈகை மாரி"
(மலைபடு கடாம் 71-72)

என்ற பாராட்டுரைகளைக் காண்க.

இரவலர் வந்து தம் இன்மை கூறி இரந்தால், உண்ணாது வாடும் அவர் வயிற்றைக் காட்டி, "இவர் துயர் தீர்க்க உதவும் வேற்படையினை வடித்துத் தா" எனத் தன்னூர்க் கொல்லனை இரந்து நிற்கும் ஈர்ந்தூர் கிழான் தோயன் மாறனைக், கோனாட்டு எறிச்சலூர் மாடலன் மதுரைக் குமரனார் பாராட்டுவது காண்க. (புறம் :180)

ஆகக் கல்வி, செல்வம், ஆண்மை போன்றவைகளும், ஈத்துப் பெறும் புகழுக்குத் துணை புரிந்த வழியே பயன் உடையவாக மதிக்கப் பெறும்.

கொடுத்துப் புகழ் பெறுவது ஒன்றைத் தவிர்த்துத், தப்பாது வெற்றியே கொள்ளும் வாட்படை உடைமையால் கொற்றமும், அவ்வெற்றி எட்டுத் திக்கும் எட்ட கொட்டி

முழக்கும் முரசும், அவ்வெற்றியின் விளைவாகப் பெற்ற பொற்குவியலும் கொண்டு வாழ்ந்த கொற்றவர் ஒருவர் அல்லர், இருவரல்லர்; ஆயிரம் ஆயிரவர். ஆனால் அவர்தம் வெற்றி முரசின் முழக்கம் மக்கள் காதுகளில் இன்று ஒலிக்கிறதா என்றால் இல்லை: அது எப்போதோ ஒலி அவிந்து போய் விட்டது.

வெற்றிக்கு வழி வகுத்த அவர் கொற்றவாளை, இன்று காண இயலுமா என்றால் இல்லை. அது எப்போதோ இல்லாகி விட்டது. அவர் ஈட்டி வைத்த பொற்குவியலும் இப்போது இல்லை. அது மண்ணோடு மண்ணாக மறைந்தே விட்டது. அவர் ஆயிரவர் ஆயிரவர் தாம். ஆனால், அவருள் ஒருவராவது அழியாது வாழ்கின்றனரா என்றால் இல்லை. அவர் அனைவருமே அழிந்து போயினர். "அரசர்க்கு அமைந்த ஆயிரம் 'கோட்டம்" என்கிறது மணிமேகலை. கடம்பு எறிந்தவன்; இமயத்துச் சிலை பொறித்தவன் எனப் புகழ்ந்து பாராட்டப் பெற்றவ ரெல்லாம், இறவா வரம் பெற்று விடவில்லை. அவருள் ஒருவர் கூட இப்போது இல்லை. "கடல் கடம்பு எறிந்த காவலன் ஆயினும், விடர்ச் சிலை பொறித்த விறலோன் ஆயினும்... மீக்கூற்றாளர் யாவரும் இன்மையின் (சிலம்பு : நடுகல் : 135—149) என்கிறார் இளங்கோவடிகளார்.

கல்வி, செல்வம். கொற்றம் தரும் வாழ்வினும் கொடை தரும் வாழ்வே விழுமியது என்று இவ்வுண்மைகளை உணர்ந்து, அவ்வழி வாழும் வல்லாளன் செல்வக் கடுங்கோ என அறிந்து அவனைப் பாராட்டிப் பெருமை செய்ய அவன் நாடு நோக்கிப் புறப்பட்டார் கபிலர்.

ஓரிடத்திலிருந்து பிறிதோரிடத்துக்குக் கால்நடையாகவே செல்ல வேண்டியிருந்த பழங்காலத்தில், மக்கள் பொதுவாகப் பகற்போதைய வழிநடையினை விரும்புவ

தில்லை. விடியற் போதிலேயே அது மேற் கொள்வர். ஞாயிற்றின் கதிர்கள் கக்கும் வெப்பக் கொடுமை இல்லாத, வானத்து விண்மீன் கூட்டங்கள் கண் சிமிட்டும் இன்பம் மிகும் காரிருள் சூழ்ந்த விடியற்போதில்தான், கண்ணகியும் கோவலனும், கௌந்தி துணைவரப், புகார் நகர் விட்டுப் புறப்பட்டனர். "வான் கண் விழியா வைகறை யாமத்து, மீன் திகழ் விசும்பின் வெள்மதி நீங்கக் காரிருள் நின்ற கடைநாட் கங்குல்.. நீள் நெடும் வாயில், நெடுங் கடை கழிந்து" (சிலம்பு : 10; 1-2) என்ற வரிகளைக் காண்க.

கபிலரும் விடியற்போதில் புறப்பட்டு விட்டார். வானத்தில் சிறியவும் பெரியவுமான விண்மீன்களின் கண் கொள்ளாக் காட்சியைக் கண்டு களிப்புற்றவாறே சென்று கொண்டிருந்தார். விடியற்போது மெல்ல மெல்லக் கழியத் தொடங்க, வானத்தில் காணப்பட்ட மீன்கள் ஒவ்வொன் றாக மறைந்து கொண்டே வந்தன. இறுதியில், கீழ் வானத்தே, ஞாயிறு, தன் செந்நிறக் கதிர்களை விரித்துக் கொண்டே எழுந்து விட்டான். அவ்வளவுதான். காரிருள் வானில் கண்சிமிட்டிக் கொண்டிருந்த விண்மீன்களில் ஒன்று கூடப் புலப்பட்டிலது. அது, சேரர் குலத்தில் செல்வக் கடுங்கோ தோன்றவே அதற்கு முன்னர்ச் சிறக்க வாழ்ந் திருந்த பேரரசர்களும், சிற்றரசர்களும் ஒருசேர மறைந்து போக, அவர்களை வெற்றி கொண்ட செல்வக் கடுங்கோ செயலை நினைவூட்ட, செல்வக் கடுங்கோவின் அக்கொற் றத்தை, ஞாயிறு தோன்ற, விண்மீன் கூட்டம் இல்லாமற் போன நிகழ்ச்சியோடு இணைத்துப் பார்த்து நெஞ்சு மகிழ, அவ்வெற்றிக்குத் துணையாய் நின்ற அவன் வலிய கால்கள், மேலும் பல்லாண்டு வலிவோடு திகழ்வனவாக, என வாய் வாழ்த்த, அவர் மேலும் செல்லத் தொடங்கினார்.

கடற்கரையை ஒட்டிய நாடு. எண்ணிலா உப்பங்கழி களால் நிறைந்திருந்தது. நீர் கருநிறம் காட்டுமளவு, அக்கழிகள் ஆழ்ந்து இருந்தன. அந்நிலத்துக்கே உரிய

நெய்தல் மலர்கள், அந்நீர் மறையுமளவு மலர்ந்து கிடந்தன. நெய்தல் மலரின் புற இதழ்கள், நீருண்ட கார்மேகம் போல் கறுத்துக் கவின் பெற்றிருந்தன. நெய்தலின் புற இதழ்க் கருமை, கார்மேகத்தை நினைவூட்டவே. கபிலர், அக்கார் மேகம் நீர் குடிக்கும் கடலை நோக்க, அந்நேரம், கடல்நீர் உண்டு, கருத்துக் கொண்டல் கொண்டலாக எழுந்த மேகம், கண்ணிமைக்கும் நேரத்தில் பெருமழையாகப் பெய்து ஓய்ந்தது.

மழை ஓய்ந்ததும் அவ்விடம் விட்டுப் புறப்பட்ட கபிலர், இடைவழியில், மக்கள், வயல் வளப் பெருக்கால் பசி ஒழிய வும், உணவுப் பற்றாக்குறை தீரவே பிணி ஒழியவும், பசியும் பிணியும் இல்லையாகவே அவை காரணமாய் எழும் பகை ஒழியவும் துணை செய்த, அம்மழை தரும் பெரும் பயனை எண்ணி மகிழ்ந்து, அதை வாயார வாழ்த்தும் காட்சியினைக் கண்டுகளிக்கக் கண்டு கொண்டே சென்றார்.

தலைநகர்க்குச் சிறிது சேய்மைக் கண்ணே சென்று கொண்டிருந்தபோது, கூத்தர் முதலாம் இரவலர்கள் எதிரே வந்து கொண்டிருந்தனர். அவர்கள் கால் கடுக்க நடந்து வந்திலர். மாறாக, குதிரை மீதும், குதிரை பூட்டிய தேர் மீதும் அமர்ந்தே வந்தனர். பகைவர் படை வரிசையுட் புகுந்து, அப்பகையாளரின் வாட்படை, வேற்படைகளை அழித்து இல்லையாக்கிய கொற்றம் வாய்ந்தவை என்பதைத் தம் தோற்றத்தாலேயே உணர்த்தும் அக் குதிரைகளின் பிடரி மயிர் நன்கு கத்தரித்து விடப் பட்டிருந்தது. பூட்டப் படவேண்டிய அணிகளில் ஒன்றும் குறைபடாமல் பூட்டப் பட்டிருந்தன தேர்கள்.

இத்தகு பெரு வளத்தோடு வரும் அவ்விரவலர் தலைவ னாம் கூத்தனை அணுகி, "வயிரியர் தலைவ! பரிசில் பொருட்களாகக், குதிரைகளும், தேர்களுமாகவே

கொடுத்துப் பெருமை செய்த செல்வக் கடுங்கோவைக் கண் குளிரக்கண்டீர்களா? அவன் நலமே உள்ளானா? இப்பரிசில் பொருட்களைப் பெற, அவன் தலைநகரில் நீண்ட நாட்கள் தங்கவேண்டி நேர்ந்ததா?'' என்றெல்லாம் கேட்டார் கபிலர்.

கேட்டவர், பெரும் புலவராம் கபிலர் என்பதை அறிந்து கொண்ட வயிரியர் தலைவன், ''புலவர் பெருந்தகையே!'' என அன்பொடு அழைத்து, ''நாங்கள் ஆங்குச் சென்றபோது, அரசியல் பணி காரணமாக அவன் மாளிகை அகத்தே இருந்தான் போலும். அதனால் அவனைக் காண இயல வில்லை; காண முடியவில்லையே ஒழிய, கருதியது கிடைக் காமல் போய்விடவில்லை. தன்னை நாடி வரும் கூத்தர் முதலாம் இரவலர், நெடும்பொழுது காத்திருந்து வருந்துதல் கூடாது என்ற உயர்ந்த உள்ளம் உடையவனாய், மாளிகை வாயிற் புறத்திலேயே தக்கார் சிலரை நிறுத்தி, இரவலர் களைக் கண்ணுற்றபோதே, அவர்களை அன்போடு வர வேற்று அவர்கட்குக் குதிரை முதலாம் பொருட்களைக் கொடுத்து அனுப்புக எனப் பணித்துள்ளான். அதனால், அவன் மாளிகைப் புறத்திலேயே இவ்வளவும் கிடைத்து விடவே, அவனைக் காணவேண்டிக் காத்திருக்காது திரும்பி விட்டோம்'' என்றான்.

மாளிகைப் புறம் போந்து, இரவலர்களை வரவேற்று அவர்க்குப் பரிசில் அளித்து அனுப்புவதற்கும் நேரம் இன்றி அரசியல் பணிகளில் ஆழ்ந்திருக்கும் நிலையிலும்; வரும் இரவலர்க்குப் பரிசில் அளிப்பதற்கு மறவாது வழி வகுத்திருக் கும் செல்வக் கடுங்கோவின் சீரிய செயலைச் சிந்தையில் அசையிட்டவாறே மேலும் நடக்கலானார் கபிலர்.

சிறிது தொலைவு சென்றதும், எதிரே அந்தணர் கூட்டம் ஒன்று வருவது தெரிந்தது. அணுகி வர வர, அவர்கள் வாய், தாம் கற்ற அறநூல் உண்மைகளை ஓயாது எடுத்துரைத்துக்

கொண்டே யிருப்பது கேட்டது. உலகத்து உயர்ந்தோர் அனைவரும் ஒருசேரப் புகழும் சிறப்பு வாய்ந்த வேள்வி யினைச் செய்து முடித்ததற்கு வேண்டியதும், அத்தகு வேள்விகள் பல செய்து முடித்தமையால், மேலும் விளக்கம் பெற்றதுமாகிய கேள்விச் செல்வம் வாய்க்கப் பெற்றவர் அவ்வந்தணர் என்பதைக் கண்டு கொண்டார். அவர் கைகளில், செல்வக் கடுங்கோ வழங்கிய பொன் அணிகள் நிறைந்து ஒளி வீசுவதையும் கண்டார்.

உள்ள இடைவழியை விரைந்து கடந்து, தலைநகர் அடைந்து, அரண்மனையை அணுகிக் கொண்டிருந்தார். அப்போது, அரண்மனை முற்றத்தில் நின்று காவல் மேற் கொண்டிருக்க வேண்டிய களிறு, பாகன் ஆணைக்கு அடங் காது, ஆங்கு நிற்க வெறுத்து முரண்டு பிடித்து அலைவதைக் கண்டார். ஆறெனக் கிடந்து அகன்ற அரசப் பெருந் தெருவின் இருமருங்கிலும் ஒதுங்கியிருந்து, அக்களிற்றின் செயல் நோக்கி நிற்பாரை அணுகிக், களிற்றின் அப் போக் கிற்காம் காரணம் யாது எனக் கேட்டார்.

அவர்கள், "வரும் வழியில், அந்தணர் பெருங் கூட்டம் ஒன்று செல்வதையும், அவர்கள் கொண்டு செல்லும் பொன் அணிகளின் சுமையினையும் கண்டிருப்பீர்; அவற்றை அவர்க்கு வழங்கிய செல்வக் கடுங்கோ, அந்தணர் குலத்து மரபிற்கு ஏற்ப, அணிகளை, அவர் கையில் தண்ணீர் வார்த்தே வழங்கினான். அவ்வாறு நீர் வார்த்துக் கொடுக்கப் பரிசு பெற்ற பார்ப்பனர் ஒருவர் இருவர் அல்லர். மிகப் பலராவர். அவர் கைகளில் அவ்வாறு வார்த்த நீர் ஒழுகி, மாளிகை முற்றம் சேறு பட்டு விட்டது. நாள்தோறும் பழம் மணல் அகற்றிப் புது மணல் பரப்பப் பெறும் இடந் தான் அம்முற்றம் என்றாலும், நீர் வார்க்கப் பரிசில் பெறுவோர் எண்ணிக்கை அளவிறந்ததாகி விடுவதால், முற்றம் எப்போதும் சேறுபட்டே கிடக்கிறது. சேற்றில்

நிற்பது களிறுகளுக்கு ஒவ்வாத ஒன்று. அதனால்தான் இக்களிறும் ஆங்கு நிற்க மறுத்து முரண்டுகிறது'' என விளக்கம் அளித்தனர்.

அது கேட்டு ''ஏற்ற பார்ப்பாருக்கு ஈர்ங்கை நிறையப், பூவும், பொன்னும் புனல்படச் சொரிந்து...இரவலர்க்கு அருங்கலம் அருகாது வீசி வாழ்தல் வேண்டும்'' (புறம்:367) என்ற ஔவையார் அறிவுரையினைக் கேட்டவன்போல், பார்ப்பார்க்குப் பொன் அணிகளைப் புனல் வார்த்துக் கொடுக்கும் பெரியோனாகிய செல்வக்கடுங்கோவை, அங்ஙனமே கண்டு பாராட்ட வேண்டும் என்ற ஆர்வம் உந்த மாளிகையுள் விரைந்தார் கபிலர்.

ஆனால், அரண்மனைக்குள் புதியோர் யாரும் புகுந்து விடாவாறு காத்து நிற்கும் வாயிற்காவலன், கபிலரைத் தடுத்து நிறுத்திப், ''புலவர் ஏறே! செல்வக்கடுங்கோ, அந்தணர்க்கு அருங்கலம் தருவதையும், வயிரியர்க்கு வேழமும், குதிரையும் வழங்குவதையும் ஈங்கு முடித்துக் கொண்டு பாசறைக்குச் சென்றுவிட்டான். காண வேண்டின், ஆங்குச் செல்வீராக'' எனக் கூறிச் செல்லும் வழியையும் விளங்க உரைத்தான்.

செல்வக் கடுங்கோவின் இச்சிறப்பெலாம் கேட்கவே, புலவர், பாசறையை விரைந்து அடைந்தார். ஆங்கு அவர் கண்டதும், கேட்டதும் அவன் கொடை வளத்தை, மாநிலத்திற்கு வளம் சுரக்கும் மாரியினும் மிகுந்து, நாட்டவர்க்கு நலம் சுரக்க வாரி வழங்கும் அவன் பெருமையினை மேலும் பெரிதாக்குவனவாய் இருந்தன.

அன்பு குறையாத சுற்றம் ஒருவனுக்கு வாய்க்குமாயின், அது, அவனுக்கு, ஒன்று பலவாகக் கிளைக்கும் செல்வம் பலவற்றைத் தரும். ''விருப்பு அறாச்சுற்றம் இயையின்,

அருப்பு அறா ஆக்கம் பலவும் தரும்'' (குறள்:522); சுற்றத் தாரை அணைத்துக் கொண்டு, அவரோடு அளவளாவி வாழும் வாழ்க்கையை ஒருவன் இழந்து விடுவனாயின், அவன் செல்வ வாழ்வு, கரையினைப் பெறாதே நீர் நிறைந்த பெருங்குளம் போல் அழிந்தே போகும்.

''அளவளாவு இல்லாதான் வாழ்க்கை குளவளாக்
கோடின்றி நீர் நிறைந்தற்று'' (குறள்:523)

அதனால், தன் பெருஞ்சுற்றம், எப்போதும், தன்னைச் சுற்றியிருக்கும் நிலையினைப் பெறுவதே பெருஞ்செல்வம் பெற்றதன் பயன் ஆகும்.

''சுற்றத்தால் சுற்றப்பட ஒழுகல் செல்வந்தான்
பெற்றத்தால் பெற்ற பயன்'' (குறள்:524).

சுற்றத்தார், இடைவிடாது எப்போதும் தன்னைச் சூழ்ந் திருக்க ஒருவன் விரும்புவனாயின், அவர்கள் வேண்டுவன எல்லாம் கொடுத்தலும், அவர் மாட்டு எப்போதும் இனியனாகவே நடந்து கொள்ளுதல் வேண்டும்.

''கொடுத்தலும் இன்சொலும் ஆற்றின் அடுக்கிய
சுற்றத்தால் சுற்றப்படும்'' (குறள்:525)

என்கிறார் வள்ளுவர்.

இதனை உணர்ந்தவன் செல்வக்கடுங்கோ. அதனால் அவனைச் சூழ, அவனுடைய பெருஞ்சுற்றம் எப்போதும் பிரியாதிருப்பதையும், அவருள், பசியுடையார் எவரும் இல்லாதவாறு, அவர்களை விழிப்போடு போற்றி அணைத் துக் கொண்டிருப்பதையும் கண்டு, அகமகிழ்ந்து போனார் கபிலர். கடுங்கோ பால் கபிலர் கண்ட பெருமையெல்லாம் அழகிய ஒரு பாட்டாக உருவெடுத்துவிட்டன.

"வலம் படு முரசின், வாய்வாள், கொற்றத்துப்
பொலம்பூண் வேந்தர் பலர்தில்; அம்ம!
அறம் கரைந்து வயங்கிய நாவின், பிறங்கிய
உரைசால் வேள்வி முடித்த கேள்வி,
அந்தணர் அருங்கலம் ஏற்ப, நீர் பட்டு
இருஞ்சேறு ஆடிய மணல் மலி முற்றத்துக்
களிறு நிலை முனைஇய, தார் அரும் தகைப்பின்
புறஞ்சிறை, வயிரியர் காணின், வல்லே,
எஃகு படை அறுத்த கொய்சுவல் புரவி,
அலங்கும் பாண்டில் இழைஅணிந்து ஈம் என,
ஆனாக் கொள்கையை; ஆதலின், அவ்வயின்
மாயிரும் விசும்பில் பன்மீன் ஒளிகெட
ஞாயிறு தோன்றியாங்கு, மாற்றார்
உறுமுரண் சிதைத்த நின் நோன்தாள் வாழ்த்திக்,
காண்டு வந்திசின்; கழல் தொடி அண்ணல்!
மைபடு மலர்க்கழி மலர்ந்த நெய்தல்
இதழ் வனப் புற்ற தோற்றமொடு உயர்ந்த
மழையினும் பெரும்பயம் பொழிதி; அதனால்
பசியுடை ஒக்கலை ஒகி இய
இசைமேந்தோன்றல்! நின் பாசறை யானே"

*(பதிற்றுப் பத்து 64)*

*துறை — காட்சி வாழ்த்து*
*வண்ணமும் துறையும் அது*
*பெயர் — உரைசால் வேள்வி*

*கழல் தொடி அண்ணல் (15) தோன்றல் (20) பலர் தில் அம்ம (2) தகைப்பின் (7) அவ்வயின் (11) ஆனாக் கொள்கையை ஆதலின் (11) பெரும் பயம் பொழுதி அதனால் (18) பாசறையான் (20) தாள் வாழ்த்திக் காண்டு வந்திசின் (15) எனச் சொல் முடிவு கொள்க.*

**உரை :**

கழல்தொடி அண்ணல் — வீரக்கழலும் தொடியும் அணிந்த அண்ணலே!

பசியுடை ஒக்கலை ஓகிஇய — பசியுடைய சுற்றத்தாரை, அப் பசியின் நீக்கிப் பசியறியா வாழ்வில் வாழச் செய்யும்.

இசைமேந் தோன்றல் — புகழால் மேம்பட்ட தோன்றலே!

வலம் படு முரசின் — வெற்றி வாய்க்க முழங்கும் முரசினையும்,

வாய்வாள் கொற்றத்து — வெட்டுதல் தப்பாத வாள் படையால் பெறும் வெற்றியினையும்.

பொலம் பூண் — பொன்னால் ஆன அணிகலன் களையும் உடைய,

வேந்தர் பலர்தில் — வேந்தர்கள் தாம் பலராவர்; ஆயினும் அவரால் பெரும் பயன் இல்லை.

அம்ம! — மேலும் கேட்பாயாக!

அறம் கரைந்து வயங்கிய நாவின் — அறநூல்களை ஓதி ஓதி விளக் கம் பெற்ற நாவினையும்,

பிறங்கிய — விளக்கமுற உயர்ந்த,

உரைசால் வேள்வி — புகழ் வாய்ந்த வேள்விகள் பல வற்றை

முடித்த கேள்வி — செய்து முடித்தற்குத் துணை புரியும் கேள்விச் செல்வத்தை உடைய,

| | | |
|---|---|---|
| அந்தணர் | — | அந்தணர்கள். |
| அருங்கலம் ஏற்ப | — | நீர் வார்த்துக் கொடுக்கும் அரிய பொன் அணிகளைக் கைகளில் ஏற்க ஏற்க, |
| நீர்பட்டு | — | அவ்வணிகளோடு வார்த்த தண்ணீர் கலந்து, |
| இருஞ்சேறு ஆடிய | — | பெருஞ்சேறாகி விட்ட, |
| மணல் மலி முற்றத்தில் | | புது மணல் பரப்பிய மாளிகை முற்றத்தில். |
| களிறு நிலை முனை இய | — | களிறு நிற்பதற்கு வெறுத்த, |
| தார் அரும் தகைப்பின் | — | ஒழுங்கு செய்யப்பட்ட, இரவலர் தவிர்த்துப்பிறர் நுழையலா காவாறு காப்பு செய்யப்பட்ட, |
| அவ்வயின் | | அவ்விடத்தில். |
| புறஞ்சிறை வயிரியர் காணின் | — | கூத்தர் முதலாம் இரவலர்களைப் புறத்தே கண்ட அளவே, |
| வல்லே | — | காலம் தாழ்த்தாது |
| எஃகு படை அறுத்த | — | பகையின் வாள்படை வேல் படை கலை வென்று அழித்த, |
| கொய் சுவல் புரவி | — | கொய்யப்பட்ட பிடரியினை யுடைய குதிரைகளையும், |
| அலங்கும் பாண்டில் | — | அசைந்தாடும் தேர்களையும் |
| இழை அணிந்து ஈம் என | — | உரிய அணிகலன்களை அணிந்து கொடுங்கள் என ஏவும் |

ஆனாக் கொள்கையை — ஈகையில் குறைகாட்டாத கொள்கையினை உடையை;

ஆதலின் — ஆதலாலும்.

மைபடுமலர்க்கழி மலர்ந்த — கரிய நிறம் வாய்ந்த அகன்ற உப்பங் கழியில் மலர்ந்த,

நெய்தல் இதழ்வனப்புற்ற தோற்றமொடு — நெய்தல் மலரின் புறவிதழின் அழகிய கரிய நிறத்தோடு,

உயர்ந்த — கொண்டல் கொண்டாரை உயர்ந்த

மழையினும் — கார்மேகத்தைக் காட்டிலும்,

பெரும் பயம் பொழிதி — நாட்டு மக்களுக்கு மிக்க வளத்தைச் சொரிகின்றனை;

அதனால் — அதனாலும்

பாசறையான் — உன் பாசறைக் கண்.

மாயிரு விசும்பில் — கரிய பெரிய வானத்தில்

பன் மீன் ஒளி கெட — பல விண் மீன்களின் ஒளி கெட்டு மறைந்து விடும் வண்ணம்.

ஞாயிறு தோன்றியாங்கு — ஞாயிறு தோன்றியது போல

மாற்றார் — பகையரசர்களின்.

உறுமுரண் சிதைத்த — பெரும் பகையை அழித்து இல்லையாக்கிய

நின்நோன் தாள் வாழ்த்தி — உன்னுடைய தளரா வலிவுடைய தாள்களை வாழ்த்தி.

காண்டு வந்திசின் — காண வந்துள்ளேன். எ. று.

வேள்வி அனைத்துமே புகழ் வாய்ந்தனதாம். அங்ஙன மாகவும், இந்த வேள்வி, அரியவும், பெரியவுமாய புகழ் வாய்ந்த வேள்வி என, அந்தணர் எடுத்த வேள்வியையும், அத்தகு வேள்வி பல முடித்து மேலும் விளக்கம் பெற்ற கேள்வி என அவ்வந்தணர்களின் கேள்விச் செல்வத்தையும் ஒரு சேரப் பாராட்டி நிற்கும் பெருமை, "உரைசால் வேள்வி என்ற தொடருக்கு அமைந்திருக்கும் அருமை புணர்ந்த ஆன்றோர் ஒருவர், இப்பாட்டிற்கு அத்தொட ரையே பெயராகச் சூட்டிப் பெருமை செய்துள்ளார்.

# 5. நாண் மகிழ் இருக்கை

ஒரு நாட்டிற்குப், பசியறியா வாழ்வளிக்கும் சோற்று வளம், வறுமையின் வாட்டம் காட்டா வாழ்வளிக்கும் பொன்வளம், அறியாமையின் இழிவு காணா வாழ்வளிக்கும் கல்வி வளம், பகைவர் பயம் காணா வாழ்வளிக்கும் படை வளம் ஆகிய நான்குமே இன்றியமையாதன எனினும், படைநலம் இல்லாத நாட்டில், ஏனைய முப்பெருநலங்கள் நிலைபேறுடையவாதல் இயலாது. இதை உணர்ந்தே, தமிழகத்தின் நால்வேறு நலங்களையும் பாராட்ட முன் வந்த புலவர் ஒருவர். "வேழம் உடைத்து மலைநாடு" எனத் தமிழகத்தின் படைப்பெருமையினை முதற்கண் வைத்துப் பாராட்டினார்.

நாடாள்வார் அனைவருமே அறிந்த—அறிந்திருக்க வேண்டிய உண்மை இது. அதனால், எந்நாட்டுக் காவலனும் நாற்படை அமைப்பில் கருத்தூன்றியே இருப்பன். ஆகவே அச்செயல், அவனுக்குத் தனிச்சிறப்பளிக்கும் பெருமை யுடையதாகாது. அது அவன் கடமை; ஆகவே, செல்வக் கடுங்கோ பாலும், அத்தகுபடை இருந்திருக்கும் என்றாலும் அரசர் அனைவர்க்கும் பொது இயல்பான அதை அவன் பெருமைக்கோர் உரைகல்லாகக் கொள்வது பொருந்தாது. ஆனால் செல்வக்கடுங்கோவின் அச்செயலையும் கபிலர் பாராட்டியுள்ளார் என்றால், அவை அவன் கடமைகளுள் ஒன்றாகக் கொண்டு புறக்கணித்து விடல் இயலாது, ஏனைய அரசர்களின் படைகளுக்கு இல்லாத ஒரு தனிச்

சிறப்பினை, அப்படை பெற்றே இருக்க வேண்டும். யாது அத்தனிச்சிறப்பு?

ஒரு படையின் பெருமை, அப்படையால் வெற்றிக் கொள்ளப்பட்ட பகைவர் நிலைக்கு ஏற்பவே அமையும். ஆகவே, செல்வக்கடுங்கோவின் படைப்பெருமையை உணர்ந்து கொள்வதன் முன்னர், அப்படையால் வெற்றி கொள்ளப்பட்ட, அவன் பகைவர் நிலையினை உணர்ந்து கொள்வது இன்றியமையாதது.

செல்வக் கடுங்கோவின் படைவீரர் வெற்றி கொண்ட பகைவர் எத்தகையவர்? நாகம் ஒன்று உயிர்ப்ப, ஓடி ஒளியும் எலிக்கூட்டம் போன்றவரா? அல்லர்; ஆற்றல் மிக்க நாற்படை வாய்க்கப் பெற்றவர், அப்பகைவர். அவர்தம் நாற்படையுள் ஒன்றாகிய குதிரைப்படை, பகைநாடு நோக்கிப் புறப்பட்டு விட்ட நிலையில், நாட்டு எல்லையி லேயே தம்மைத் தடுத்து நிறுத்த, தம்மை நோக்கிப் பாய்ந்தோடி வரும் பகைநாட்டுத் தூசிப் படையை பாழ் செய்து, களத்தைப் பிணக்காடாக்கிவிட்டு, அப்பிணக் குவியல்களை மிதித்தும் துவைத்தும் விரைந்தோடிச் செல்வ தால், குளம்பெல்லாம் குருதிக்கறை படியப் பெற்றுப் பெருமையுற்றவை. அத்தகு பெரும்போர் மேற்கொண்ட தனால், தளர்ந்து விடாது, காற்றென விரையும் உரம் வாய்ந்தவை.

அம்மட்டோ! இயல்பாகவே, அத்தகு நலம் வாய்க்கப் பெற்ற அவை, படைக்குரியோன், தம்பெருமை அறிந்து விரிந்த தலையாட்டம் போலும் அணிகலன்களால், தம்மை ஒப்பனை செய்து பெருமைப் படுத்தியதும், மேலும் போர் வேட்கை மிக்குப் பாயும் போர்க்குணம் வாய்ந்தவை. அத்தகு ஆற்றல் மிகு நாற்படை உடையேம் என்ற செருக்கு மிகுதியினாலேயே வந்து தாக்கியவர் செல்வக் கடுங்கோவின் பகைவர். அத்தகு பகைவரின் ஆற்றலையும் அழித்த அடலேறுகளாவர் செல்வக் கடுங்கோவின் படைவீரர்.

செல்வக்கடுங்கோவின் நாற்படையில் இடம் கொண்ட வீரர், ஏனைய வேந்தர்கள் பால் பணிபுரியும் வீரர் போல்வரல்லர். மாறாக வீரரும் பாராட்டும் விழுமியோராவர், போர்க்களத்தில் புறங்காட்டி ஓடிவந்து வாழும் உயிர் வாழ்க்கை வேண்டுமா? களத்தில் உயிரிழந்து போக, இறவாது நிற்கும் வெற்றிப் புகழ் வேண்டுமா? என்ற இடர்மிகு நிலைக்கு உள்ளாகும் போது, உயிரிழந்து பெறும் புகழையே விரும்பும் உயர் உள்ளம் வாய்க்கப் பெற்ற உரவோராவர். "சுழலும் இசை வேண்டி வேண்டா உயிரார் "(குறள் 777)—என வள்ளுவரால் பாராட்டப் பெற்றவர் போர் என்றனமே பூரிக்கும் தோள் உடையவர். "வந்து விட்டதே போர்? களத்தில் நம் உயிர் என்ன ஆகுமோ?" எனக் கலங்குவது விடுத்து, உயிரிழப்பிற்கு அஞ்சா நெஞ்சுரம் வாய்க்கப் பெற்றவர்: "உறின் உயிர் அஞ்சா மறவர்" (குறள் 778) என்ற, வள்ளுவர் படைத்த வீரர்க்கு எடுத்துக்காட்டாய்த் திகழ்பவர். தம்மை எதிர்த்து வருபவன், உயிர் கொல்லும் கூற்றுவன்; அக்கூற்றுவனும் கடுஞ்சினத்தோடு கொதித்தெழுந்து வருகிறான் என்ற போதும், எதிர்த்து நின்று போரிட அஞ்சாத் தறுகணாளர். "கூற்று உடன்று மேல்வரினும் கூடி எதிர் நிற்கும் ஆற்றலர்."

செல்வக் கடுங்கோவின் படைவீரர்க்கு, அப்பேராற்றல் எவ்வாறு வந்துற்றது? அது, அவர்களின் கருவிலே வாய்த்த திரு. செல்வக் கடுங்கோவின் படையில் வழிவழியாகப் பணி புரிந்து வந்த தொல்குடியில் வந்தவர் அப்படை வீரர். அதனால்தான், அறவே அழிந்து போகும் கெடுநிலை வந்துற்ற போதும், கேட்டிற்கு அஞ்சாது நின்று போரிடும் பேராண்மை அவர்பால் அமைந்திருந்தது. "உலைவிடத்து ஊறு அஞ்சா வன்கண், தொலைவிடத்துத் தொல் படைக் கல்லால் அரிது" (குறள் 762) என்றார் வள்ளுவர்.

நேற்று இருந்தவர், இன்றைக்கும் இருப்பர் என எண்ணுவதற்கு இல்லா இயல்புடையது உலக வாழ்க்கை.

"நெருநல் உளன் ஒருவன் இன்று இல்லை என்னும்
பெருமை உடைத்து இவ் வுலகு"

(குறள் 336)

என வாழ்வின் நிலையாமையினையும், உலகில் எல்லாம் அழிந்து போகும் நிலையிலும், அழியாது நிற்கும் நிலை பேறுடையது, அன்பு, அருள், அறிவு, ஆண்மைகளின் அடிப் படையில் செயலாற்றிப் பெரும் புகழே— "ஒன்றா உலகத்து உயர்ந்த புகழல்லால் பொன்றாது நிற்பது ஒன்று இல்" (குறள்—333)—எனப் புகழின் நிலை பேறுடைமையினையும் உணர்ந்து, அதற்குத் தக நடக்கும் உளப் பக்குவம் வாய்க்க பெற்றவர்களால் மட்டுமே, அத்தகு பெருவீரராய் வாழ்ந்து காட்ட இயலும். செல்வக் கடுங்கோவின் படைவீரர், அத்தகு மனப்பக்குவம் பெற்ற வயவராவர். அத்தகு பெரு வீரர்களைத், தன் படைத் தளபதிகளாகப் பெற்றிருப்பது, செல்வக் கடுங்கோவிற்குப் பெருமை. செல்வக் கடுங்கோவின் அப்பெருமை கண்டு கபிலர் பாராட்டியதற்கு இதுவும் ஒரு காரணமாம்.

பெரும்பாலும் எல்லாப் போர்களும், தன் மண் காக்க வும், பிறர் மண் கொள்ளவும் என இவ்விரு காரணம் கருதியே நிகழும். அவ்விரு வகைப் போர்களுள், பிறர் மண் கொள்ள மேற்கொள்ளும் போர், மன்னனின் மண்ணாசை காரணமாகப் பிறர் நாட்டைச் சென்று தாக்கும் போர். அது, அத்துணைப் பாராட்டிற்கு உரியதன்று. மாறாக் தன் னாட்டு வளஞ் செழிப்பு கண்டு, பொறாமை கொண்டு அந்நாட்டைக் கைக்கொண்டு அழித்துக் கொள்ளை கொள்ளும் குறுகிய நோக்கத்தோடு படையெடுத்து வரும் பகையரசரின் படை வரிசையை எதிர்த்து அழித்துத், தன் நாட்டைக் காக்க மேற்கொள்ளும் நின்று தாக்கும் போர் பாராட்டிற்கு உரியது. செல்வக் கடுங்கோவின் படைவீரர் கள், தங்கள் நாட்டின் மீது படையெடுத்து வந்த பகையரசர் களின் ஆற்றல்மிகு பெரும் படையை அழித்துத் தன் நாடு

காத்த கடமை வீரர் ஆதலானும். அவர்கள் கபிலரின் பெரும் பாராட்டிற்கு உரியவராயினர்.

தம் உயிரிழப்பிற்கு அஞ்சாது நின்று பகையழித்து, நாடு காக்கும் நாற்படையின் நலம் இதுவாக, நாடாளும் காவலனாம் செல்வக் கடுங்கோ, அந்நாற்படைபால் காட்டும் பேரன்பு நலமும் பெருத்த பாராட்டிற்கு உரியதே. படைவீரர்கள் அத்தகைய பண்புடையராதல் அப்படைக்கு உரியோனாகிய நாடாள்வான், அப்படைவீரர் பால் காட்டும் பற்றும் பாசங்களினாலேயே ஆகும். தன் வாழ்வும், தன் நாட்டின் வாழ்வும், அவ்வீரர்களின் நலத்தையே அடிப்படையாகக் கொண்டுள்ளன என்பதைக் கருத்தில் கொண்டு, மன்னன் வாழ்வே, தம் வாழ்வு; அவன் பொருட்டு உலையாது உழைப்பதே தம் கடன் என்ற உணர்வு அவ்வீரர் உள்ளத்தில், எக்காலத்தும் பசுமையாக ஊற்றெடுத்துப் பாய்ந்து கொண்டிருக்கும் வகையில், அப்படை வீரர்களின் வாழ்க்கை, வளங் கொழிக்க வகை செய்வதையும், தன்னையும், தன் நாட்டையும் காத்து நிற்கும் அவர்க்கு ஊறு ஏதும் நேர்ந்து விடா வண்ணம், மெய் புகு கவசம்போல் இருந்து அவரைக் காப்பதையும் மேற் கொள்வதில் நாடாள்வான் விழிப்பாய் இருத்தல் வேண்டும். செல்வக் கடுங்கோ பால், அவ்வுணர்வு ஆழ வேர் கொண்டிருப்பது கண்டு பாராட்டியுள்ளார் கபிலர்.

"செல்வர்க்கு அழகு செழுங்கிளை தாங்குதல்" என்ப. கூப்பிட்ட குரலுக்கு ஓடோடி வந்து குற்றேவல் புரிவார்க்கு அடுக்கடுக்கான ஆணைகளை ஏவும் நெடுமொழி வழங்கவும், எண்ணிய இடத்திற்கு எண்ணியபோதே சென்று சேர வல்ல ஊர்தி ஏறிச் செல்லவும் வல்ல வாழ்வில் வாழ்ந்து விடுவதினாலேயே, ஒருவர் செல்வர் என மதிக்கப்படுவாரல்லர்; அவற்றிற்கு மட்டுமே பயன்படும் செல்வமும் செல்வமாகாது. மாறாகத் தன்னை வந்தடைந்தவர்களுக்கு நேரும் துன்பத்

திற்குத் தான் வருந்தி, அவர்தம் துன்பம் துடைக்கத் துடிக்கும் இனிய உள்ளம் வாய்க்கப் பெற்றவன் செல்வமே செல்வம் எனப்படும்.

''நெடிய மொழிதலும், கடிய ஊர்தலும் செல்வம் அன்று
சேர்ந்தோர் புன்கண் அஞ்சும் பண்பின் மென்கண்
செல்வம்
செல்வம் என்பதுவே''

என்பது நற்றிணை (210) காட்டும் நற்செல்வம். செல்வத்தின் நல்லியல்பு இதுவே என்பதை உணர்ந்தவன் செல்வக் கடுங்கோ. அதனால் தன் செல்வமெல்லாம் தன்னை வந்தடைந்தார் அனைவரின் செல்வமாகச் சிறக்க வாழ்ந்திருந்தான்.

நாடுகாவல், நாடு காக்கும் தாற்படையின் நலம் பேணல், வந்தார்க்கு வாழ்வளித்தல் போல்வன நாடாள்வோன் பால் குறைவற நிறைந்திருக்க வேண்டியது இன்றியமையாததே என்றாலும், அப்புற வாழ்க்கையிலேயே, அவன் வாழ்வு நிறைவுபெற்றதாகி விடாது. புற அழகும், அக அழகும் ஒருங்கே பெற்ற ஒப்புயர்வற்றாள் ஒருத்தியை வாழ்க்கைத் துணையாகப் பெற்ற நிலையிலேயே அவன் முழு மனிதனாக மதிக்கப்படுவான். செல்வக் கடுங்கோ, அத்தகு மனை வாழ்க்கையிலும் மாண்புடையவனாவன்.

அணிகள் பல அணிந்து அழகு பெற்று உயர்ந் எடுப்பான இளம் மார்பு; வரி வரியான கோடுகள் அமைந்து அழகு பெற்ற அல்குல்; அன்பும் அருளும் கொப்புளிக்கும் அகன்ற பெரிய கண்கள்; மலைவளர் மூங்கில் போல் வளம் பெறப் பருத்து நீண்ட வனப்புமிகு பெருந்தோள்; கற்பின் பொற்பு மிகுதியால், சேய்மைக் கண்ணும் சென்று மணம் கமழும் நல்ல நெற்றி; நவமணி பதிக்கப் பெற்ற செம்பொன் அணிகலன்கள் ஆகிய புறஅழகும், பெய் எனப் பெய்யும்

மழை போலும் இயற்கைகளையும் ஏவல் கொள்ள வல்ல கற்புடைமையாம் அக அழகினையும் கொண்ட நங்கை நல்லாளை வாழ்க்கைத் துணைவியாகப் பெற்ற நம்பி, நம் செல்வக் கடுங்கோ வாழியாதன்.

ஆயிரம் நரம்புகளைக் கொண்ட பேரியாழ் போலும் இசைக் கருவிகளை இயக்கி இசை எழுப்பி இன்பம் ஊட்டும், பாணர், பொருநர், கூத்தர் போலும் இசைவாணர்களைப் பேணிக் காத்து, இசைத் தமிழ் வளர்த்த செம்மல் செல்வக் கடுங்கோ.

முடியுடை வேந்தர்கள், குறுநில வள்ளல்கள்பால் சென்று, அவர் புகழ் பாடும் முகத்தான் செந்தமிழ் இலக்கியக் கருவூலத்திற்குச் செல்வம் சேர்க்கும் புலவர் போலும் இரவலர்களின் செல்வமாகவே மாறி, இலக்கியத் தமிழ் வளர்த்த இனியன் நம் ஆதன்.

இத்தகு புகழெல்லாம் ஒருவனிடம் ஒருங்கே வந்து குவிய வேண்டின், அவன், அவற்றையெல்லாம் ஏவல் கொள்ள வல்ல உரம் வாய்ந்த உடல் நலனும் உடையனாதல் வேண்டும். அதிலும் குறையுடையான் அல்லன் கடுங்கோ. அகன்று அழகிய மார்பு, செல்வக் கடுங்கோவின் மார்பு எனப் பலரும் கண்டு பாராட்டுதற்கேற்ற நெடியோன், செல்வக் கடுங்கோ.

இத்தகு சிறப்பெல்லாம் ஒருங்கே பெற்றவன் செல்வக் கடுங்கோ என்பதறிந்த கபிலர், ஐம்பெருங் குழுவும், எண் பேராயமும் உடனிருக்க, அவைப் போதிலே அரசவை சென்றமர்ந்து, காட்சிக்கு எளியனாய் இருந்து அரசோச்சும், அவன் நாளோலக்க நலம் காண விரும்பினார்.

செல்வக் கடுங்கோவின் நாளோலக்க நலங்காண விரைந்த கபிலர் நடையினைச் சிறிதே தளர்த்தி நிற்க்-

செய்துவிட்டது. இடைவழியில் இருந்த பாணர் குடியிருப்பு, பண்ணிசைத்தல் வல்ல, அதிலும் பாலைப் பண்ணின் பண்பெலாம் உணர்ந்து தெளிந்த பாணன் ஒருவன், பாலை யாழை மீட்டி, பாலைப் பண்ணோசையை உலாவிட்டிருந் தான். பாலைப்பண், அழுகைச் சுவை உணர்த்துவது; ஆனால், அந்த அழுகைச் சுவையும் அதைப் பாலை யாழில் எழுப்புவான் கைத்திறத்தால், கேட்போர் உள்ளத்தில் கிளுகிளுப்பை மூட்டிவிட வல்லதாம். அழுகைச் சுவையின் திறத்தையெல்லாம் மாற்றி மாற்றி எழுப்பிய திறத்தால் பேரின்பம் ஊட்டிய பாலைப்பண் இசையில், தம்மை மறந்து நின்றுவிட்ட கபிலர், செல்வக் கடுங்கோவின் நாளோலக்க நினைவு முந்துறவே, அவன் அவை நோக்கி விரைந்தார்.

ஆங்கு, அரசவை வந்திருப்பார் அனைவர்க்கும், செல்வக் கடுங்கோ கள் வழங்கும் காட்சி, கபிலர்க்குக் களிப்பூட்டு வதாய் அமைந்தது. எண்ணிலாச் சாடிகள், பூவும், பொட்டும், புது மணமும் கொண்டு அலங்கரிக்கப்பட் டிருந்தன. அவை ஒவ்வொன்றிலும் வகை வகையான சுவை வாய்ந்த கள், ஒன்றிற்கொன்று சுவை கூடும் கள் நிறைந் திருந்தது. அவைக்கண் வந்துள்ளார் ஒவ்வொருவர்க்கும் ஒவ்வொரு சாடியிலிருந்தும் முகந்து முகந்து, நிலம் சேறு பட்டுப் போகுமாறு பெய்யும் பெருமழை போல, பெருக வார்ப்பதையும், அவைக்கண் உள்ளார் அனைவரும், ஒன்றிற் கொன்று, சுவையில் குறைவுபடா அக்கள்ளுண்டு, களித்துக் கூத்தாடுவதையும் கண்டார் கபிலர். அவரோடு கூடி, அக்கள்வகை உண்ட கபிலர்க்கு இடைவழியில் பாணர்க் குடியிருப்பில், அழுகைச் சுவையதே எனினும், இசைப்போன் திறமையால் பாலைப் பண்ணின் பல்வேறு கூறும் இன்பமே ஊட்டியது நினைவிற்கு வரவே, அத்தகு பேரின்பம் ஊட்டும் பெரியோனாம், செல்வக் கடுங்கோ வாழியாதனை, அப்பண்பு நலமெல்லாம் விளங்க, வாயாரப் பாராட்டி மகிழ்ந்தார்.

''எறிபிணம் இடறிய செம்மறுக் குளம்பின;
பரியுடை நன்மா, விரிஉளை சூட்டி,
மலைத்த தெவ்வர் மறம் தபக் கடந்த
காஞ்சி சான்ற வயவர் பெரும!
வில்லோர் மெய்ம்மறை! சேர்ந்தோர் செல்வ!
பூண் அணிந்து எழிலிய வனைந்துவரல் இளமுலை,
மாண்வரி அல்குல் மலர்ந்த நோக்கின்
வேய்புரைபு எழிலிய விளங்கிறைப் பணைத்தோள்,
காமர் கடவுளும் ஆளும் கற்பின்
சேணாறு நறுநுதல் சேயிழை கணவ;
பாணர் புரவல! பரிசிலர் வெறுக்கை!
பூணணிந்து விளங்கிய புகழ்சால் மார்ப! நின்
நாண்மகிழ் இருக்கை இனிது கண்டிகுமே;
தீந்தொடை நரம்பின் பாலை வல்லோன்
பையுள் உறுப்பின் பண்ணுப் பெயர்த்தாங்குச்
சேறு செய்மாரியின் அளிக்கும் நின்
சாறுபடு திருவின் நனை மகிழோனே''

(பதிற்றுப் பத்து : 65)

துறை = பரிசிற்றுறைப் பாடாண் பாட்டு வண்ணமும் தூக்கும் அது.
பெயர் = நாண் மகிழ் இருக்கை

## உரை

எறி பிணம் இடறிய — படைகளால் கொன்று எறியப்பட்டு வீழ்ந்த பகைவீரர் பிணங்களை இடறிக் கொண்டு செல்லுதலால்;

செம்மறுக் குளம்பின — குருதிக் கறை படிந்து செந்நிறம் பெற்றகுளம்பினை உடையவம்;

பரியுடை நன்மா — விரைந்த செலவினையுடையவு மான குதிரைகளுக்கு;

விரியுளை சூட்டி — மேலும் உற்சாகம் ஊட்ட விரிந்த தலையாட்டம் எனும் ஒப்பனையை அணிவித்து;

மலைத்த தெவ்வர் — எதிர்த்துவந்து போரிட்ட பகைவர்களின்;

மறந்தபக் கடந்த — வீரம்கெட, வெற்றி கொண்ட;

காஞ்சி சான்ற — காஞ்சித்திணை ஒழுக்கமாம் நிலையாமை யுணர்வை நெஞ்சிலே நிறுத்தி உயிரிழப்பிற்கு அஞ்சாது போரிடும்;

வயவர் பெரும — படை வீரர்களின் தலைவனே!

வில்லோர் மெய்ம்மறை — வில்வீரர் உள்ளிட்ட நாற்படையாளர்க்கும் மெய்புகு கவசம் போல் இருந்து காப்பவனே!

சேர்ந்தோர் செல்வ — வந்து அடைந்தோர்க்குச் செல்வமாய் இருந்து பயன்படுவோனே!

பூண் அணிந்து எழிலிய — அணிகள் அணிந்து அழகு பெற்ற;

வனைந்துவரல் இளமுலை— வனைந்து கொண்டாற் போல் எழுந்து நிற்கும் இளமுலையினையும்;

மாண்வரி அல்குல் — அழகிய வரிகள் நிறைந்த அல்குலினையும்;

மலர்ந்த நோக்கின் — அகன்ற பார்வையினையும்;

| | | |
|---|---|---|
| வேய் புரைபு எழிலிய | — | மூங்கிலை ஒத்த அழகுவாய்ந்த; |
| வீங்கு இறை | — | பெரிய முன் கையினைக் கொண்ட; |
| பணைத் தோள் | — | பருத்த தோளினையும்; |
| காமர் கடவுளும் ஆளும் | — | அழகிய கடவுளரையும் ஏவல் கொள்ளும்; |
| கற்பின் | — | கற்பினையும்; |
| சேண்நாறு நறு நுதல் | — | சேய்மைக் கண்ணும் சென்று மணக்கும் நல்ல நெற்றியினையும்; |
| சேயிழை கணவ | — | சிறந்த அணிகலன்களையும் உடையாளுக்குக் கணவனே! |
| பாணர் புரவல | — | பாணர் போலும் இரவலர்களைப் புரப்பவனே! |
| பரிசிலர் வெறுக்கை | — | பாடிப் பரிசில் பெறும் புலவர் போல்வார்க்குச் செல்வமாய் அமைந்தவனே. |
| பூண் அணிந்து விளங்கும் | — | வெற்றிப் பதக்கம் போலும் அணிகள் கிடந்து ஒளிவிடும்; |
| புகழ் சால் மார்ப | — | புகழால் நிறைந்த மார்பினை உடையவனே! |
| தீந்தொடை நரம்பின் பாலை வல்லோன் | — | இனிய இசையினைத் தொடுத்து எழுப்ப வல்ல நரம்புகளைக் கொண்ட பாலை யாழை இசைக்க வல்லான் ஒருவன்; |
| பையுள் உறுப்பின் | — | அழுகைச் சுவைக்கு உரிய உறுப்பினைக் கொண்ட; |

| | |
|---|---|
| பண்ணுப் பெயர்த்தாங்கு— | பாலைப் பண்ணின் பல்வேறு கூறுகளையும் மாறி மாறி இசைத்தாற் போல; |
| சேறு செய் மாரியின் — | நிலத்தைச் சேறுபடுத்து மளவு பெய்யும் பெருமழை போல; |
| நனை அளிக்கும் — | கள்ளை வழங்கும்; |
| சாறுபடு திருவின் — | விழாக் களத்துச் செல்வச் சிறப்பு வாய்ந்த; |
| மகிழான் — | திருவோலக்கத்தின் கண்; |
| நின்நாள் மகிழ் இருக்கை — | உன்னுடைய காலைப் போது இன்ப இருக்கையினை; |
| இனிது கண்டிகுமே — | இனிதே கண்டு மகிழ்வுற்றோம்.., எ-று |

ஐம்பெருங்குழுவும், எண்பேராயமும் புடை சூழ்ந்திருக்க, அவைக்கு வருவாரெல்லாம், தான் அளிக்கும் வகை வகையான கள்ளை மிகவுண்டு மகிழ்ந்திருக்கும் நிலையே தனக்கு மகிழ்வூட்டு நாளாலோக்கமாம் எனக் கொண்ட சிறப்பால், இப்பாட்டு, 'நாண்மகிழ் இருக்கை' என்ற அத்தொடரால் பெயர் சூட்டப்பட்டது.

# 6. புதல் சூழ் பறவை

செல்வக் கடுங்கோ ஆட்சிக்கு வந்த காலத்தில் அவன் நாடு அளவில் சுருங்கியிருந்தது. அவன் 'இச்சிறிய இடத்தையா ஆள்வது' என எண்ணினான்: "உள்ளுவதெல்லாம் உயர்வுள்ளல்' என்பதனை நன்கு உணர்ந்தவன் அவன். உலக அரசர் எல்லாம் தன் ஏவல் வழி நிற்க வேண்டும்; உலகனைத்தும் தன் ஒரு குடைக் கீழ் வரவேண்டும் என்று விரும்பினான்.

"இடம் சிறிது, இடம் சிறிது' என்ற எண்ணம் அவனுள்ளிருந்து ஊக்கிக் கொண்டேயிருந்தது.

> "இடதுசிறிது என்னும் ஊக்கம் துரப்ப
> ஒடுங்கா உள்ளத்து ஓம்பா ஈகைக்
> கடந்தடு தானைச் சேரலாதன்." (புறம்—8)

என அவன் சிறப்பினைப் பாடுவார் கபிலர். தன் நாற்படையை நனிமிகப் பெருக்கினான். பகையரசர்களின் பற்றற்கரிய பேரண்களையெல்லாம் தம் கோடு கொண்டு தாக்கித் தகர்த்தெறியும் வேழங்களையும், சிவந்த பிடரியும் விரைந்த செலவும் உடைய பரிகளையும் பெற்று பெருமையுற்றிருந்தது அவன்படை. களம் பலகண்ட காளையரையும், வலிமை நிறைந்த தேர்ப்படையையும் பெற்றுச் சிறந்தான். வளமான வாழ்வுடையராய்த் திகழ்வதையும் கண்டு மகிழ்கின்றார். இத்தகைய வளம் நிறைந்த இடம் அகன்ற பல ஊர்கள் நிறைந்த நாட்டிற்குரிய நாடு கிழவோனாம் வாழி

யாதனைக் காண வேண்டும் என்ற அவாவோடு அரண் மனைக்குச் செல்கின்றார்.

அங்கே வீரர்கள் கொண்டாடும் வாள்விழா நடை பெற்றுக் கொண்டிருக்கிறது. 'விழுப்புண் படாத நாளெல்லாம் வீணான நாட்களா'கக் கருதும் வீரர் அவர். "போர்க் குறி காயமே புகழின் காயம்; அது புண் அன்று; புகழின் கண்! என்ற எண்ணமுடையவர் அவர். போர்க்களத்தில், வெகுண்டு மேல் வரும் பகைவருடைய படையொழுங்கினைக் குலைத்து, அவரை வெற்றி கொள்ளும் வலிமையுடைய ஒளி பொருந்திய போர்க் கருவிகளை ஏந்தியவர். யானைமேலும் குதிரைமேலும் வரும் வீரர்கள், பகைவர் எறியும் அம்பும் வேலும் தடுத்தற்குத் தம் கேடயத்தை மேலே ஏந்திச் செல்வர். அத்தோற்றம் மலையுச்சியில் நாட்காலத்தே தோன்றும் மழை மேகத்தின் தோற்றத்தை ஒத்திருக்கும். அத்தகைய வீரர்கள் வாள்விழவின் கண் தம் கையிலுள்ள வெற்றி பொருந்திய வாளினைச் சுழற்றி ஆடுவர். கழுத்தில் அணிந்திருக்கின்ற மாலை யுடலில் பின்னிப் பிணைவது போல நால்வகைப் படையின் துணைகொண்டு நாட்டின் எல்லையைப் பெருக்கினான். அகன்ற இடத்தையுடைய ஊர்கள் பல நிறைந்த நாட்டிற்கு கிழவோனாயினான். அந் நாட்டின் வளம் கொழிக்க, பெரிய பெரிய நீர்நிலைகளைப் பலப்பல எடுத்து நீர் வளத்தையும் நில வளத்தையும் பெருக்கினான். புல்லுடைவியன்புலம் நிறைந்த அவன் நாட்டின் பெருவளத்தைக் கண்டு மகிழ்கிறார் கபிலர். முல்லைக் கொடிகள் புதர் போல வளர்ந்திருக்கும் செழுமையையும், அதில் வெண்மையான பூக்கள் மலர்ந்திருக்கும் வளமையையும் காணுகின்றார். அந்தப் பூக்களில் உள்ள நறுமண மிக்க தேனைக் குடிக்க நீலநிறமான வண்டுகள் சூழ்ந்திருக்கின்றன. தேன் உண்டு களித்த வண்டுகள், காட்டிலே பிடவ மரத்தில் தொடுத்தாற்போன்று மாலையாகத் தொங்குகின்ற பூக்குலையிலே சென்று தங்குகின்றன. அங்கே அவர்

கண்ட அழகிய காட்சி அவருக்கு வியப்பையூட்டுவதாக அமைந்தது.

உயர்ந்த பளிங்கு கலந்த சிவந்த பருக்கைக் கற்கள் நிறைந்த அந்த மேட்டுநிலத்தில் கதிரவனின் வெண்மையான கதிர்கள் பட்டு அங்கே இருக்கின்ற உயர்மணிகள் ஒளிவீசிக் கொண்டிருக்கின்றன. அவ்விடத்தே வாழ்வோர் அதனைப் பெற்று அந்த வாள் அவர்கள் உடலில் சுழன்று வருகிறது வெற்றி மாலை அணிந்திருக்கும், அந்த வீரர்களின் இவ்விழாவினைக் கண்டு வியந்து நிற்கிறார் புலவர். அவ்வீரர்கள் வெண்ணிற போந்தை மலர்களும் நீலநிற வானகப் பூக்களும் அணைந்து தொடுத்த மாலையை அணிந்துள்ளனர். தாம் வழியிடைக் கண்ட வெண்மையான முல்லைப் பூக்கள் நிறைந்த புதர்களையும் அப்புதர்களில் அமர்ந்திருந்த நீல நிற வண்டுகளையும் அம்மாலையோடு ஒப்பிட்டுக் காண்கின்றார். இத்தகைய வீரம் மிக்க பெரும் படையினைப் பெற்றிருந்த காரணத்தால்தான் செல்வக் கடுங்கோ பல வெற்றிகளையும் அவன் பெற்றுச் சிறக்கிறான் என்பதையும் உணர்ந்தார். அம்மட்டோ! இடியோசையுடைய முரசங்கள் முழங்க போருக்குத் தலைமையேற்றுச் செல்கின்ற சிறப்பினை உடையவன் அவன். வஞ்சினம் மொழிந்து, பகைவரின் வேலேந்திய படையின் வலிமை முழுமையும் கெட, அவர் புற முதுகிட்டு ஓடுமளவிற்கு அவர்களைக் கொன்றழித்தான். பிணங்கள் நிறைந்த அப்போர்க்களத்தே பகை வேந்தர் தோற்ற நிலையில் அடிபணிந்து யானைக் கூட்டங்களைத் திறையாக அளித்தனர். இவ்வாறு திறையாக பெரும் பொருள் பெற்றுச் சிறக்கும் அவன் தனக்கென வாழாமல் பிறர்க்கும் அளிக்கும் கொடைப் பெருமையும் உடையவன் என்பதை உணர்ந்தார் புலவர். அவன் அரண்மனையில் இரவவர்களுக்கு நெல்லினை வாரி வாரி வழங்குவதைக் காணுகின்றார். 'ஈத்தொரு

மாவள்ளியனாம் வாழியாதன் பலருக்கும் நெல்லினை வாரி வாரி வழங்கியதன் காரணமாக நெல்லினை யளக்கும் அம்பண அளவையின் வாய் விரிந்து தேய்ந் திருப்பதையும் காணுகின்றார். கொற்றமும் கொடையும் சிறக்கப் பெற்ற செல்வக் கடுங்கோவின் சிறந்த பல குணங்களையும் அவனோடு சில நாள் இருந்து அறிந்த புலவர் அவனிடம் விடைபெற்றுத் திரும்புகிறார். வழி யிடையில் செல்வக் கடுங்கோனைக் கண்டு பரிசில் பெறு வதற்காகச் செல்லும் பாணனைக் காண்கின்றார். அப்பாணன் கையில் ஆயிரம் நரம்புகளை எல்லையாக உடையதாய் இசையாற் பெறலாகும் பேரின்பத்துக்கு இடமாக இருக்கும் பேரியாழ் இருக்கிறது. இன்னிசை பயக்கும் நரப்புத் தொடையால் குறைபாடின்மை தோன்ற இனிமையான பாலைப் பண்ணை மீட்டி மகிழ்கிறான் வாய்மையும், முதிய அறிவும் உடையவன் அவன். செல்வக் கடுங்கோ வாழியாதனின் கொற்றமும் வீரமும் கூறி, 'அம்பண அளவை விரிந்துறை போக்க ஆர்பது நல்குவன்' என அவன் கொடைச் சிறப்பையும் சொல்லி அவனிடம் செல்லுமாறு ஆற்றுப்படுத்துகின்றார்'

செல்வக் கடுங்கோவின் வீரம், கொடை போன்றவை இப்பாடலில் சிறப்பிக்கப்படுகின்றன. வீரர்களின் வாள் விழாவினை சிறப்பிக்கும் புலவர் போர்படுமள்ளர் "அணிந்த போந்தையும் வாகையும் விரவித் தொடுத்த மாலையையும் முல்லைப் புதரில் சூழ்ந்த கருவண்டுகளையும் ஒப்பிடுவது சாலச் சிறப்புடையது.

இதனை நன்குணர்ந்த சான்றோர்,

'புதல் சூழ் பறவை': என்ற தொடரையே இப்பாட லுக்குப் பெயராகச் சூட்டினார்.'

''வாங்கிரு மருப்பிற் றீந்தொடை பழுனிய
இடனுடைப் பேரியாழ் பாலை பண்ணிப்

படர்ந்தனை செல்லு முதுவாயிரவல
இடியிசை முரசமொடொன்று மொழிந் தொன்னார்
வேலுடைக் குழூஉச்சமந் ததைய நூறிக்
கொன்றுபுறம் பெற்ற பிணம் பயிலழுவத்துத்
தொன்று திறைதந்த களிற்றொடு நெல்லின்
அம்பண வளவை விரிந்துறை போகிய
ஆர்பத நல்குமென்ப கறுத்தோர்
உறு முரண்டாங்கிய தாரருந் தகைப்பின்
நாண் மழைக் குழூ உச்சிமை கடுக்குந் தோன்றற்
றோன் மிசைத் தெழுதரும் விருந்திலங் கெஃகிற்
றார் புரிந்தன்ன வாளுடை விழவிற்
போர்படு மள்ளர் போந்தொடு தொடுத்த
கடவுள் வாகைத் துய்வீ யேய்ப்பப்
பூத்த முல்லை புதல் சூழ் பறவை
கடத்திடைப் பிடவின் றொடைக் குலைச் சேக்கும்
வான்பளிங்கு விரைஇய செம்பரன் முரம்பின்
இலங்கு கதிர்த் திருமணி பெறுஉம்
அகன்கண் வைப்பினாடு கிழவோனே''

—பதிற்றுப் பத்து : 66

*துறை=செந்துறைப் பாடாண் பாட்டு*
*வண்ணம்=ஒழுகு வண்ணம்*
*தூக்கு = செந்தூக்கு*
*பெயர்=புதல் சூழ் பறவை*

*அவனை நினைத்துச் செல்லும் முதுவாயிரவலனே! நின் நினைவிற்கேற்ப நாடு கிழவோன் தனக்குப் போரின்மையான் வென்று கொடுப்பதன்றி, ஒன்னார் பிணம் பயிலழுவத்துத் திறையாகத் தந்த களிற்றொடு தன்னாட்டு விளைந்த நெல் லாகிய உணவினைக் கொடா நின்றானென்று எல்லாரும் சொல்வார்கள். ஆதலால், அவன்பால் ஏகு எனக் கூட்டி வினை முடிபு செய்க.*

## உரை

| | |
|---|---|
| வாங்கு இருமருப்பின் தீந்தொடை பழுனிய — | வளைந்த கரிய தண்டினை யுடைய இனிய இசைக்குரிய நரம்புகளால் நிறைந்த, |
| இடன் உடைப்பேரியாழ் பாலை பண்ணி — | இசையின்பத்துக்கு இடனாக வுள்ள பேரியாழிடத்தே பாலைப் பண்ணாக அமைத்து, |
| படர்ந்தனை செல்லும் முதுவாயிரவல — | சேரனை நினைந்து செல்லு கின்ற பேரறிவு வாய்ந்த இரவலனே. |
| இடியிசை முரசமொ டொன்று மொழிந் தொன்னார் வேலு டைக் குழூஉச்சமந் ததைய நூறிக் — | இடியினைப் போன்ற முரசத் தோடு வஞ்சியினத்தைக் கூறி பகை வரது வேற்படையை அழித்து, |
| கொன்றுபுறம் பெற்ற பிணம் பயிலழுவத்துக் — | அவர்களைக் கொன்று புற முதுகிடச் செய்த பிணங்கள் நிறைந்த போர்க்களத்தில், |
| தொன்று திறை தந்த களிற்றொடு — | தோற்ற வேந்தர் திறையாகத் தந்த யானைகளோடு, |
| அம்பண அளவை விரிந்து உறைபோகிய நெல்லின் ஆர்பதம் நல்கும் என்ப — | மரக்காலின் அளவையால் அளந்து 'உறையிட முடியாத உணவை அளிப்பானென்று சொல்லுவர். |
| கறுத்தோர் உறுமுரண் தாங்கிய தார் அரும் தகைப்பின் — | கோபம் கொண்ட பகைவரது மாறுபாட்டைக் கெடுத்த, பகைவரால் அழித்தற்கரிய படைவகுப்பையும், |

| | |
|---|---|
| நாண் மழைக்குழூஉச்சிமை கடுக்கும் — | நாட்காலையிலே மழைக் கூட்டந்தங்கிய மலை உச்சியை யொக்கும், |
| தோன்றல் தோல் மிசைத்து எழுதரும், விரிந்து இலங்கு எஃகின் — | தோற்றத்தையுடைய பரிசையினை மேலே தாங்கி எழுகின்ற ஒளி நிறைந்த வேற்படையையும், |
| தார்புரிந்தன்ன வாருடை விழவின் போர்படு மள்ளர் — | மாலையுடலில் மின்னுவது போல வாள் சுழற்றுகின்ற வாள் விழாவினையுடைய போர் வீரர்கள், |
| போந்தொடு தொடுத்த கடவுள் வாகைத் துய்வீ ஏய்ப்ப — | பனங்குருத்துடனே சேர்த்துத் தொடுத்த வெற்றித் திரு விரும்பும் வாகையின் நீலநிறப் பூவினையொத்த, |
| பூத்தமுல்லை புதல் சூழ் பறவை — | பூத்த பூக்களையுடைய முல்லை புதரிடத்தே மொய்க்கும் வண்டினம், |
| கடத்திடைபிடவின் தொடைக்குலைச் சேக்கும் — | காட்டினிடத்தே பிடவமரத்தின் தொடுத்ததுபோல் பூக்கும் பூக்குலையிலே தங்கும், |
| வான் பளிங்கு விரைஇய செம்பரல் முரம்பின் — | உயரிய பளிங்குடன் விரவிய சிவந்த பரல்கள் கிடக்கின்ற முரம்பு நிலத்திலே, |
| இலங்கு கதிர்த் திருமணி பெறூஉம் — | அங்கு வாழ்வோர் விளங்குகின்ற ஒளிக்கதிரையுடைய அழகிய மணிகளைப் பெறுகின்ற, |

கண் அகல் வைப்பின் நாடு கிழவோன் — இடம் அகன்ற ஊர்களை யுடைய நாட்டிற்கு உரிய தலைமகனான செல்வக் கடுங்கோ வாழியாதன்.

"கிழித்துக் குறுக நறுக்கி வாகையோடு இடைவைத்துத் தொடுத்த பனங்குருத்து முல்லை முகைக்கு ஒப்பாகவும் உவமங்கொள்ள வைத்த சிறப்பானே இதற்குப் புதல் சூழ் பறவையென்று" பெயராயிற்று.

# 7. வெண் போழ்க் கன்னி

"ஆற்றிடைக் காட்சி உறழத் தோன்றி
பெற்ற பெருவளம் பெறார்க் கறிவுறீஇச்
சென்று பயனெதிர சொன்ன பக்கமும்"

என்பது ஆற்றுப்படை இலக்கணம், பத்துப்பாட்டில் ஆற்றுப் படையாகவே இலக்கியங்கள் பல உண்டு. அவ்வகையில் அவை தோன்றுவதற்கு முன்னோடியாக அமைந்தவை புறநானூறு, பதிற்றுப்பத்தில் அமைந்துள்ள சிலபாடல்களே.

இசையின் நுணுக்கங்கள் அறிந்து யாழ் வாசித்தலில் தேர்ச்சி பெற்று விளங்குகிறான் ஒரு பாணன். வாழியா தனின் கொடைச்சிறப்பையும் வீரத்தின் சிறப்பினையும் அவனோடு இருந்து உணர்ந்த புலவர் பாணனுக்கு அவற்றை யெல்லாம் எடுத்துக்கூறி அவனிடம் ஆற்றுப்படுத்துகிறார்.

வாழியாதனுக்குரிய மலை நேரிமலை அது நெடிது உயர்ந்த மலை. கற்களால் உயர்ந்தது. அம்மலையிடத்து கடவுளுக்குரிய காந்தள் மலர்கள் இதழ் விரிந்து மலர்ந்து கிடக்கின்றன. கடவுளுக்குரிய மலர்களை வண்டினம் நாடி வராது. இதை உணராத தும்பிகள் சுரும்பும் ஊதா சுடர்க் காந்தளில் அமர்ந்து தாதுண்ண விரும்புகின்றன. விரைந்து பறக்கும் இயல்புடைய அத்தும்பிகள் காந்தள் மலரில் அமர்ந்தமையால் பறக்கும் இயல்பை இழக்கின்றன. இதைக் கண்ணுறுகின்றார் புலவர் வாழியாதனின் வீரத்தை

நன்கு உணர்ந்தவர் அவர். தாங்கள் வலியுடையேம் என்னும் செருக்கால் அவன் மலையைக் கைக்கொள்ளக் கருதி வரும் பகைவருக்கும் அத்தும்பிகளின் நிலைதான் ஏற்படும் என்பதை உணருகின்றார். வாழியாதன் போரிடும் போர்க்களத்தை நேரில் கண்டு வியந்தவர் அவர். போர்ப் பயிற்சியில் நன்கு தேர்ந்த நாற்படையும் அவனிடம் இருந்தது. அவற்றுள்ளும் அவனது களிற்றுப் படையின் களப் போர்த்திறம் சொல்லும் திறன் உடையதன்று. போர்க்களத்தில் நிரை நிரையாக அவனது களிறுகள் அணிவகுத்துச் செல்கின்றன. மாற்றார் படையிலிருந்து களிறுகளோ பரிகளோ, காலாட்களோ எவை வரினும் எத்துணை வரினும் அவற்றைக் கொன்று உயிர்போக்கும் ஆற்றல் உடையவை அக்களிறுகள். இக்களிற்று நிரைகளின் முன்னே விண்ணிலே அசையும் வென்றி குறித்து உயர்ந்த கொடிகள் மாற்றாரை ஏங்க வைக்கின்றன. ஏந்திய படையினை இழந்தவர் வேறு படைக்கலந் தேர்ந்தெடுக்கின்றனர். ஒளிவீசும் மணிகள் பதித்த கொம்புகளும் வலம்புரிச் சங்குகளும் முழங்குகின்றன.

போர் புரிந்து வீழ்ந்த மக்கள் மாக்களின் பிணம் மலை போல் குவிந்து கிடக்கின்றது, பெரிய சிறகுகளை உடைய பருந்துக் கூட்டங்கள் பிணங்களின் குருதியை உண்டு மகிழ்கின்றன. பிணங்களின் தலை வெட்டுண்டு கிடக்க உடல் மட்டும் ஆடுகின்றது. அதன் ஆட்டத்தோடு இணைந்து பேய்மகளும் ஆடுகின்றாள். அப்பேய்மகளின் தோற்றமோ! உலறிய தலையும், பிறழ்பல்லும், அகன்ற வாயும், சுழலும் விழிகளும், கூர்ந்த நோக்கும் கொண்டு அனைவரையும் அச்சுறுத்துகின்றது. இப்படிப் பகைவர் அஞ்சி நடுங்கும் பல போர்களிலும் வெற்றிக் கொடியை நாட்டியவன் அவன்.

உலகெலாம் வியக்கும் அவனுடைய வெற்றிக்கெல்லாம் காரணமானவர் யார்? வீரமும் வலிமையும் என்றும்

தளரா மன உறுதியும் உடைய அவன் படை வீரர்களே! தொடுத்தற்குரிய பூவல்லாத சேரர்க்கே உரிய பனந்தோட்டுடன், கொன்றை, உழிஞை, வாகை, தும்பை முதலான போர்ப் பூக்கள் தொடுத்த மாலைகளை அணிந்துள்ளனர். பல போர்களில் கலந்து கொண்டு வெற்றி வாகை சூடியவர்கள், அவர்கள் முகத்திலும் மார்பிலும் வெற்றிக்கு அடையாளமான வீரவடுக்கள் நிறைந்துள்ளன. வாழியாதனுடைய நாட்டில் இறைச்சி விற்கும் கடைகளைக் காணுகின்றார் புலவர். முறுக்கொடு வளைந்த கொம்புகளையும், பெரிய கண்களையுமுடைய எருதுகளையும், மற்ற விலங்குகளையும் வெட்டி இறைச்சிகளை விற்குமிடங்கள் பல உண்டு. அங்கே பாசவரின் வெட்டும் அரிவாளால் ஊனைக் கொத்துவதால் இறைச்சி வைக்கப் பட்ட மரக்கட்டைகள் சிதைந்து வடுக்கள் நிரம்பியதாக உள்ளன. மார்பில் பூசப்பட்ட சாந்தின் அழகையும் மறைத்த வீரர்களின் வடுப்பட்ட முகத்தையும் மார்பையும் வடுக்கள் நிறைந்த இறைச்சி வெட்டும் மரக்கட்டையைப் போன்று இருப்பதாக உணருகின்றார் புலவர்,

"ஊனமர் குறடுபோல விரும்புண்டு மிகுந்த
மார்பின்" (சீவக சிந்தாமணி. 22 31)
"செங்களந் துழவுவோன் சிதைந்து வேறாகிய
படுமகன்" (புறம்—278)

வீரத்தில் மட்டுமல்ல; கொடைச் சிறப்பிலும் தேர்ந்தவன் அவன், கொடுமணம், பந்தர் என்ற இரண்டு இடங்களும் அக்காலத்தே முறையே நன்கலங்கட்கும், உயரிய முத்துக்களுக்கும் பெயர் பெற்றிருந்தன.

"கொடுமணம் பட்டவினை மாணருங்கலம்
பந்தர்ப் பயந்த பலர்புகழ்முத்தம்" (பதிற்றுப்பத்து—74)

தன்னை நாடிவரும் பரிசிலர்க்கும் இவற்றையெல்லாம் வாரி வாரி வழங்கும் பெருமையுடையவன் அவன். இசைவல்

லோர்க்குரிய கடமைகளை நன்கறிந்த முறைமையால் யாழ் வாசித்தலில் கைவன்மை வாய்ந்த பாணனே. நீயும் உன் சுற்றமும் வாழியாதனை நாடிச் சென்று கிடைத்தற்கரிய இப்பரிசில் பொருள்களைப் பெற்றுச் சிறக்க என்று அவனை ஆற்றுப்படுத்துகின்றார்.

தொடுத்தற்குரிய பூவல்லாத பனங்குருத்தினை
தொடுக்கப்படும் கொன்றையொடு தொடுத்தது
பற்றி, "நாறிணர்க் கொன்றை வெண்போழ்க்கண்ணி"

எனக்கூறிய அடைச்சிறப்புடனே இதற்கு "வெண்போழ்க் கண்ணி" என்று பெயராயிற்று. கைவல்பாண, நெடுமொழி யொக்கலொடு நீ—சான்றோர் பெருமகன், நேரிப் பொருநனாகிய, செல்வக் கோமானைப் பாடிச் செல்லின்— பந்தர்ப் பெரியரிய மூதூர்த் தென் கடல் முத்தமொடு கொடு மணம்பட்ட நன்கலம் பெறுகுவை.

"கொடுமணம் பட்ட நெடுமொழி யொக்கலொடு
பந்தர்ப் பெயரிய பேரிசை மூதூர்க்
கடனறி மரபிற் கைவல் பாண
தெண்கடன் முத்தமொடு நன்கலம் பெறுகுவை
கொல்படை தெரிய வெல்கொடி நுடங்க
வயங்குகதிர் வயிரொடு வலம்புரியார்ப்பப்
பல்களிற்றின நிரை புலம் பெயர்ந்தியல்வர
அமர்க்கணமைந்த வவிர் நிணப் பரப்பிற்
குழூ உச்சிறை யெருவை குருதியாரத்
தலை துமிந்தெஞ்சிய மாண்மலி யூபமொ
டுருவில் பேய்மகள் கவலை கவற்ற
நாடுடனடுங்கப் பல்செருக்கொன்று
நாறிணர்க் கொன்றை வெண்போழ்க் கண்ணியர்
வாண்முகம் பொறித்த மாண்வரி யாக்கையர்
நெறிபடு மருப்பினிருங்கண் மூரியொடு

வளை தலை மாத்த தாழ்கரும் பாசவர்
எஃகாடூனங் கருப்ப மெய் சிதைந்து
சாந்தெழின் மறைத்த சான்றோர் பெருமகன்
மலர்ந்த காந்தண் மாறாதூதிய
கடும்பறைத் தும்பி சூர் நசைத்தா அய்ப்,
பறை பண்ணழியும் பாடு சாநெடு வரைக்
கல்லுயர் நேரிப் பொருநன்
செல்வக் கோமாற் பாடினை செலினே''

(பதிற்றுப்பத்து—67)

துறை : பாணாற்றுப் படை வண்ணமும் தூக்கும் அது.
பெயர் : வெண் போழ்க் கண்ணி.

உரை :

| | | |
|---|---|---|
| கொல்படைதெரிய | — | ஏந்திய படையழிந்தவர் வேறு படைகளை ஆராய |
| வெல்கொடிநுடங்க | — | வென்றி குறித்துயர்ந்த கொடி விண்ணிலே அசைய |
| வயங்கு கதிர் வயிரொடு வலம்புரி ஆர்ப்ப | — | கொம்பெனும் வாத்தியத்தொடு வலம்புரிச் சங்குகள் முழங்க |
| பல்களிற்று இனநிரை | — | பலவாகிய களிறுகளின் கூட்டமான வரிசை |
| புலம் பெயர்ந்து இயல் வர | — | தத்தமக்குரிய இடத்தினின்றும் பெயர்ந்து |
| அமர்க்கண் அமைந்த நிணம்அவிர் பரப்பில் | — | போரிடுதற்கமைந்த நிணம் விளங்கும் பரந்த களத்தில் |

| | |
|---|---|
| குழூஉச்சிறையெருவை குருதியாரத் — | பெரிய சிறகுகளை உடைய பருந்துகள் பிணங்களின் குருதியை யுண்ண |
| தலைதுமிந்து எஞ்சிய ஆண்மலியூபமொடு — | தலை வெட்டுண்டதால் குறையுடலோடு ஆடும் ஆண்மை நிறைந்த கவந்தத்தோடு, |
| உருவில் பேய்மகள் கவலை கவற்ற — | வடிவமற்ற பேய்மகள் காண்போர் வருந்துமாறு அச்சுறுத்த |
| நாடு உடல் நடுங்க பல் செருக்கொன்று — | நாட்டிலுள்ளோர் அஞ்சி நடுங்க பல் போர்களிலும் வென்று. |
| நாறுஇணர்க்கொன்றை வெண்போழ்க் கண்ணியர் — | மணம் நிறைந்த கொன்றைப் பூவின் கொத்துக்கள் விரவித் தொடுத்த வெள்ளிய பனந்தோட்டுக் கண்ணியை அணிந்தவராய் |
| வாள் முகம் பொறித்த மாண்வரி யாக்கையர் — | வாளின் வாய் உண்டு பண்ணிய மாட்சிமைக்கப்பட்ட வடுக்களாகிய வரி பொருந்திய முகத்தையுடையராய்; |
| நெறிபடு மருப்பின் இருங் கண் மூரியொடு — | நெறிப்புடைய கொம்பும் பெரிய கண்ணுமுடைய எருத்துக்களோடு; |
| வளை தலை மாத்த தாழ் கரும் பாசவர் — | வளைந்த தலையையுடைய ஏனை விலங்குகளின் இறைச்சிகளையுடைய தாழ்ந்த இழிந்த பாசவர்; |

| | |
|---|---|
| எஃகாடு ஊனம் கடுப்ப — | கத்தியால் இறைச்சியை வெட்டுவதற்குக் கொண்ட அடிமனைபோலே; |
| மெய் சிதைந்து — | மெய் வடுவும் தழும்புமுறுதலால்; |
| சாந்து எழில் மறைந்த மெய் சான்றோர் — | பூசிய சந்தனத்தின் பொலிவு தோன்றாதபடி மறைந்த மார்பினையுடைய சான்றோர்க்கு; |
| பெருமகன் — | தலைவனும்; |
| மலர்ந்த காந்தள் சூர் நசைத்தா அய் — | பூத்திருக்கும் காந்தட் பூ தெய்வத்தால் விரும்பப் படுவதாதலால்; |
| மாறாது ஊதிய கடும் பறைத் தும்பி — | நீங்காது படிந்து தாதுண்ட விரைந்து பறத்தலையுடைய தும்பியானது; |
| பறை பண்ணழியும் — | அப்பறக்கும் இயல்பு கெடும்; |
| பாடுசால் நெடுவரை — | பெருமையமைந்த நெடிய மலையாகிய; |
| கல் உயர் நேரிப் பொருநன் — | கற்களால் உயர்ந்த நேரிமலைக்குரிய பொருநனும்; |
| செல்வக் கோமான் பாடினை செலின் — | செல்வக்கோமானுமாகிய வாழியாதனை பாடிச் செல்குவையாயின்; |
| கடன் அறிமரபின்கைவல் பாண — | இசைவல்லோர்க்குரிய கடமைகளை நன்கறிந்த முறைமையால் யாழ்வாசித்தலின் கைவண்ணம் வாய்ந்த பாணனே; |

| | | |
|---|---|---|
| நெடு மொழி ஒக்கலொடு கொடு மணம் | — | நெடிய புகழ் பெற்ற நின் சுற்றத்தாருடனே, கொடு மண மென்னு மூரிடத்தும்; |
| பந்தர்ப் பெயரிய பேரிசை மூதூர் | — | பந்தரென்னும் பெயரையுடைய பெரிய புகழையுடைய பழைய ஊரிடத்தும்; |
| பட்ட, தென் கடல் முத்த—மொடு நன்கலம் பெறுவை | | பெறப்படுபவனவாகிய, தென் கடலின் எடுக்கப்படும் முத்துக் களோடு நல்ல அணிகலங்களை யும் பெறுவாய்; |

# 8. ஏம வாழ்க்கை

செல்வக்கடுங்கோ வாழியாதனின் நாட்டைச் சுற்றிப் பார்த்து வியக்கிறார் கபிலர், அவனுடைய நாட்டில் காண்போர் கண்ணையும் கருத்தையும் கவர்கின்ற உயர்ந்த மாட மாளிகைகள் நிறைந்திருக்கின்றன. அழகிய சித்திரங்கள் வரையப்பட்ட நீண்ட நெடிய மதில்களையுடைய உயர்ந்த சுவர்கள்; அவற்றின் அழகினை ஓவியத்திலும் எழுதிக் காட்ட முடியாது. அழகிய அந்த மாளிகைகளின் சுவர்களில் வரிசை வரிசையாக எழுதப்பட்ட சிறுகோடுகள் காணப்படுகின்றன. அரசன் போருக்குச் சென்ற காலத்தில் அவன் பிரிவைத் தாங்க இயலாத சிவந்த மகளிர் அவன் திரும்பி வரும் நாளைக் கருத்தில் கொண்டு அடையாளமாக எழுதிய கோடுகள்தாம் அவை.[1] பிரிவாற்றாது உறக்கம் இன்மையால் அணிந்துள்ள அணிகலன்கள் நெகிழ உடல் மெலிந்து நிற்கும் அப்பெண்களின் நிலையை உணருகிறார் புலவர். இயல்பாகவே சிவந்த அவர்களின் விரல்கள் குறித்த நாட்கள் பலவும் எழுதியமையால் மேலும் சிவந்து காணப் படுகின்றன, அழகிய வரிகளையுடைய சிலம்பினை அணிந்த அப்பெண்கள் பார்ப்போரை வருத்தும் அழகினை உடையவர்கள்.[2] இத்தகைய மகளிர் மனதைப் பிணிக்கும் மணம் கமழும் மார்பினையுடையவன் செல்வக்கடுங்கோ காதல் மகளிரின் பிரிவையுணராத, காம வேட்கையில் ஓடாத மனதை உடையவன் அவன். அவன் சிந்தை முழுவதும் போரும், வெற்றியுமே நிறைந்துள்ளது. அவன் மட்டுமல்ல. அவனுடைய வீரர்களும் அத்தகைய

சிறப்பினை உடையவரே. பாசறையில் பலமுறை அரசனுடன் அவர்களின் வீரத்தை ஒருங்கிருந்து கண்டவர் புலவர்.

'பாசறையின் கண் அவனுடைய வீரமுரசம் முழங்குகிறது. கடுங்காற்று வீசும்போது கடல் முழங்குவதுபோல மிக்க முழக்கத்தைச் செய்கிறது அம்முரசு.' அம்முரசத்தின் மிக்க ஓசை பரந்த வான் முழுதும் முழங்கிற்று. அங்கிருக்கும் வீரர்களின் நெஞ்சம் போரையே விரும்புகின்றது. மிக்க ஊக்கத்தோடு போரிடும் இயல்பினை உடையவர் அவர். உடல்வலி குன்றி அசைவுற்று மெலிவும் மெலிவினையுடைய பகைவரது உறைவிடத்தைக் கைக்கொண்டாலன்றி உணவும் கொள்ளமாட்டோம் என்னும் வஞ்சினம் உடையவர் அவர்.

"இன்றினிது நுகர்ந்தனமாயின் நாளை
மண்புனை இஞ்சி மதில் கடந்தல்லது
உண்குவமல்லேம் புகாவெனக் கூறிக்
கண்ணி கண்ணிய வயவர்" (பதிற்:58)

அவ்வீரர்கள், வஞ்சினம் தபடாமல் முடித்தற்கு நாள் பல கழியினும் தலைநாள் போன்ற ஊக்கமுடையவர்கள். போரில்லாக் காலத்தில் இந்த வீரர்கள் தங்கள் பொழுதை எவ்வாறு கழிப்பார்கள் என்றறியும் ஆர்வமேற்பட்டது புலவருக்கு. நாள்தோறும் போரிட்டு பகைவர் புலத்தே களிறுகள் பலவற்றைக் கவர்ந்தவர்கள் அவர்கள்.

அக்களிறுகளைக் கொன்று அவற்றின் வெண்கோடுகளைக் கள்ளிற்கு விலையாகத் தருவதைக் கண்டு வியக்கின்றார் புலவர். கள் விற்கும் கடைக்கு அவ்வீரர்கள் தம் தோழரோடன்றித் தனித்தும் செல்வதில்லை. தம் தோழர்களுடன் கட்கொடி அசையும் கள்ளுக் கடைக்குச் சென்று

இனிய கள்ளினை உண்டு மகிழும் இன்பம் நிறைந்த அவர்கள் வாழ்க்கையைக் கண்டு மகிழ்கின்றார் புலவர்.

யோக பூமியாகிய உத்தர குருவில் வாழும் மக்கள் நாள் தோறும் மிக்க மகிழ்ச்சியுடன் இன்பம் துய்த்து வாழ்வார்கள்.[5] அதுபோன்ற வாழ்க்கையை நாள்தோறும் இவர்களும் பெறுவார்களா என்றால் இல்லை. போரில் ஆர்வமுடைய இவ்வீரர்களுக்கு அத்தகைய ஏம வாழ்க்கை பெறுவதற்கு அரியது என்றும் உணர்கிறார்.

துன்பம் இடைவிரவின இன்பமன்றி இடையறாத இன்பமுடைய வாழ்க்கை வாழ்பவர் உத்தர குருவில் வாழ்பவர் என்று கூறியதால் இது 'ஏம வாழ்க்கை' ஆயிற்று.

"கால் கடிப்பாகக் கடலொலித் தாங்கு
வேறு புலத்திறுத்த கட்டூர் நாப் பட்
கடுஞ்சிலை கடவுந் தழங்கு குரன் முரசம்
அகலிரு விசும்பினாகத் ததிர
வெவ்வரி நிலைஇய வெயிலெறிந்தல்ல
துண்ணா த்டுக்கிய பொழுது பலகழிய
நெஞ்சு புகலூக்கத்தர் மெய்தயங்குயக்கத்
தின்னாருறையுட் டாம்பெறினல்லது
வேந்தூர் யானை வெண்கோடு கொண்டு
கட்கொடி நுடங்கு மாவணம் புக்குடன்
அருங்க ணொடைமை தீர்ந்தபின் மகிழ்சிறந்து
நாம மறியா வேம வாழ்க்கை
வடபுல வாழ்நரிற் பெரிதமர்ந்தல்கலும்
இன்னகை மேய பல்லுறை பெறுபகொல்
பாயலின்மையிற் பாசிழை ஞெகிழ
நெடுமணிஞ்சி நீணகர் வரைப்பின்
ஓவுறழ் நெடுஞ்சுவர் நாள்பல வெழுதிச்
செவ்விரல் சிவந்த வவ்வரிக் குடைச்சூல்

அணங்கெழிலரிவையர்ப் பிணிக்கும்
மணங்கமழ் மார்ப நின் றாணிழலோரே."

—பதிற்றுப் பத்து—68

துறை = செந்துறை பாடாண் பாட்டு. வண்ண மும் தூக்கும் அது : பெயர். ஏம வாழ்க்கை

உரை :

| | |
|---|---|
| பாயல் இன்மையின் பாசிழை நெகிழ | — பிரிவாற்றாது உறக்கம் பெறாமையால் அணிந்துள்ள பசிய இழைகள் நெகிழ்ந்து நீங்க வுடல் மெலிந்து; |
| நெடுமண் இஞ்சி | — உயரிய மண்ணாற் செய்யப் பட்ட மதில் சூழ்ந்த; |
| நீள்நகர் வரைப்பின் | — நீண்ட பெருமனையிடத்தே; |
| ஓவு உறழ் நெடுஞ்சுவர் | — ஓவியத்தில் தீட்டிக் காட்டப் படுவதினும் மேம்பட்ட நெடிய சுவரில்; |
| நாள் பல எழுதி | — பிரிவின் கண் மீண்டு போந்து கூடுதற்குக் குறித்த நாட்கள் பலவும் எழுதியெழுதி. |
| செவ்விரல் சிவந்த | — இயல்பாகவே சிவந்துள்ளவிரல் மிகச் சிவந்த; |
| அவ்வரி குடைச்சூல் | — அழகிய வரிகளையும் சிலம்பையும்; |
| அணங்கெழில் அரிவையர்ப்பிணிக்கும் | — காண்பாரை வருத்தும் அழகையுமுடைய மகளிர் மனத்தைப் பிணித்து நிற்கும்; |

| | |
|---|---|
| மணங்கமழ் மார்ப | — சாந்தின் நறியமணம் கமழும் மார்பையுடையோய்; |
| நின்தாள் நிழலோர் | — நின் அடிப்பணி நின்று வாழும் வீரர்; |
| வேறுபுலத்து இறுத்த கட்டூர் நாப்பண் | — பகைவர் நாட்டிடத்தே சென்றமைத்துத் தங்கிய பாசறை நடுவில்; |
| கால் கடிப்பாக | — மோதுகின்ற காற்றாகிய குறுந்தடி அலைக்க; |
| கடல் ஒலித்தாங்கு | — கடலாகிய முரசு முழங்கியது போல; |
| கடுஞ்சிலை கடவும் தழங்குகுரல் முரசம் | — மிக்க முழக்கத்தைச் செய்யும் ஒலிக்கின்ற ஓசையையுடைய முரசமானது; |
| அகல் இரு விசும்பின் ஆகத்து அதிர | — விரிந்த பெரிய வானத்திடத்தே முழங்க; |
| வெவ்வரி நிலை இய எயிற் எறிந்தல்லது | — கண்டார் விரும்பத்தக்க கோலங்கள் நிலைபெற்ற பகைவர் மதிலையழித்தன்றி; |
| உண்ணாது அடுக்கிய பொழுது பல கழிய | — உணவு உண்பது இல்லையென்று உண்ணாது கழித்த நாட்கள் பல கழியவும்; |
| நெஞ்சு புகல் ஊக்கத் தார் | — தம் நெஞ்சம் போரே விரும்புதலால் எழுந்த ஊக்கத்தையுடையராய்; |
| மெய்த்தயங்கு உயக்கத்து இன்னார் | — உடல் வலிகுன்றி அசைவுற்று மெலியும் மெலிவினையுடைய பகைவரது; |

| | |
|---|---|
| உறையுள் தாம்பெறின் — 'அல்லது | உறைவிடத்தைத்தாம் வென்று கைக் கொண்டாலன்றி; |
| வேந்தூர் யானை வெண்கோடு கொண்டு — | பகைவேந்தர் ஏறிப் போந்த களிற்றினைக் கொன்று அதன் மருப்பினைக் கைக்கொண்டு; |
| கட்கொடி நுடங்கும் ஆவணம் உடன்புக்கு — | கள்ளுக்கடையின் கொடி யசைந்து தோன்றும் கடைத் தெருவை உடனடைந்தது. |
| அருங்கள் நொடைமை தீர்ந்த பின் — | அரிய கள்ளுக்கு விலையாகத் தந்து அக்கள்ளைப்பெற்றுண்ட பின்பு; |
| மகிழ் சிறந்து — | மகிழ்ச்சி மிக்கு; |
| நாமம் அறியா ஏம வாழ்க்கை வடபுல வாழ்நரின் — | அச்சத்தையறியாத இன்பமே நுகரும் வாழ்க்கையுடைய உத்தரகுருவில் வாழும் மக்களைப் போல; |
| பெரிது அமர்ந்து — | மிக்க விருப்பமுற்று; |
| அல்கலும் இன்னே கைமேய பல்உறை பெறுப கொல் — | நாடோறும் இனிய உவகை பொருந்தியுறையும் பொழுது கள் பல பெறுவார்களோ; பெறுதல் அரிது போலும்— |

"நாம மறியா ஏம வாழ்க்கை யென்றது, துன்பம் இடைவிரவின இன்பமன்றி இடையுறாத இன்பமேயாய்ச் சேறலான வாழ்க்கை யென்ற வாறென்றும்," இச்சிறப்பானே இதற்கு ஏம வாழ்க்கை யென்று பெயராயிற்று"

# சான்றெண் விளக்கம்

1. "நாளிழை நெடுஞ்சுவர் நோக்கி நோயுழந்
தாழல் வாழி தோழி."

— அகம் — 91

2. "நின்னெழில் நலம்.........
நீத்கண்டார்ப் பேறுறா உமென்பதை
யறுதியோ வறியாயோ

— கலித்தொகை — 59

3. வேட்டோர்க் கமிழ்த்தன்ன
கமழ்தார் மார்பு

— அகம் — 332

4. கடுங்குரல் முரசம் காலுறு கடலிற் கடியவுரற
— பதிற்றுப்பத்து — 69

"புணரி, குணில் வாய் முரசின் இரங்குந்துறைவன்"
— குறுந்தொகை — 328

5. அருந்தவங் கொடுக்குஞ் சுருங்காச் செல்வத்து
உத்தர குருவம்

— பெருங் கதை—2—7

# 9. மண்கெழுஞாலம்

பல போர்களிலும் செல்வக் கடுங்கோ வாழியாதனுடன் சென்று அவன் போர்ச்சிறப்பையும் படைச் சிறப்பையும் நன்கு உணர்ந்தவர் கபிலர். மடியாத ஊக்கத்தொடு பகைவரைத் தன்னொடு சேர்த்த சிறப்பினையுடையவன் அவன். அவனுடைய வெற்றிக்கெல்லாம் காரணமாய் விளங்கும் நாற்பெரும் படையின் சிறப்பினைப் பாராட்டு கிறார் புலவர்.

போருக்குப் புறப்பட்டுச் செல்கின்ற அவன் தானையின் கடல் போன்ற முழக்கத்தையும் பெருத்த ஆரவாரத்தையும் கண்டு வியக்கிறார் புலவர். அவனுடைய களிற்றுப்படை அளவற்ற வலிமை உடையது. மலைபோன்று உயர்ந்த யானைகள். யானைகள் மேல் எடுத்த வெற்றிக்கொடிகள் வான் அளாவ உயர்ந்து நிற்கின்றன. யானைகள் அசையும் போது அந்தக் கொடிகள் அசைவது மலை மேலிருந்து விழும் அருவி காற்றால் அசைவது போன்றுள்ளது[1]. கடல் போன்ற தானையின் இடை இடையே முரசுகள் ஒலிக் கின்றன.

காற்றால் மோதப்பட்ட கடலின் முழக்கம் போல கேட்பவர்களுக்கு அச்சத்தை எழுப்புகின்றன, அம்முரசு களின் முழக்கங்கள். பல போர்களிலும் அறம் பிழையாது வென்று மேம்பட்டாரையே வீரராக ஆராய்ந்து தெரிந் தெடுத்துள்ளான் அரசன். பகைவரை பலமுறை எதிர்

கொண்டு எறிதலால் சிதைந்த வெற்றி பொருந்திய வீர வாளினை ஏந்தியுள்ளனர் வாள் வீரர்கள். இலை போன்ற வடிவமுடைய கூர்மையான வேலினை ஏந்திய வீரர்கள் அப்படையில் நிறைந்துள்ளனர். போர்ப் பயிற்சியில் சிறந்து பகைவர் மீது பாய்ந்து வன்மை குறைந்த குதிரைப் படையும் அவனுடைய தானையில் உண்டு. இத்தகைய வலிமை வாய்ந்த தானையுடன் சென்று எதிர்த்த பகைவரைத் தாக்கி வெற்றி பெறும் திறமுடையவன். போரிலே பட்டு வீழும் பிணங்கள் பெருகி மலைபோல் குவிகின்றன. இதனால் பகைவர் நாடு குடிவளம் குன்றிக் கெடுகிறது. தீது கடிந்து நன்று புரக்கும் வேந்தற்கு கெட்ட குடியை நலமுறுவித்துப் பேணுதல் கடன். அக்கடமையைச் சிறப்பாகச் செய்தவன் அவன்.

போர் வென்றியில் மட்டுமல்ல; ஆட்சி நலத்திலும் அவனுடைய சிறப்பினைக் கண்டு மகிழ்கிறார் புலவர்.

"கோன்நிலை திரியின் கோள்நிலை திரியும்
கோள்நிலை திரியின் மாரி வறங் கூரும்"

"இயல்புளிக் கோலோச்சும் மன்னவன் நாட்ட
பெயலும் விளையுளுந் தொக்கு"

என்பர் ஆன்றோர்.

ஆட்சி நலம் இல்வழி மழையின்மைக்குக் காரணமாகிய நாளும் கோளும் நிலை திரிதலின் விசும்பும் இடம் சுருங்கித் தடுமாறும் என்பதை உணர்ந்தவர் அவன் முன்னோர். அவர்கள் தெளிவான மாறாத கொள்கையுடையவர்கள். ஆதலால் இவ்வணுச் செறிந்த நிலவுலகத்தை இனிது ஆண்டார்கள், நான்கு திசைகளிலும் தங்கள் அரசாணையாம் திகிரியைச் சுழல விட்டு மேன்மையுடன் ஆண்டார்கள். அவர்கள் ஆட்சியில் மாதம் மும்மாரி பொழிந்து நீர்வளம்

மிக்கிருந்தது. விளை பொருள்கள் மிகுதியாக விளையுமாறு மழை வேண்டுங் காலத்து மிகுதியாகப் பெய்விந்து உலகு யிர்க்கு நன்மை செய்தது. வெயிலது வெம்மையும் உயிர் களை வருத்தாமல் சுடர் சினம் தணிந்து விளங்கியது. உலகிற்கு நல்ல பயனைச் செய்யும் வெள்ளியென்னும் கோள் மழைக்குக் காரணமாகிய ஏனை நாள்கோள்களுடன் சென்று நிற்ப வானம் மழை முகில்கள் நிரம்பப் பரவி நல்ல மழையைப் பெய்வித்து உலகைப் புரந்தது[2]. இத்தகைய சிறப்புக்கெல்லாம் காரணமாக நல்லாட்சி புரிந்த நின் முன்னோர் உன்னைப் போல் தெளிவான மாறாத கொள்கை யுடையராதலின் இவ்வுலகத்தை இனிது ஆண்டார்கள்.

நின் முன்னோரினும் நீ கொள்கையால் உயர்ந்தாய் என்பார் நின்போல் என்றார்.

நின்னைப் போல் அசைவில்லாத மேற்கோளையுடைய ராகையாலே இம்மண் ஞாலத்தினை நிலம் பயம் பொழிதல் முதலாக நால்வேறு நனந்தலை ஓராங்கு நந்த என்பது ஈறாக எண்ணப்பட்ட நின் புகழெல்லாம் உளவாக அசை வின்றி ஆண்டோரானவர்; அவரல்லார் இம்மண் ஞாலத்தின் ஒரோவிடங்களை ஆளுவதல்லது முழுதும் ஆளுதல் கூடாது.

"மலையுறழ் யானை வான்றோய் வெல்கொடி
வரை மிசை யருவியின் வயின் வயினுடங்கக்
கடல் போல்தானைக் கடுங்குரன் முரசம்
காலுறு கடலிற் கடிய வுரற
எறிந்து சிதைந்த வாள்
இலை தெரிந்த வேல்
பாய்ந் தாய்ந்த மா
ஆய்ந்து தெரிந்த புகன் மறவ ரொடு
படு பிணம் பிறங்க நூறிப் பகைவர்
கெடுகுடி பயிற்றிய கொற்ற வேந்தே
நின்போல், அசைவில் கொள்கையராக லினசையாது

ஆண்டோர் மன்றவிம் மண்கெழு ஞாலம்
நிலம் பயம் பொழியச் சுடர் சினந் தணியப்
பயங்கெழு வெள்ளி யாநிய நிற்ப
விசும்பு மெய் யகலப் பெயல் புரவெதிர
நால் வேறு நனந்தலை யோராங்கு நந்த
இலங்கு கதிர்த் திகிரி முத்திசினோரே!''

—பதிற்றுப் பத்து—69

துறை : வஞ்சித்துறைப்பாடாண் பாட்டு
வண்ணம் = ஒழுகுவண்ணமும் சொற்சீர் வண்ணமும்
தூக்கு = செந்தூக்கும் வஞ்சித் தூக்கும்
பெயர் = மண்கெழு ஞாலம்

## உரை :

| | |
|---|---|
| மலையுறழ்யானை வான்— தோய் வெல்கொடி | மலைபோலும் யானையின் மேல் வானளாவ எடுத்த வெற்றிக் கொடியானது; |
| வரைமிசையருவியின் — | மலைமேலிருந்து விழும் அருவி போல; |
| வயின் வயின் நுடங்க — | இடந்தோறும் அசைந்து விளங்க; |
| கடல் போல் தானைக் — கடுங்குரல் முரசம் | கடல் போன்ற தானையின் நடுவே கடிய முழக்கத்தை யுடைய முரசு; |
| கால் உறு கடலின் கடிய — உரவு | காற்றால் மோதப்பட்ட கடல் போலக் கடிதாய் முழங்க; |
| எறிந்து சிதைந்த வாள் — | பகைவரை எறிதலால் சிதைவுற்ற வாள் வீரரும்; |

| | | |
|---|---|---|
| இலை தெரிந்த வேல் | — | இலை போன்ற தலையை யுடைய வலிய வேலேந்திய வீரரும்; |
| பாய்ந்து ஆய்ந்த மா | — | பகைவர் மேல் பாய்தலால் ஓய்வுற்ற குதிரைகளும்; |
| ஆய்ந்து தெரிந்த புகல் மறவரொடு | — | ஆராய்ந்து தெரிந்து கொள்ளப் பட்ட போர் வேட்கையினை யுடைய வீரர்களும் கொண்ட தானையுடன் சென்று; |
| படு பிணம் பிறங்கப் பகைவர் நூறி | — | போரிலே பட்டு வீழும் பிணங் கள் குவிந்து உயரப் பகைவரைக் கொன்றழித்து; |
| கெடுகுடி பயிற்றிய | — | அவர் நாட்டில் கெட்டோருடைய குடிகளை வாழச் செய்த; |
| கொற்ற வேந்தே | — | வெற்றி வேந்தனே; |
| நிலம் பயம் பொழிய | — | நிலம் தன்பால் விளையும் விளை பொருள்களை மிக விளைவிக்க; |
| சுடர் சினம் தணிய | — | வெயிலது வெம்மை வரம்பிகவாது தணிந்து நிலவ; |
| பயம் கெழு வெள்ளி ஆநிய நிற்ப | — | உலகிற்கு நல்ல பயனைச் செய்யும் வெள்ளியென்னும் கோள் மழைக்குக் காரணமாகிய ஏனை நாள்கோள்களுடனே சென்று நிற்ப; |

| | | |
|---|---|---|
| விசும்பு மெய்யலப் பெயல் புரவு எதிர | — | வானம் மழைமுகில்கள் நிரம்பப் பரவி நல்ல மழையைப் பெய்வது காரணமாக இடம் அகன்று விளங்கவே மழை தன் பெயரால் உலகு புரக்கும் செயலுற்று நிற்ப; |
| நால்வேறு நனந்தலை | — | நான்காய் வேறுபட்ட அகன்ற திசையிடமெல்லாம்; |
| ஓராங்கு நந்த இலங்கு கதிர்த் திகிரி முந்திசினோர் | — | ஒன்றுபோல் ஆக்கமெய்த விளங்குகின்ற அரசவாணை யாகிய திகிரியைச் செலுத்திய நின் முன்னோர்; |
| நின்போல் மன்ற அசைவில் கொள்கைய ராதலின் | — | நின்னைப் போல் தெளிவாக மாறாத கொள்கையையுடைய வர்களாயிருந்தமையால்; |
| இம்மண்கெழு ஞாலம் அசையாது ஆண்டோர் | — | இவ்வணுச் செறிந்த நிலவுலகத்தை இனிது ஆண்டார்கள். |

## சான்றெண் விளக்கம்

1. "பெருவரையிழிதரும் நெடு வெள்ளருவ
ஓடையானை யுயர் மிசை யெடுத்த
ஆடு கொடி கடுப்பத் தோன்றும்"

—அகம் : 358

2. அழல் சென்ற மருங்கின் வெள்ளி யோடாது
மழை வேண்டு புலத்து மாரி நிற்ப"

பதிற்—13

"வறிது வடக்கிறைஞ்சிய சீர்சால் வெள்ளி
பயங்கெழு பொழு தோடாநிய நிற்ப".

பதிற்—24

# 10. பறைக்குரல் அருவி

செல்வக் கடுங்கோ வாழியாதனோடு தொடர்பு கொண்ட கபிலர், பாரியோடு நட்பு கொண்டிருந்த காலத்தில், அப்பாரி ஆன்றோர் உரைக்கு அடிபணிந்து அரசவைக்கண் இருந்தபோதும், முடியுடை மூவேந்தர்களின் முற்றுகைக்கு மண்டியிட்டுப் போகாது மார்புயர்த்தி நின்ற போதும், தன் வாயிற்கண் வந்து நிற்பார்க்கெல்லாம் வாரி வாரி வழங்கும் போதும், மாண்புடைய மனைவியோடும் மக்களோடும் இல்லறமாம் நல்லறத்தை இனிதே நடத்தும் போதும், எவ்வாறு அவன் நிழல் போல் இருந்து, அவனை முழுமையாக உணர்ந்து கொண்டாரோ, அதேபோல் செல்வக் கடுங்கோவின் வாழ்க்கையோடும் இரண்டறக் கலந்து நின்று இவனையும் முழுமையாக உணர்ந்து கொண்டார்.

ஒரு பாட்டில், அவன் வெற்றிச் சிறப்பையும், ஒரு பாட்டில் அவன் கொடை வளத்தையும், ஒரு பாட்டில் அவன் பண்பு நலத்தையும், ஒரு பாட்டில் அவன் மனைமாட்சி யையும் பாடற் பொருள்களாகக் கொண்டு பாக்கள் பல பாடியும், கபிலர்க்கு மனநிறைவு ஏற்படாதாகவே அவன் பெருமை அனைத்தையும் ஒரே பாட்டில் ஒரு சேர வைத்துப் பாராட்டத் துடித்தது அவர் உள்ளம்.

நன்கு பயிற்சி பெற்ற நாற்படைகளைப் பெற்றிருப்பது மட்டுமே, ஒரு பேரரசனுக்குப் போதுமானதாகாது. அந்நாற்

படைகளை நெறி அறிந்து செலுத்தும் அறிவுத்திறனும், அவ்வறிவுத் திறன் கொண்டு போர் உடற்றுங்கால் உருக் குலைந்து போகா உடல் திறனும் வாய்க்கப் பெற்றிருத்தல் வேண்டும். செல்வக் கடுங்கோவால் அவை பொருந்தி யிருந்தன.

சேரநாட்டு நாற்படையுள், வேழப் படையே பெரிது: 'வேழம் உடைத்து மலைநாடு', என்ற பாராட்டு அதற்கு உண்டாயது அதனால்தான். தன் வீரர், வீறுநடை போட்டுச் செல்லும் வேழங்கள் மீது அமர்ந்து செல்லும் கண் கொள்ளாக் காட்சியிலேயே மனநிறைவு கொண்டு விடுபவன் அல்லன். போர்க்களிற்றின் மீதமர்ந்து அதன் பிடரிக்கண் பிணித்திருக்கும் கயிற்றினிடையே தன் காலைச் செருகிக் கொண்டு போர்க்கள நிலைக்கு ஏற்ப, இயங்க வேண்டிய நிலைகளைத் தன் முன்காலால் அக்கயிற்றினை இயக்குவதன் மூலம் உணர்த்தி, அக் களிற்றினை நடத்திச் செல்லவும் வல்லன். அக்காட்சியைக் கண்டுகளித்தவர் கபிலர்.

அதுபோலவே, குதிரைமீது அமர்ந்து களம்புகும் நிலையில், தன் கால் முனையால் போர்க் குதிரையின் உடலைத் தழுவலும், தீண்டலும் செய்வதன் மூலம், அப் போர்க் குதிரையைப் பல்வேறு கதிகளில் காற்றெனச் சுழன் றோட்டக் கற்றவன் கடுங்கோ. அது செய்து செய்து அவன் கால் முனை தழும்பேறிக் கிடப்பதைக் கண்ணாரக் கண்டு மகிழ்ந்தவர் கபிலர்.

பகைவர் படை அழிவிற்குத் தன் படைவீரர் ஏந்தி நிற்கும் வேல்களையும், வாள்களையும் மட்டுமே நம்பி இருப்பவன் அல்லன் கடுங்கோ. படைவீரர் வேல், வாள் களினும் தன் கை வேலையும, வாளையுமே பெரிதும் பயன் படுத்துவன். பகைவர் ஏந்த பல போர்க் களங்களில் வெற்றிக்கு அவன் கை வேலும், வாளுமே துணை புரிந்ததைப் பலமுறை நேரில் கண்ணுற்று நெஞ்சு நெகிழ்ந்தவர் கபிலர்.

களிறு ஊர்ந்து செல்வதிலும், குதிரை ஓட்டம் புரிவதிலும் வாட்படை, வேற்படைகளை வீசுவதிலும் ஒருவன் வல்லவன் ஆக வேண்டின் அவன் தோளாற்றல் வாய்ந்தவனாதல் வேண்டும். ஒரு நாற்படையை நடத்திச் செல்லும் ஒரு தானைத் தலைவன், உடல் உரம் வாயா ஒல்லியோன் ஆதல் கூடாது. அந்நாற் படை கண்டு நடுங்கும் உரம் வாய்ந்த திண்ணிய உடல் உடையோன் ஆதல் வேண்டும். செல்வக் கடுங்கோவின் உடல், 'கல்லோடு மோதினும் கலங்கா நல்லுடலாதல் கண்டு நயந்தார் கபிலர்.

தேன் நிறைந்த மலர்களை நாடிச் செல்லும் வண்டுகள் தேனற்ற மலர்கள் பக்கம் செல்வது கிடையாது. தேனின்மை, யின் வண்டினம் மொய்த்துப் பாடும் சிறப்பினை இழந்த கூர்மையான ஊசி போன்ற பனந்தோட்டோடு தேன் மொய்க்கும் தண்ணிய சுனைகளில் மலர்ந்த குவளை மலர் களையும் இடையே வைந்துத் தொடுத்த கண்ணியைச் சூடிய வர்கள் போருடற்றுதலும் அதன்கண் வெற்றி பெறுதலும் தமக்கு நிலையாகக் கொண்டு சிறக்கும் வெற்றி வேந்தர் களுடனே அவன் போர் புரிந்தான். இத்தகைய ஆற்றல் பொருந்திய வேந்தர்களுடன் நாடோறும் செய்துவரும் நல்ல போரில் மிக்க சினத்தையுடைய பகை அரசரது தலைமையை அழித்து வெற்றி உண்டாவதற்குக் காரணமான வெற்றிக் கழலை அணிந்த வீரர்களுக்குத் தலைவனாக இருக்கும் பெருமையுடையவன் அவன்.

செல்வக் கடுங்கோ வாழியாதலின் வெற்றிச் சிறப்பையும் வீரத்தையும் கண்டு போற்றிய புலவர் அவனிடத்து நிலை பெற்ற நறகுணங்களை உணர்ந்து வியந்து பாராட்டுகிறார். பொய்யாமை அறம் பல்வற்றுள்ளும் சிறந்தமையுணர்ந்து அதனை விளையாட்டிலும் நெகிழாது ஓம்பும் நற்பண்பினை வியக்கிறார். விளையாட்டாகக் கூறும் பொய் யார்க்கும் என்றும் எத்துணையும் தீமை பயவாயினும் கொள்ளற் பால தன்று என உணர்ந்து தள்ளியொழுகும் வாய்மை யுடைய

வன் அவன். பகைவர் எஞ்ஞான்றும் புறத்தே குற்றங்கூறி இகழ்வது இயல்பாதலின் அதனைக் கேட்டு மனவமைதி குறைவதிலும், கேளாது அவரை வேரோடு தொலைத்தற் குரிய காலமும் கருவியும் இடமும் நோக்கியிருத்தல் அறிவுடை வேந்தற்கு ஆண்மையும் புகழும் பயக்கும் என்பதை உணர்ந் தவன்.[3]

நற்பண்புகளுக்கு நிலைக்களனாக வாழ்ந்த செல்வக் கடுங்கோவின் அரசமாதேவியும் பெண்மைக் குணங்களில் சிறந்து விளங்குபவள் என்பதை அறிந்து அவள் குணங்களை யும் போற்றுகின்றார். பெண்மை, பெண்கட்குரிய அமைதித் தன்மை ஆயினும், ஈண்டுச் சிறப்புடைய நாணத்தின்மேல் நின்றது. நாணமே உருவாய்க் கொண்டு விளங்கும் நுட் பத்தை "பெண்மை சான்று" என்றார். தான் தன் வாழ்க்கைக்குத் துணையாகக் கொண்ட காதலற்கு நலந்தரு வனவன்றிப் பிறவற்றின்பால் மடம் பட நிற்றல் பற்றி மடம் எனப்படுவதாயிற்று. தன் மென்மைத் தன்மையைப் பெற் றோராலும் சான்றோராலும் நூன்முகத்தாலும் இயற்கை அறிவாலும் அறிந்து எக்காலத்தும் தன்னைப் பாதுகாத் தொழுகும் அறிவுடைமையாம் கற்புநெறியில் சிறந்தவள். நினைவு, சொல், செயல் என்ற மூன்றும் கற்பு நிற்கும் சீர்மையுடையவள். உயிர்க்கிறுதி வந்தவிடத்தும் அறத்தில் திரியாக் கோட்பாட்டை உடையராய் வேந்தற்கு மெய்ந் நிழல் போலப் பின் சென்று உறுதியாவன ஆற்றும் உள்ள முடையராகிய சுற்றத்தார் நீங்காது அவனைச் சூழ்ந்திருக் கும் சிறப்புடையவன்.[4] போர்க்களத்தே பகைவரை வென்றிச் சிறப்பெய்தும் வெல் போரண்ணாதலின் வெற்றி யெய்துந் தோறும் களவேள்வி செய்து கடவுளரை மகிழ்விக்கின்றான்.

அறப்போர் புரிந்து உயிர் துறந்து வீரருலகையும் துறக்கம் புகுந்தவரை "உயர்நிலை யுலகத்தையர்' என்பர் அவருடைய ஒழுகலாற்றையும் போர்த் திறனையும் புலவர் பாட, பாணர் இசைக்க, கூத்தர் கூத்தியற்றக் கண்டும்

கேட்கும் சிறப்பித்தலால் அவர் மகிழுமாறு செய்கிறான். தாம் பிறந்த குடியின் நலத்தைப் பேணும் நண்பமைந்த சான்றோர்க்கு அடங்கியொழுகும் நல்லாற்றினை உடையவன். இளமையிலே மானத்தின் நீங்கா ஆண்மை நற்குடிப் பிறந்தோர்க்குக் கருவிலே வாய்த்த திருவாகும் வணங்காமைக் கேதுவாகிய வணங்கா ஆண்மையுடையவன் இளந்துணையாகிய மக்களைக் கொண்டு முதியர் பேணும் நல்லறத்தை ஆற்றினான்.

முதியோர் முதுமையெய்துமுன் நாடு காத்தற்கு 'அறிவு வேண்டிய வழி அறிவு உதவியும் வாள் வேண்டுழி வாளுதவியும் துணைபுரிந்தோர் அவரை முதுமைக்கண் பேணுதல் நன்றி அறிதலாகிய பேரறம். இவ்வறத்தைத் தவறாது செய்பவன்.

மேற்கு மலைத் தொடரிலுள்ள ஒரு மலை அயிரை மலை. அம்மலையிலிருந்தும் இறங்கும் அருவி இழுமெனும் ஓசையும் பறை போன்ற முழக்குமுடையது. கற்பக முதலிய செல்வத்தையுடைய தேவர் வாழும் உலகமும் கேட்கும்படி அவ்வருவிகள் அங்கே இறங்குகின்றன. உயர்ந்த சிகரங்கள் பல நிறைந்தது அம்மலை. அருவி துவன்றும் அயிரை நெடுவரை தொலையாது நிலை பெறுவது போல சேரமான் வாழும் நாட்களும் அழிவில்லாததாக இருக்கட்டும் என்று அவனை வாழ்த்துகிறார்.

பறை போன்ற முழக்கமுடைய அருவிகள் இறங்கும் நெடிய அயிரை மலைபோல நிலை பெற்று வாழ்க என்று வாழ்த்தியமையால் இது பறைக்குரல் அருவியாயிற்று.

"களிறு கடைஇய தாள்
மாவுடற்றிய வடிம்பு
சமந் ததைந்த வேல்
கல்லலைத்த தோள்

வில்லலைத்த நல்வலத்து
வண்டிசை கடாவாத் தண் பனம் போந்தை
குவிமுகிழூசி வெண்டோடு கொண்டு
தீஞ்சுனை நீர்மலர்மலைந்து மதஞ்செருக்கி
உடைநிலை நல்லமர் கடந்து மறங்கெடுத்துக்
கடுஞ்சின வேந்தர் செம்மல் தொலைத்த
வலம்படு வான்கழல் வயவர் பெரும
நகையினும் பொய்யா வாய்மைப் பகைவர்
புறஞ் சொற் கேளாப் புரைதீ ரொண்மைப்
பெண்மை சான்று பெருமட நிலைஇக்
கற்பினை கொண்ட கமழுஞ் சுடர்நுதற்
புரையோள் கணவ பூண்கிளர் மார்ப
தொலையாக் கொள்கைச் சுற்றஞ் சுற்ற
வேள்வியிற் கடவுளருத்தினை கேள்வி
உயர்நிலை யுலகத்தையரின் புறுத்தினை
வணங்கிய சாயல் வணங்கா வாண்மை
இளத்துணைப் புதல்வரின் முதியர்ப் பேணித்
தொல் கடனிறுத்த வெல் போரண்ணல்
மாடோருறையு முலகமுங் கேட்ப
இழுமென விழிதரும் பறைக் குரலருவி
முழுமுதன் மிசைய கோடுதொறுந் துவன்றும்
அயிரை நெடுவரை போலத்
தொலையாதாக நீ வாழு நாளே''

— பதிற்றுப் பத்து—70

துறை = செந்துறைப் பாடாண்பாட்டு
வண்ணம் = ஒழுகு வண்ணம்
தூக்கு = செந்தூக்கும் வஞ்சித் தூக்கும்
பெயர் = பறைக் குரல் அருவி.

உரை :

களிறு கடை இயதாள் — களிறுகளை நெறியறிந்து செலுத்திப் பயின்ற தாளினையும்;

மாவுடற்றிய வடிம்பு — குதிரைகளைப் பொருதற்குச் செலுத்திப் பயின்ற தாள் விளிம்பினையும்;

சமம் ததைந்த வேல் — பகைவர் செய்யும் போரைக் கெடுத்தவேற்படையினையும்;

கல் அலைத்த தோள் — கல்லொடு பொருது பயின்ற தோளினையும்;

வில் அலைத்த நல்வலத்து — வில்லேந்திப் பொருது பகைவரை வருத்திய நல்ல வெற்றியினையுமுடைய வயவர்;

வண்டிசை கடவா — வண்டினம் மொய்த்துப் பாடுதல் இல்லாத;

தண்பனம் போந்தை — தண்ணிய பனையினது;

குவிமுகிழ் ஊசி வெண் தோடு கொண்டு — குவிந்த அரும்பு போன்ற கூர்மையையுடைய வெள்ளிய பனங்குருத்தோடு;

தீஞ்சுனை நீர்மலர் மிலைந்து — இனிய சுனையிடத்து மலர்ந்த குவளைப் பூ விரவிய கண்ணியைச் சூடி;

மதம் செருக்கி — போர்க்கு வேண்டும் மதம் மிகுந்து;

கடுஞ்சின வேந்தர் — மிக்க சினத்தையுடைய பகை மன்னர்

| | |
|---|---|
| உடைநிலை நல் அமர் கடந்து | — என்றும் தமக்கே யுடைமையாகப் பெற்றி நிலைமையினையுடைய நல்ல போர்களை வஞ்சியாது பொருதழித்து; |
| மறம் கெடுத்து | — அவருடைய போர் வன்மையைச் சிதைத்து; |
| செம்மல் தொலைத்த | — இறுதியாக அவரது தலைமையினையும் அறக்கெடுத்த; |
| வலம்படு வான்கழல் வயவர் பெரும | — வெற்றி பொருந்திய பெரிய கழலணிந்த வீரர்க்குத் தலைவனே: |
| நகையினும் பொய்யா வாய்மை | — விளையாட்டானும் பொய் கூறுதலையில்லாத வாய்மையினையும்; |
| பகைவர் புறஞ்சொற் கேளா | — பகைவர் தம் புறத்தே இகழ்ந்து கூறும் சொற்களை ஏறட்டுக் கொள்ளாத; |
| புரைதீர் ஒண்மை | — குற்றம் நீங்கிய அறிவினையும்; |
| பூண்கிளர் மார்ப | — பூணாரமணிந்த மார்பினையும் உடையோய்; |
| பெண்மை சான்று | — நாணம் நிறைந்து; |
| பெருமடம் நிலை இ | — பெரிய மடமென்னும் குணம் நிலைபெற்று: |
| கற்பு இறை கொண்ட | — கற்பு நெறிக் கண்ணே தங்கின; |
| கமழும் சுடர்நுதல் | — மணம் கமழும் ஒளி பொருந்திய நெற்றியினையுடைய; |

| | |
|---|---|
| புரையோள் கணவ — | உயர்ந்தவட்குக் கணவனே |
| தொலையாக் கொள்கை — | குன்றாத கோட்பாட்டினை |
| சுற்றம் சுற்ற — | யுடைய சான்றோராகிய சுற்றத்தார் நீங்காது சூழ; |
| வேள்வியின் கடவுள் அருத்தினை — | போர்க்களத்தே பகைவரை வென்று செய்யும் களவேள்வி யால் வெற்றிக் கடவுட்கும் பலி யூட்டி அதனை மகிழ்வித்தாய்; |
| உயர்நிலையுலகத்து ஐயர் — | வீரருலகத்து வாழும் சான் றோரை; |
| கேள்வி இன்புறுத்தினை — | அவர் செய்த வீரச்செயல் களைப் புலவர் பாட இருந்து கேட்குமாற்றால் மகிழ்வித் தாய்; |
| வணங்கிய சாயல் — | நட்பமைந்த சான்றோர்க்குப் பணிந்தொழுகும் மென்மை யினையும்; |
| வணங்கா ஆண்மை — | பகைவர்க்கு வணங்காத ஆண்மையினையுமுடைய; |
| இளந்துணைப் புதல்வரின் — | இந்த துணையாகிய மக்களை கொண்டு, |
| முதியர்ப்பேணி — | முதியராகிய பெரியோர்க்குரிய தொண்டினைச் செய்வித்து; |
| தொல் கடன் இறுத்த — | தொன்று தொட்ட தம் கடமையினை ஆற்றிய; |
| வெல்போர் அண்ணல் — | வெல்லுகின்ற போரையுடைய அண்ணலே; |

| | | |
|---|---|---|
| மாடோர் உறையும் உலகமும் கேட்ப | — | தேவர்கள் வாழும் பொன்னுல கத்தும் கேட்கும்படி; |
| இழும் என இழிதரும் பறைக் குரலருவி | — | இழுமென்னு மனுகரணமுண் டாக வீழும் பறை போன்ற முழக்கத்தையுடைய அருவி கள்; |
| முழுமுதல் மிசைய கோடுதொறும் துவன் றும் | — | மிகப் பெரியவாகிய உச்சி யினையுடைய முடிகள் தோறும் நிறைந்து விளங்கும்; |
| அயிரை நெடுவரை | — | அயிரை என்னும் நெடிய மலை யைப் போல; |
| நீ வாழும் நாள் தொலை யாதாக | — | நீ வாழும் வாழ்நாள் குறை யாது பெருகுமாக. |

## சான்றெண் விளக்கம்

1. வட்கர் போகிய வளநெம் போந்தை
உச்சிக் கொண்ட வூரி வெண்டோடு
— புறம் : 100.

2. வெண் தோடடைசந்த வொண்பூங் குவளையர்
— பதிற் : 58.

3, நல்ல போலவும் நயவ போலவும்
தொல்லோர் சென்ற நெறிய போலவும்
காதனெஞ்சினும் மிடைபுகற் கலமரும்
ஏதின் மாக்கள் பொறு மொசி கொள்ளாது
— புறம் : 58

4. பற்றற்ற கண்ணும் பழமை பாராட்டுதல்
சுற்றத்தார் கண்ணேயுள திருக்குறள் : 521
அரசுபடவமருழக்கி முரசுகொண்டு
களம் வேட்ட
அடுதிறலுயர் புகழ் வேந்தே'' மதுரைக்காஞ்சி : 128.

# பதிற்றுப்பத்து—ஏழாம்பத்து - 61--70

பலாஅம் பழுத்த பசும்புண் ணரியல்
வாடை தூக்கு நாடுகெழு பெருவிறல்
ஓவத் தன்ன வினைபுனை நல்லிற்
பாவை யன்ன நல்லோள் கணவன்
பொன்னி னன்ன பூவிற் சிறியிலைப்
புன்கா லுன்னத்துப் பகைவ னெங்கோ
புலர்ந்த சாந்திற் புலரா வீகை
மலர்ந்த மார்பின் மாவண் பாரி
முழவுமண் புலர விரவல ரினைய
வாராச் சேட்புலம் படர்ந்தோ னளிக்கென

இரக்கு வாரே னெஞ்சிக் கூறேன்
ஈத்த திரங்கா னீத்தொறு மகிழான்
ஈத்தொறு மாவள் ளியனென நுவலுநின்
நல்லிசை தரவந் திசினே யொள்வாள்
உரவுக் களிற்றுப் புலாஅம் பாசறை

நிலவி னன்ன வெள்வேல் பாடினி
முழவிற் போக்கிய வெண்கை
விழவி னன்னநின் கலிமகி ழானே. 61

*துறை—காட்சி வாழ்த்து. வண்ணம்—ஒழுகுவண்ணம், தூக்கு செந்தூக்கு, பெயர்—புலாஅம்பாசறை*

இழையணிந் தெழுதரும் பல்களிற்றுத் தொழுதி யொடு
மழையென மருளு மாயிரும் பல்தோல்
எஃகுபடை யறுத்த கொய்சுவற் புரவியொடு
மைந்துடை யாரெயில் புடைபட வளைஇ
வந்துபுறத் திறுக்கும் பசும்பிசி ரொள்ளழல்

ஞாயிறு பல்கிய மாயமொடு சுடர் திகழ்பு
ஒல்லா மயலொடு பாடிமிழ் புழிதரு
மடங்கல் வண்ணங் கொண்ட கடுந்திறற்
றுப்புத்துறை போகிய கொற்ற வேந்தே
புனல்பொரு கிடங்கின் வரைபோ லிஞ்சி

அணங்குடைத் தடக்கையர் தோட்டி செப்பிப்
பணிந்திறை தருபநின் பகைவ ராயிற்
புல்லுடை வியன்புலம் பல்லா பரப்பி
வளனுடைச் செறுவின் விளைந்தவை யுதிர்ந்த
களனறு குப்பை காஞ்சிச் சேர்த்தி

அரியலார்கை வன்கை வினைநர்
அருவி யாம்பல் மலைந்த சென்னியர்
ஆடுசிறை வரிவண் டோப்பும்
பாடல் சான்றவவ ரகன்றலை நாடே

*துறை— செந்துறைப்பாடாண் பாட்டு வண்ணமும் தூக்கும் அது, பெயர்—வரைபோலிஞ்சி.*

பார்ப்பார்க் கல்லது பணிபறி யலையே
பணியா வுள்ளமொ டணிவரக் கெழீஇ
நட்டோர்க் கல்லது கண்ணஞ் சலையே
வணங்குசிலை பொருதநின் மணங்கம ழகலம்
மகளிர்க் கல்லது மலர்ப்பறி யலையே

நிலந்திறம் பெயருங் காலை யாயினுங்
கிளந்த சொல்நீ பொய்ப்பறி யலையே
சிறியிலை யுழிஞைத் தெரியல் சூடிக்
கொண்டி மிசைபடத் தண்டமிழ் செறித்துக்
குன்றுநிலை தளர்க்கு முருமிற் சீறி

ஒருமுற் றிருவ ரோட்டிய வொள்வாட்
செருமிகு தானை வெல்போ ரோயே
ஆடுபெற் றழிந்த மள்ளர் மாறி
நீகண் டனையே'' மென்றனர் நீயும்
நுங்நுகங் கொண்டினும் வென்றோ யதனாற்

செல்வக் கோவே சேரலர் மருக
கால்திரை யெடுத்த முழங்குகுரல் வேலி
நனந்தலை யுலகஞ் செய்தநன் றுண்டெனின்
அடையடுப் பறியா வருவியாம்பல்
ஆயிர வெள்ள வூழி
வாழி யாத வாழிய பலவே. 63

*இதுவும் அது பெயர்—அருவியாம்பல்*

வலம்படு முரசின் வாய்வாட் கொற்றத்துப்
பொலம்பூண் வேந்தர் பலர்தில் லம்ம
அறங்கரைந்து வயங்கிய நாவிற் பிறங்கிய
உரைசால் வேள்வி முடித்த கேள்வி
அந்தண ரருங்கல மேற்ப நீர்பட்டு

இருஞ்சே றாடிய மணல்மலி முற்றத்துக்
களிறுநிலை முனைஇய தாரருந் தகைப்பிற்
புறஞ்சிறை வயிரியர்க் காணின் வல்லே
எஃகுபடை யறுத்த கொய்சுவற் புரவி
அலங்கும் பாண்டி லிழையணிந் தீமென

ஆனாக் கொள்கையை யாதலி னவ்வயின்
மாயிரு விசும்பிற் பன்மீ னொளிகெட
ஞாயிறு தோன்றி யாங்கு மாற்றார்
உறுமுரண் சிதைத்தநின் னோன்றாள் வாழ்த்திக்
காண்கு வந்திசிற் கழல்தொடி யண்ணல்

மைபடு மலர்க்கழி மலர்ந்த நெய்தல்
இதழ்வனப் புற்ற தோற்றமொ டுயர்ந்த
மழையினும் பெரும்பயம் பொழிதி யதனாற்
பசியுடை யொக்கலை யொரீஇய
இசைமேந் தோன்றல்நின் பாசறை யானே. 64

*துறை—காட்சி வாழ்த்து. வண்ணமும் தூக்கும் அது. பெயர் உரைசால்வேள்வி.*

எறிபிணை யிடறிய செம்மறுக் குளம்பிற்
பரியுடை நன்மா விரியுளை சூட்டி
மலைத்த தெவ்வர் மறந்தபக் கடந்த
காஞ்சி சான்ற வயவர் பெரும
வில்லோர் மெய்ம்மறை சேர்ந்தோர் செல்வ

பூணணிந் தெழிலிய வணைந்துவர லிளமுலை
மாண்வரி யல்குல் மலர்ந்த நோக்கின்
வேய்புரை பெழிலிய விளங்கிறைப் பணைத்தோட்
காமர் கடவுளு மாளுங் கற்பிற்
சேணாறு நறுநுதற் சேயிழை கணவ

பாணர் புரவல பரிசிலர் வெறுக்கை
பூணணிந்து வியங்கிய புகழ்சான் மார்பநின்
நாண்மகி ழிருக்கை யினிதுகண் டிகுமே
தீந்தொடை நரம்பின் பாலை வல்லோன்
பையு ளுறுப்பிற் பண்ணுப் பெயர்த்தாங்குச்

சேறுசெய் மாரியி னளிக்குநின்
சாறுபடு திருவி னனைமகிழானே

*துறை—பரிசிற்றுறைப்பாடாண்பாட்டு. வண்ணமும் தூக்கும் அது. பெயர்—நாண்மகிழிருக்கை.*

வாங்கிரு மருப்பிற் றீந்தொடைபழுனிய
இடனுடைப் பேரியாழ் பாலை பண்ணிப்
படர்ந்தனை செல்லு முதுவா யிரவல
இடியிசை முரசமொ டொன்றுமொழிந் தொன்னார்
வேலுடைக் குழூஉச்சமந் ததைய நூறிக்

கொன்றுபுறம் பெற்ற பிணம்பயி லழுவத்துத்
தொன்றுதிறை தந்த களிற்றொடு நெல்லின்
அம்பண வளவை விரிந்துறை போகிப்
ஆர்பத நல்கு மென்ப கறுத்தோர்
உறுமுரண் தாங்கிய தாரருந் தகைப்பின்

நாண்பிழைக் குழூஉச்சிமை கடுக்குந் தோன்றற்
றோன்மிசைத் தெழுதரும் விரிந்திலங் கெஃகிற்
றார்புரிந் தன்ன வாளுடை விழவிற்
போர்படு மள்ளர் போந்தொடு தொடுத்த
கடவுள் வாகைத் துய்வீ யேய்ப்பப்

பூத்த முல்லைப் புதல்சூழ் பறவை
கடத்திடைப் பிடவின் தொடைக்குலைச் சேக்கும்
வான்பளிங்கு விரைஇய செம்பரன் முரம்பின்
இலங்குகதிர்த் திருமணி பெறூஉம்
அகன்கண் வைப்பி னாடுகிழ வோனே. 66

*துறை—செந்துறைப்பாடாண்பாட்டு வண்ணமும் தூக்கும் அது. பெயர்—புதல்சூழ்பறவை.*

கொடுமணம் பட்ட நெடுமொழி யொக்கலொடு
பந்தர்ப் பெயரிய பேரிசை மூதூர்க்
கடனறி மரபிற் கைவல் பாண
தெண்கடல் முத்தமொடு நன்கலம் பெறுகுவை
கொல்படை தெரிய வெல்கொடி நுடங்க
வயங்குகதிர் வயிரொடு வலம்புரி யார்ப்பப்
பல்களிற் றினநிரை புலம்பெயர்ந் தியல்வர
அமர்க்க ணமைந்த அவிர்நிணப் பரப்பிற்
குழூஉச் சிறை யெருவை குருதி யாரத்
தலைதுமிந் தெஞ்சிய வாண்மலி யூபமொடு
உருவில் பேய்மகள் கவலை கவற்ற
நாடுட னடுங்கப் பலசெருக் கொன்று
நாறிணர்க் கொன்றை வெண்போழ் கண்ணியர்
வாண்முகம் பொறித்த மாண்வரி யாக்கையர்
நெறிபடு மருப்பி னிருங்கண் மூரியொடு
வளைதலை மாத்த தாழ்கரும் பாசவர்
எஃகா டூனங் கடுப்ப மெய்சிதைந்து
சாந்தெழில் மறைத்த சான்றோர் பெருமகன்
மலர்ந்த காந்தள் மாறா தூதிய
கடும்பறைத் தும்பி சூர்நசைத் தாஅய்ப்
பறைபண் ணழியும் பாடுசால் நெடுவரைக்
கல்லுயர் நேரிப் பொருநன்
செல்வக் கோமாற் பாடினை செலினே. 67

*துறை-பாணாற்றுப்படை. வண்ணமும் தூக்கும் அது. பெயர் வெண்போழ்க்கண்ணி.*

கால்கடிப் பாகக் கடலொலித் தாங்கு
வேறுபுலத் திறுத்த கட்டூர் நாப்பண்
கடுஞ்சிலை கடவுந் தழங்குகுரன் முரசம்
அகலிரு விசும்பி னாகத் ததிர
வெவ்வரி நிலைஇய வெயிலெறிந் தல்லது

உண்ணா தடுக்கிய பொழுதுபல கழிய
நெஞ்சுபுக லூக்கத்தர் மெய்தயங் குயக்கத்து
இன்னா ருறையுட் டாம்பெறி னல்லது
வேந்தூர் யானை வெண்கோடு கொண்டு
கட்கொடி நுடங்கு மாவணம் புக்குடன்

அருங்கள் நொடைமை தீர்ந்தபின் மகிழ்சிறந்து
நாம மறியா ஏம வாழ்க்கை
வடபுல வாழ்நரிற் பெரிதமர்ந் தல்கலும்
இன்னகை மேய பல்லுறை பெறுபகொல்
பாய லின்மையிற் பாசிழை நெகிழ

நெடும ணிஞ்சி நீணகர் வரைப்பின்
ஓவுறழ் நெடுஞ்சுவர் நாள்பல வெழுதிச்
செவ்விரல் சிவந்த வவ்வரிக் குடைச்சூல்
அணங்கெழி லரிவையர்ப் பிணிக்கும்
மணங்கமழ் மார்பநின் தாள்நிழ லோரே. 68

*துறை-செந்துறைப்பாடாண்பாட்டு, வண்ணமும் தூக்கும் அது. பெயர்-ஏமவாழ்க்கை.*

மலையுறழ் யானை வான்தோய் வெல்கொடி
வரைமிசை யருவியின் வயின்வழி னுடங்கக்
கடல்போல் தானைக் கடுங்குரல் முரசங்
காலுறு கடலிற் கடிய வுரற
எறிந்துசிதைந்த வாள்

இலைதெரிந்த வேல்
பாய்ந்தாய்ந்த மா
வாய்ந்து தெரிந்த புகல்மறவரொடு
படுபிணம் பிறங்க நூறிப் பகைவர்
கெடுகுடி பயிற்றிய கொற்ற வேந்தே

நின்போல், அசைவில் கொள்கைய ராகலி னசையாது
ஆண்டோர் மன்றவிம் மண்கெழு ஞாலம்
நிலம்பயம் பொழியச் சுடர்சினந் தணியப்
பயங்கெழு வெள்ளி யாநியம் நிற்ப
விசும்புமெய் யகலப் பெயல்புர வெதிர

நால்வேறு நனந்தலை யோராங்கு நந்த
இலங்குகதிர்த் திகிரிநின் முந்திசினோரே.

*துறை-வஞ்சித்துறைப் பாடாண்பாட்டு. வண்ணம்-ஒழுகு வண்ணமும் சொற்சீர்வண்ணமும். தூக்கு-செந்தூக்கும் வஞ்சித் தூக்கும். பெயர்-மண்கெழுஞாலம்.*

களிறுகடை இய தாள்
மாவுடற்றிய வடிம்பு
சமந்ததைந்த வேல்
கல்லலைத்த தோள்
வில்லலைத்த நல்வலத்து

வண்டிசை கடாவாத் தண்பனம் போந்தைக்
குவிமுகி ழூசி வெண்டோடு கொண்டு
தீஞ்சுனை நீர்மலர் மலைந்து மதஞ்செருக்கி
உடைநிலை நல்லமர் கடந்து மறங்கெடுத்துக்
கடுஞ்சின வேந்தர் செம்மல் தொலைத்த

வலம்படு வான்கழல் வயவர் பெரும
நகையினும் பொய்யா வாய்மைப் பகைவர்
புறஞ்சொற் கேளாப் புரைதீ ரொண்மைப்
பெண்மை சான்று பெருமடம் நிலைஇக்
கற்பிறை கொண்ட கமழுஞ் சுடர்நுதற்

புரையோள் கணவ பூண்கிளர் மார்ப
தொலையாக் கொள்கைச் சுற்றஞ் சுற்ற
வேள்வியிற் கடவு ளருத்தினை கேள்வி
உயர்நிலை யுலகத் தையரின் புறுத்தினை
வணங்கிய சாயல்வணங்கா வாண்மை

இளந்துணைப் புதல்வரின் முதியர்ப் பேணித்
தொல்கட னிறுத்த வெல்போ ரண்ணல்
மாடோ ருறையு முலகமுங் கேட்ப
இழுமென விழிதரும் பறைக்குர லருவி
முழுமுதல் மிசைய கோடுதொறுந் துவன்றும்

அயிரை நெடுவரை போலத்
தொலையா தாகநீ வாழும் நாளே.

*துறை-செந்துறைப்பாடாண்பாட்டு. வண்ணம்-ஒழுகு வண்ணம். தூக்கு-செந்தூக்கும் வஞ்சித்தூக்கும். பெயர்-பறைக்குரலருவி.*

## பதிகம்

மடியா வுள்ளமொடு மாற்றோர்ப் பிணித்த
நெடுநுண் கேள்வி அந்துவற் கொருதந்தை
ஈன்ற மகள் பொறையன் பெருந்தேவி யீன்றமகன்
நாடுபதி படுத்து நண்ணா ரோட்டி
வெருவரு தானை கொடுசெருப் பலகடந்து

ஏத்தல் சான்ற விடனுடை வேள்வி
ஆக்கிய பொழுதி னறத்துறை போகி
மாய வண்ணனை மனனுறப் பெற்றவற்கு
ஓத்திர நெல்லி னொகத்தூ ரீத்துப்
புரோசு மயக்கி

மல்ல லுள்ளமொடு மாசற விளங்கிய
செல்வக்கடுங்கோ வாழியாதனைக்
கபிலர் பாடினார் பத்துப் பாட்டு.

*அவைதாம்: புலாஅம்பாசறை, வரைபோலிஞ்சி, அருவியாம்பல், உரைசால்வேள்வி, நாண்மகிழிருக்கை, புதல் சூழ்பறவை, வெண்போழ்க்கண்ணி, ஏமவாழ்க்கை, மண் கெழுஞாலம், பறைக்குரலருவி இவை பாட்டின்பதிகம்.*

*பாடிப்பெற்ற பரிசில்: சிறுபுறமென நூறாயிரங் காணங் கொடுத்து நன்றாவென்னும் குன்றேறி நின்று தன் கண்ணிற்கண்ட நாடெல்லாம் காட்டிக் கொடுத்தான் அக்கோ.*

*செல்வக்கடுங்கோ வாழியாதன் இருபத்தையாண்டு வீற்றிருந்தான்.*



இருபதாம் நூற்றாண்டுத் தமிழகத்தின் வரலாற்றில் தனக்கென ஒரு சிறப்பிடத்தைப் பெறத்தக்க வகையில் நல்ல தமிழ் அறிஞராக, வரலாற்றுத் திறனாய்வாளராக, செந்தமிழ்ப் பேச்சாளராக, இலக்கியப் படைப்பாளராக, பாதை மாறாத பகுத்தறிவுவாதியாக, அப்பழுக்கற்ற அரசியல் தலைவராக, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைத் தலைவராக, எனப் பல்திறன் படைத்த நற்றமிழ்ப் புலவராக விளங்கியவர்,

புலவர். கா. கோவிந்தனார் அவர்கள்.

''தமிழுக்கும், தமிழ்ப் புலவர்கட்கும், தமிழ் நாட்டுக்கும் தொண்டாற்றத் தன்னையே அர்ப்பணித்தவர்'' என்று பேரறிஞர் அண்ணா அவர்களால் பாராட்டப் பெற்று, திருவண்ணாமலை குன்றக்குடி ஆதினத்தாரின் 'புலவரேறு' பட்டம், தமிழக அரசின் 'திரு. வி. க. விருது', மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தின் 'தமிழ்ப்பேரவைச் செம்மல்' பட்டம் போன்ற சிறப்புகளையும் பெற்ற புலவர் அவர்களின் தமிழ்ப்பணி பொன்விழாக் கண்ட பெருமையினையுடையது.

ISBN—81-85703-16-7